செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு ௨௲௨. ஆனி	பகுதி
௬௬	ஜூன்—1971	௪

மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளும் மெல்லொலி வீழ்ச்சியும்

இரா. கோதண்டராமன், எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ. (மொழியியல்)
மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தமிழில் காணப்படும் செய்து வாய்பாட்டு வினைகளை மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகள் எனவும், வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகள் எனவும், இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். காய்ந்து, சேர்ந்து, வென்று, வாழ்ந்து, ஆண்டு என மென்றொடர்க்குற்றுகரத்தினை ஈறாகக்கொண்ட வினைகள் மென்றொடர்ச்செய்து வாய்பாட்டு வினைகளின்பாற்

படும். 1 காய்த்து, சேர்த்து, விற்று, அவிழ்த்து, கேட்டு என வன்றொடர்க்குற்றுகரத்தினை ஈறாகக்கொண்ட வினைகள் வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின்பாற்படும். இவ் இரு பிரிவிலும் சேராமல் தனித்து நிற்கும் சில செய்து வாய்பாட்டு[1] வினைகளும் தமிழில் உண்டு. எண்ணிக்கையில் மிகச் சிலவாகிய இவ்வினைகள் செய், பெய், கொய், நெய், எய், வை(—*வய்), உழு, தொழு, அழு, பொரு ஆகிய பத்து வினைகளின் அடியாகத் தோன்றியவையாகும். மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளும், வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளும் எண்ணிக்கையில் மிகுந்து காணப்படுவதைக் கருதும்போது, மேற்குறித்த பத்து வினைகளின் அடியாகப் பிறந்த செய்து வாய்பாட்டு வினைகளும் தொடக்கத்தில் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளாகவோ அல்லது வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளாகவோ நடைபெற்றிருக்கவேண்டும் என்று கொள்ளத் தோன்றுகிறது. இது உண்மையாயின், தொடக்கத்தில் அவை எப்பிரிவினைச் சார்ந்தனவாக இருந்திருக்கக்கூடும்? இதனைச் சுருக்கமாக ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் முன்னும், வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் முன்னும் நிகழும் வல்லொலிகள் முறையே இயல்பாகியும், இரட்டித்தும் நடைபெறுகின்றன.

---

1 வினைத்திரிபுகளின் (Verbal Conjugations) அடிப்படையில் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளை மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளில் உள்ள மெல்லொற்றுக் கெடுதல் ஒரு வகை. எ-டு. வாழ்ந்து. வாழ, வாழல், வாழ்தல், வாழ்கின்று—, வாழ்வ—. வாழும். மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளில் உள்ள மெல்லொற்று வல்லொற்றாகத் திரிதல் இன்னொரு வகை. எ-டு. திறந்து. திறக்க, திறத்தல், திறக்கின்று—, திறப்ப்—, திறக்கும். முதல் வகை மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளை மையமாகக் கொண்டு இக்கட்டுரை வரையப்படுகிறது.

இயல்பு	மிகல்
காய்ந்து கிடந்தது.	காய்த்துத் தொங்கியது
சேர்ந்து பேசினர்	சேர்த்துக் கட்டினர்
கொன்று குவித்தனர்	விற்றுத் தீர்த்தனர்
வாழ்ந்து காட்டினர்	அவிழ்த்துக் கொட்டினர்
ஆண்டு காட்டினர்	மீட்டுக் கொடுத்தனர்

மேல் எடுத்துக்காட்டுகளில் வருமொழி முதலாகிய வல்லொலிகள் இயல்பாகி நிற்பதற்குக் காரணம் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளில் உள்ள மெல்லொலியே யாகும். இதேபோல் வருமொழி முதலாகிய வல்லொலிகள் மிகுந்து நிற்பதற்கு, வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளில் உள்ள வல்லொலியே காரணமாய் அமைகின்றது. மென்றொடர்ச்செய்து வாய்பாட்டு வினைகளின் முன் நிகழும் வல்லொலிகள் எங்ஙனம் இயல்பாகின்றனவோ அங்ஙனமே குறிப்பிட்ட பத்துவினைகளின் அடியாகத் தோன்றிய செய்து வாய்பாட்டு வினைகளின் முன்னரும் இயல்பாகி நிற்கின்றன.

செய்து காட்டினன்
பெய்து தணிந்தது
கொய்து தொடுத்தான்
நெய்து கொடுத்தான்
எய்து கொன்றான்
வைது தீர்த்தான்
உழுது பார்த்தான்
தொழுது புகழ்ந்தான்
அழுது புரண்டான்
பொருது சோர்ந்தான்

செய், பெய், கொய் முதலிய பத்து வினைகளின் அடியாகப் பிறந்த செய்து வாய்பாட்டு வினைகளுக்குத் தம்முன் நிகழும் வல்லொலிகளை மிகுவிக்கும் ஆற்றல் இல்லை என்பதை நோக்கும்போது, தொடக்கத்தில் அவை மென்றொடர்ச் செய்து வாய்பாட்டினவாகவே நடைபெற்றிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு மேலும் சில சான்றுகளைக் கருத்தில் கொள்ளலாம்.

வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகள் செய்யும் வாய்பாட்டு வினைகளாகத் திரியும் போது, -உம்

விகுதியை நேரடியாக ஏற்பதில்லை. இதேபோல் செய்வென் எச்சப் பொருண்மையை உணர்த்தும் விகுதியாகிய அகரக் கிளவியையும் இவ்வினையடிகள் நேரடியாக ஏற்பதில்லை. ஆனால் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகள் செய்யும் வாய்பாட்டு வினைகளாகத் திரியும் போதும், செயவென் வாய்பாட்டு வினைகளாகத் திரியும் போதும் உம்மைக் கிளவியையும். அகரக் கிளவியையும் நேரடியாக ஏற்கின்றன.

வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகள்		மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகள்	
செய்யும் வாய்பாட்டு வினைகள்	செயவென் வாய்பாட்டு வினைகள்	செய்யும் வாய்பாட்டு வினைகள்	செயவென் வாய்பாட்டு வினைகள்
மொய்-உம்>	மொய்-அ>	பாய்-உம்>	பாய்-அ>
மொய்க்கும்	மொய்க்க	பாயும்	பாய
பார்-உம்>	பார்-அ>	சேர்-உம்>	சேர்-அ>
பார்க்கும்	பார்க்க	சேரும்	சேர
கல்-உம்>	கல்-அ>	இயல்-உம்>	இயல்-அ>
*கல்க்கும்>	*கல்க்க>	இயலும்	இயல
கற்கும்	கற்க		
முகிழ்-உம்>	முகிழ்-அ>	வாழ்-உம்>	வாழ்-அ>
முகிழ்க்கும்	முகிழ்க்க	வாழும்	வாழ
கேள்-உம்>	கேள்-அ>	ஆள்-உம்>	ஆள்-அ>
*கேள்க்கும்>	*கேள்க்க>	ஆளும்	ஆள
கேட்க	கேட்க		

செய்யும் வாய்பாட்டு வினைகளாகத் திரியும் வகையிலும், செயவென் வாய்பாட்டு வினைகளாகத் திரியும் வகையிலும், செய், பெய், கொய் முதலிய பத்து வினையடிகளும், மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகளுடன் ஒத்துச் செல்கின்றன-

வினையடிகள்	செய்யும் வாய்பாட்டு வினை	செயவென் வாய்பாட்டுவினை
செய்	செய்-உம்> செயும்/செய்யும்	செய்-அ> செய/செய்ய
பெய்	பெய்-உம்> பெயும்/பெய்யும்	பெய்-அ> பெய/பெய்ய
கொய்	கொய்-உம்> கொயும் / கொய்யும்	கொய்-அ> கொய/கொய்ய
நெய்	நெய்-உம்> நெயும்/நெய்யும்	நெய்-அ> நெய/நெய்ய
எய்	எய்-உம்> எயும்/எய்யும்	எய்-அ> எய/எய்ய
வை(>*வய்)	வை-உம்> வையும்	வை-அ> வைய
உழு	உழு-உம்> உழும்	உழு-அ> உழ
தொழு	தொழு-உம்> தொழும்	தொழு-அ> தொழ
அழு	அழு-உம்> அழும்	அழு-அ> அழ
பொரு	பொரு-உம்> பொரும்	பொரு-அ> பொர

வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகள்-அல் விகுதியை ஏற்கும்போது மாறுதல் ஏதும் நிகழ்வதில்லை. ஆனால் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகள் -அல் விகுதியை ஏற்குங்கால் துகரக்கிளவியின் முன் நிகழும் மெல்லொலி வீழ்ந்து படுகின்றது. [1]

காய்த்து—அல்> காய்த்தல்	காய்ந்து—அல்> காய்தல்
சேர்த்து—அல்> சேர்த்தல்	சேர்ந்து—அல்> சேர்தல்
கற்று—அல்> கற்றல்	கொன்று—அல்> கொல்லுதல்[2]
அவிழ்த்து—அல்> அவிழ்த்தல்	வாழ்ந்து—அல்> வாழ்தல்
கேட்டு—அல்> கேட்டல்	ஆண்டு—அல்> ஆளுதல்[2]

---

1 இவ்வீழ்ச்சி நிகழ்நிலை (Synchronic Level) யில் அமைவதாகக் கொள்வதற்கில்லை. மாறாக இதனை வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகக் கொள்வதே பொருத்தமாகும்-

2 கொன்று, ஆண்டு ஆகிய இரு செய்து வாய்பாட்டு வினைகளும் வரலாற்று நிலையில் பின் வரும் அமைப்பினையுடையனவாகக் கருதலாம்.

கொன்று <*கொல்ந்து <*கொலுந்து/*கொலிந்து <*கொல்— { உம் / இம் } —து

ஆண்டு <*ஆள்ந்து <*ஆளுந்து/*ஆளிந்து <*ஆள்— { உம் / இம் } -து

செய்து வாய்பாட்டு வினைகள் (தென்மொழி.) என்னும் கட்டுரையில் இவ்அமைப்பு விரிவாக ஆராயப் பெற்றுள்ளது.

மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் அடியாகப் பிறந்த செய்தல் வாய்பாட்டு வினைகளில் எங்ஙனம் துகரக்கிளவியின் முன் மெல்லொலி இல்லாமல் இருக்கிறதோ அங்ஙனமே செய், பெய், கொய் முதலிய பத்து வாய்பாட்டு வினைகளின் அடியாகப் பிறந்த செய்தல் வாய்பாட்டு வினைகளிலும் மெல்லொலி இல்லாமல் இருக்கிறது. எ-டு. செய்தல், பெய்தல், கொய்தல், நெய்தல், எய்தல், வைதல், உழுதல், தொழுதல், அழுதல், பொருதல். மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் அடியாகப் பிறந்த செய்தல் வாய்பாட்டு வினைகளில் மெல்லொலி வீழ்ந்துபட்டதைப் போலவே, இப்பத்து செய்தல் வாய்பாட்டு வினைகளிலும் மெல்லொலி வீழ்ந்துபட்டதாகத் துணியலாம்.

வன்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகள்-அல் விகுதியை நேரடியாக ஏற்பதில்லை. மாறாக மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகள் இவ்விகுதியை நேரடியாக ஏற்கும் திறத்தனவாக இருக்கின்றன.

காய்—அல்> காயல்
சேர்—அல்> சேரல்
சொல்—அல்> சொல்லல்
வாழ்—அல்> வாழல்
ஆள்—அல்> ஆளல்

இவ் வகையில் செய், பெய், கொய் முதலிய பத்து வினையடிகளும், மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகளுடன் ஒத்துச் செல்கின்றன. எ-டு. செய்-அல்> செயல்/செய்யல், பெய்-அல்> பெயல்/பெய்யல், கொய்-அல்> கோயல்/கொய்யல், நெய்-அல்> நெயல்/நெய்யல், எய்-அல்> எயல்/எய்யல், வை-அல்> வையல், உழு-அல்> உழல், தொழு-அல்> தொழல், அழு-அல்> அழல், பொரு-அல்> பொரல்.

செய், பெய், கொய் முதலிய பத்துவினைகளும். விகுதிகளை ஏற்கும்வகையில், மென்றொடர்ச்செய்து வாய்பாட்டு வினைகளின் வினையடிகளுடன் ஒத்தியல்வதை நோக்கும் போது, குறிப்பிட்ட அப்பத்து வினைகளின் அடியாகப்பிறந்த செய்து வாய்பாட்டு வினைகள் தொடக்கத்தில் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளாகவே வழங்கியிருத்தல் வேண்டும் என்ற கொள்கை

மேலும் உறுதிப்படுகின்றது. ஒப்பியல் சான்றுகளும் இதனை வலியுறுத்துவனவாகவே இருக்கின்றன.

பேச்சுத் தமிழில் செய்து, பெய்து, கொய்து, நெய்து, வைது (<*வய்து) ஆகிய ஐந்து செய்து வாய்பாட்டு வினைகளும் முறையே செஞ்சு, பெஞ்சு, பேஞ்சு, கொஞ்சு, நெஞ்சு, வஞ்சு[1] என மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகளாகப் பயில்கின்றன. இம்மென்றொடர்ச் செய்து வாய்பாட்டு வினைகள் முறையே *செய்ந்து, *பெய்ந்து / *பேய்ந்து, *கொய்ந்து, *நெய்ந்து, *வய்ந்து என்பவற்றின் திரிபுகளாகும். இவ் ஐந்து செய்து வாய் பாட்டு வினைகளும் கொடகு மொழியில் பின் வருமாறு அமைந்தியல்கின்றன.

கெய் 'செய்' கெஜ்-ஜ்- (<*கெஞ்சு < *கெய்ந்து) 'செய்து'
பொய் 'பெய் பொஜ்-ஜ்- (<*பொஞ்சு < *பொய்ந்து[2])'பெய்து'
கொய் 'கொய்' கொஜ்-ஜ்-(<*கொஞ்சு <*கொய்ந்து) 'கொய்து'
நேய் 'நெய்' நெஜ்-ஜ்- (<*நெஞ்சு <* நெய்ந்து) 'நெய்து'
பய் (bay)[3] 'வை'(<*வய்) பஜ்-ஜ்(baj-ɉ-) (<*பஞ்சு (banju) <* பய்ந்து (bayntu) 'வைது'

மேற்குறித்த கொடகு செய்து வாய்பாட்டு வினைகள் ஐந்தும் தொடக்கத்தில் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டின வாக நடைபெற்றன என்பதற்கு அவற்றில் உள்ள -ஜ்ஜ்- என்ற

---

1 இவ்வழக்கு பார்ப்பனத் தமிழில் பெருவாரியாகக் காணப்படுகிறது.

2 பொய் 'பெய்' என்ற கொடகு வினையடியின் மூல வடிவம் *பொழ்-(>பொழி என்பதாகும். ழகரம் யகரமாகத் திரிந்து, கொடகு மொழியில் *பொழ்-, பொய் என அமைந்தது. பெய் என்ற தமிழ் வினையடியும் இதனுடன் உறவுடையதாகக் கருதலாம்.

3 சில திராவிட மொழிகளில் வகரம் ப (b) கரமாகத் திரிந்தமை கின்றது. வை (<*வய்) என்ற வினையடி கொடகு மொழியில் பய் (bay) எனத் திரிந்ததாதல்வேண்டும். வை (<*வய்) என்ற வினையின் மூலவடிவமாக *பழ்-(<பழி) என்பதைக் கருதலாம். *பழ்->*பய்>*வய்>வை.

ஒலியன்களே சான்றாக நிற்கின்றன. ஞகர மெல்லொலி, அலை யொலியாகிய அண்ண ஒலி (Voiced Palatal Affricate) யுடன் ஓரினமாகியதன் விளைவாக -ஞ்சு- > -ஜ்ஜ்- என அமைந்தது. மென்றொடர்ச் செய்து வாய்பாட்டினவாக அவை இல்லாமலிருந் திருந்தால் கெஜ்-ஜ்-, பொஜ்-ஜ்-, கொஜ்-ஜ்-, நெஜ்-ஜ்-, பஜ்-ஜ்-(baj-j-)முதலிய வடிவங்கள் கொடகு மொழியில் அமைவ தற்கு வாய்ப்பில்லை.

மத்திய திராவிட மொழியாகிய பர்ஜியில் எய், கொய் ஆகிய வினையடிகள் இறந்த கால வினைப் பகுதிகளாக அமையும் போது முறையே எஞ்-, கொஞ்- என அமைகின்றன. இவ்வினைப் பகுதிகளின் தொன்மை வடிவங்கள் மென்றொடர்ச் செய்து வாய் பாட்டினவாக இல்லாமலிருந்திருந்தால் இவற்றில் ஞகரம் அமை வதற்கு வாய்ப்பில்லை.

இக்கட்டுரையில் குறிக்கப்பெற்ற அமைப்பியல் சான்று களும் (Structural Evidences), பேச்சுத் தமிழ், கொடகு, பர்ஜி ஆகிய மொழிகளின் வாயிலாகப் பெறப்பட்ட ஒப்பியல் சான்று களும் (Comparative Evidences) செய், பெய், கொய் முதலிய பத்து வினைகளின் அடியாகப் பிறந்த செய்து வாய் பாட்டு வினைகள் தொடக்கத்தில் மென்றொடர்ச் செய்து வாய் பாட்டினவாகவே நிகழ்ந்திருக்கவேண்டும் என்பதை உறுதிப் படுத்துவனவாக இருக்கின்றன. இவற்றைப் பின்புலமாகக் கொண்டு குறிப்பிட்ட பத்து வினைகளின் அடியாகத் தோன்றிய செய்து வாய்பாட்டு வினைகளைப் பின்வருமாறு உருவமைக்கலாம்.

*செய்ந்து > செய்து
*பெய்ந்து > பெய்து
*கொய்ந்து > கொய்து
*நெய்ந்து > நெய்து
*எய்ந்து > எய்து
*வைந்து > வைது (<*வய்து)
(<*வய்ந்து)
*உழுந்து > உழுது
*தொழுந்து > தொழுது

* அழுந்து > அழுது
* பொருந்து > பொருது

மெல்லொலி வீழ்ச்சி : வல்லொலிகளின் முன் நிகழும் மெல்லொலிகள் வீழ்ந்து படும் நிலை தமிழ் மற்றும் பிற திராவிட மொழிகளில் பரவலாகக் காணப்படுகின்றது. இவ்வீழ்ச்சிக்குரிய காரணங்கள் இன்னும் கண்டறியப்படா விட்டாலும் தொடக்க நிலையில் வல்லொலியின் முன் மெல்லொலி இடம் பெற்ற நிகழ்ச்சியை மறுப்பதற்கில்லை. பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் இவ் உண்மையைத் தெளிவு படுத்தும்.

1. -இன்று- > -இறு- (நிகழ்கால இடை நிலை)
2. அந்து (தெலுங்கு) > அது
   இந்து (,,) > இது
   எந்து (,,) > எது
3. பூண்டு > பூடு
4. நாண்டு (தெலுங்கு DEDS. 3012) > நாடு (பெயர்ச் சொல்)
5. இரண்டு > எரடு (கன்னடம்)
6. மூன்று > மூறு (,,)
7. தூங்கு > தூகு (tu:gu கன்னடம்)
8. நான்கு (< * நால்ம்-கு < * நாலும்-கு) > நால்கு [1] (தமிழ்), நாலுகு (தெலுங்கு)
9. ஐந்து (<*அய்ந்து) > அய்து (தெலுங்கு)
10. ஏண்டு (தெலுங்குக் கல்வெட்டு) > ஏடு (தெலுங்கு) 'ஏழு'
11. எருது < * எழுந்து, இதற்கு நிகராகத் தெலுங்கில் உள்ள எத்து (eddu) என்ற வடிவம் எருது என்பதன் தொன்மை வடிவினை * எருந்து என்று உருவமைக்கத் துணை புரிகின்றது. தொன்மை வடிவத்தில் வல்லொலி

---

1 பால்புரை புரவு நால்குடன் பூட்டி (2. 165. பத்துப்பாட்டு)
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி (4. 489. பத்துப் பாட்டு)

முன் மெல்லொலி நிகழவில்லை யென்றால் தெலுங்கில் எத்து (eddu) என்ற வடிவம் அமைவதற்கு வாய்ப்பில்லை.

* எருந்து < எருது (தமிழ்)
* எர்ந்து > * எர்து < எத்து (eddu தெலுங்கு)

தமிழில் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டினவாகிய வினைகள் கன்னடத்தில் மெல்லொலி இழந்து நிற்கின்றன.

12. இருந்து > இர்த்-(ir-d),, இத்த்-(idd-)
13. எழுந்து > எழ்த்-(eRd-) R = ழ்
14. விழுந்து > பிழ்த்-(biRd-)
15. ஆழ்ந்து > அழ்த்-(aRd-)
16. காய்ந்து > காய்த்-(ka:yd-))
17. அளந்து > அளெத்-/அளத்-(aLed-/aLad)
18. நடந்து > நடெத்-/நடத்-(naDed-/naDad-)
19. திரிந்து > திரித்-(tirid-)

பொங்கு என்ற வடிவம் மெல்லொலி இழந்து கோத்த மொழியில் பொக் (Pog) என அமைகின்றது.

இவ் எடுத்துக் காட்டுக்கள் அனைத்தும் வல்லொலிமுன் நிகழ்ந்த மெல்லொலியின் வீழ்ச்சியைப்புலப்படுத்துவதால் செய், பெய், கொய் முதலிய பத்து வினைகளின் அடியாகத் தோன்றிய செய்து வாய்பாட்டு வினைகள் தொடக்கத்தில் மென்றொடர்ச் செய்து வாய்பாட்டினவாக இருந்து, பின்னர் மெல்லொலியை இழந்தனவாகத் துணியலாம்.

ஏழு ஆண்டுகட்கு முன்பு பர்ஜி மொழியில் அமைந்துள்ள சில வினைப்பகுதிகளை ஆராயப்புகுந்த பேராசிரியர் பி. எஸ். சுப்ரமணியம் அவர்கள் செய்து, பெய்து, கொய்து, நெய்து, எய்து என்பவையே மூலவடிவங்கள் என்றும், பேச்சுத் தமிழில் காணப்படும் மெல்லொலி ஒப்புமையாக்கத்தின் விளைவு என்றும் சில

மெல்லிய சான்றுகளின் அடிப்படையில் நிறுவிக் காட்டினார்கள்.[1] அவர் மேற்கொண்ட சான்றுகள் ஓரளவுக்கு ஒப்பியல் தன்மை யனவாக இருந்தாலும் அவற்றை வலுவுள்ளவையாகக் கருத முடியவில்லை. செய், பெய், கொய் முதலிய பத்து வினைகளின் அடியாகப் பிறந்த செய்து வாய்பாட்டு வினைகள் தொடக்கத்தில் மென்றொடர்ச் செய்து வாய் பாட்டினவாக நடைபெற்றன என்பதை நிறுவும் வகையில் இக்கட்டுரையில் குறிக்கப்பெற்ற காரணங்கள் அனைத்தும் செயலற்றுப் போனாலொழிய, பேராசிரி யர் சுப்பிரமணியம் அவர்களின் கூற்றினை ஏற்பதற்கில்லை.

---

1. "..........the Proto Dravidian past stems of these verbs (**key** 'to reap' and **ey** 'to shoot') should on the basis of comparative evidence be reconstructed as * koy–t– and * ey–t–respectively. But we find that, in Proto Dravidian, the majority of the y–ending verbs took *–nt–as the past stem formative and only a handful of such verbs (e. g. koy–to' cut ney–'to weave', pey–'to rain.' ey– 'to shoot,' cey– 'to do') took *–t-as the past stem formative. Hence, ihere is scope for the regular and more common pattern (i. e. With the–nt–suffix) to exert structural pressure on the irregular and less common Pattern (i. e. With the *–t–suffix). In other words the occurrence of *–nt-suffix in these verbs is the result of analogical change." **-Two Problems in Parji Verb Forms** (Page 50). **Indian Linguistics Vol. 25. 1964.**

வள்ளுவர் காட்டும் அறம்.

—*—

பேராசிரியர் மு. உலகநாதன்.
விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மொழியிலும் அந்நாட்டு மக்களை நல் வழிப்படுத்த எண்ணற்ற சான்றோர்கள் தோன்றி அறநூல்கள் பலவற்றைத்தந்து சென்றிருக்கின்றனர். இவ்வழியில் தமிழிலும் பல அறநூல்கள் காணக்கிடக்கின்றன. பெரும்பாலும் பதினெண் கீழ்க் கணக்கு என்னும் நூல் வரிசையில் அறநூல்களே அதிகம் இடம் பெற்றிருக்கின்றன.

அவற்றில் நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஏலாதி போன்ற நூல்களில் இருந்து எல்லோரும் ஓரிரண்டு பாடல்களையாவது படித்திருப்பர். இல்லையென்றால் அந்நூல்களின் பெயரையாவது அறிந்து வைத்திருப்பர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஆனால் அதேவரிசையில் வைக்கப்பட்டுள்ள திருக்குறளை அறியாதாரும் இல்லை. அவற்றில் பல குறள்களைத் தெரியாதாரும் இல்லை என்று துணிந்து கூறலாம்.

நீதி நூல் வரிசையில் இடம் பெற்றுள்ள திருக்குறள் மற்றைய நூல்களின் இடத்தையெல்லாம் பிடித்துக்கொண்டது. ஏன் என்றால் மற்றைய நூல்கள் சொல்லும் கருத்துக்கள் எல்லாம் திருக்குறளிலேயே இருக்கின்றன. திருக்குறள் அவைகள் சொல்லும் முறைக்கும் யாப்பிற்கும் வேறுபட்டு நின்று எளிமையாக இனிமையாக ஏற்றவகையாகச் சொல்லுவதே அதற்கு முக்கிய காரணமாகும்.

எத்தனை நூல்கள் இருந்தாலும் எத்தகைய கருத்தை உரைத்தாலும் அவைகள் திருக்குறளில் இல்லாததையோ அல்லது அதற்கு மேலாகவோ ஒன்றும் சொல்லிவிடவில்லை.

இந்திய நாட்டு நூல்கள் மட்டுமல்ல எந்த நாட்டு

நூலாக இருந்தாலும் எல்லாமே அறம் என்று பேசுகின்றபோது பொய் சொல்லாதே, திருடாதே, கள்ளுண்ணாதே, கொலை செய்யாதே, பிறனில் விழையாதே என்பன போன்ற பஞ்சமா பாதகங்களைக் கண்டித்துக்கூறத்தான் செய்கின்றன. அவற்றைக் கூறிச்சென்ற பெரியோர்களும் மக்கள் மனத்திலே இடம்பெற்று நிற்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தும் ஒவ்வொரு கூட்டத்தாரால் ஒவ்வொரு மதமாகக் கருதப்பட்டும் பின்பற்றப்பட்டும் வரத்தான் செய்கின்றன.

புத்தமதம், கிறித்துவமதம், சினமதம், யூதமதம், சைவ மதம், வைணவமதம், சமணமதம், சீக்கியமதம், இசுலாமிய மதம் என்பன போன்று எத்தனையோ மதங்கள் ஒன்றிலிருந்து ஒன்றும் ஒன்றிற்காக ஒன்றும் என்றவாறு தோன்றித் தங்கள் தங்கள் அறக் கருத்துக்களைக் கூறிக் கொண்டும் இருக்கத்தான் செய்கின்றன.

அத்தனை மதங்களுக்கும் அப்பாற்பட்டுத் திருக்குறள் தன் கருத்துக்களைப் பொதுப்படையாகக் கூறியிருப்பது ஒன்றே அந்நூலுக்குரிய தனிச்சிறப்பாகும். எல்லா மதத்தின் நற் கருத்துக்களும் இதனிடத்து உள்ளன. அதனால் திருக்குறள் ஒரு தனி மதமாகக் கருதப் படவும் இல்லை. தனக்கென்று ஒரு கூட்டத்தைக் கூட்டிக் கொள்ளவும் இல்லை.

எல்லாமதத்தாருக்கும் ஏற்கும் வண்ணம் உயர்ந்த கருத் துக்களை வாரிவழங்கி எல்லோரும் என்னை ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறித் தன்னை 'ஒருமதம்' என்று கூறிக் கொள்ளாமலே விலகி நிற்கிறது திருக்குறள். திருவள்ளுவர் திருக்குறளை எழுதி யதன் நோக்கமே எல்லோரையும் ஒன்றுபடுத்தவேண்டும், எல் லோரையும் நல்வழிப்படுத்த வேண்டும் என்பதேயாகும். அவர்கள் எம்மதத்தவராயினும், எக்கொள்கையினராயினும், எந்நாட்டவராயினும், எம்மொழியினராயினும் அதைப்பற்றிக் கவலையில்லை. திருவள்ளுவரைச் சுற்றி எத்தனையோ மதவாதி களும், மொழியினரும், நாட்டவரும் இருக்கத்தான் செய்தார்கள். அதையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு வள்ளுவரும் ஒரு தனி மதத்தைத் தோற்றுவித்திருக்கலாம். அதில் அதன் மேம்பாடு களைத் தெரிவிப்பதோடு பிற மதங்களின் குறைபாடுகளையும் ஓட்டை, உடைசல்களையும் குறிப்பிட்டுக் கூறியிருக்கலாம். அப்

படிக் கூறியிருந்தால் அதற்கும் இன்றைய உலக எண்ணிக்கையில் ஒரு பங்கு இருக்கத்தான் இருந்திருக்கும்.

வள்ளுவரின் பசி அடங்காத பசி. ஒரு பங்கு அவருக்குப் போதாது. முழுப் பங்கும் அவருக்குத் தேவை. அதனுல்தான் உலகமே கண்டு வியக்கும் வண்ணம் திருக்குறளை எழுதிக் கொடுத்துத் தன் பசியை அடக்கிக்கொண்டார். திருக்குறளை எழுதி முடித்து அதனை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து. எவ்விதக் குறையும் இல்லை, இதனை எவரும் ஏற்றுக்கொள்வர், எவருக்கும் எந்த உயிருக்கும் பாதகமான, சாதகமான, குறை நிறைகள் இல்லை. சமன் செய்தே எழுதப்பட்டுள்ளது என்று கண்டறிந்த பின்பே வள்ளுவரின் மனம் அமைதி அடைந்தது. அதன் பின்பே அவரது உள்ளம் அந்நூலை உலக அரங்கில் வெளியிட அனுமதியளித்தது. என்னே! அவரது பேருள்ளம். உலக உள்ளம்!

வள்ளுவப் பெருந்தகையின் இத்தகைய வியத்தகு மேதை உள்ளத்தைக் கண்டறிந்த பின்புதான் அவரை எல்லோரும் கொண்டாடத் தலைப்பட்டுள்ளனர். அத்தகு நல்லார் உலகம் உய்யத் தானும் பல அறங்களைக் கூறுகின்றூர். ஆனுல் அவர் கூறும் முறை அனைவர் கூறும் முறையாயினும் சிறப்பாகத் தெளிவாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் முறையிலேயே அமைந்துள்ளது.

ஏழு சீர்களைக் கொண்ட ஒன்றே முக்கால் அடியால் ஆக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் யாரும் தொடாத குறள் வெண்பா என்னும் யாப்பு முறையைக் கொண்டது. அதனினும் வேறு ஒரு பாமுறையுண்டு என்று கூற வேறு எந்தப் புலவரும் சுருக்கிச் சொல்லமுடியாத முதன்மையுடையது பாக்களில் எல்லாம் வெண்பாவே முதன்மையான பா என்பது மட்டுமல்ல அதனைச் சங்க காலத்தில் கையாண்ட முதற் புலவரும் திருவள்ளுவப் பெருந்தகையே யாகும். "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ" என்று ஒரு புலவன் கூறியதற்கிணங்க ஈடும் இணையும் அற்ற திருக்குறளை உலகத்திற்குத்தந்த முதற் பாவலர் திருவள்ளுவரை யன்றி வேறு இல்லை. அதனுல்தான் அவருக்கு "முதற் பாவலர்" என்று வேறொரு பெயரும் கூட இட்டு வழங்கப்படுகிறது.

அத்தகைய மேதை அறத்தைக் கூடத் தொடங்குமுன் இல்லறம், துறவறம் என்று அறத்தை இரண்டாகப் பாகு படுத்திக் கூறத் தொடங்குகின்ருர்.

துறவறத்தினும் இல்லறமே சிறப்புடையது என்பது வள்ளுவருடைய கருத்து. எனவே இல்லறத்தை முதலில் இருபது அதிகாரங்களால் விளக்கிச் செல்லுகின்ருர். துறவறத்தைப் பதினன்கு அதிகாரங்களால் இல்லறத்திற்குப் பின் வற்புறுத்திக் கூறுகின்ருர். ஏன் துறவறத்தைக் கூற வேண்டும்? வள்ளுவர் உலகியலை நன்கு அறிந்த காரணத்தால் அதனையும் அவர் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லையெனில் அதனைக் கூருது விடுத்தாலும் விடுத்திருப்பார். எனவே எதனையும் நன்கு ஆராய்ந்து கருத்துக்களை எத்திறத்தார்க்கும் கூறக்கூடிய உலகியல்புடையார் நம் வள்ளுவப் பெருமான் என்பது நன்கு புலப்படுகின்றது.

பாயிரத்தில் நான்கு அதிகாரம் உரைத்த வள்ளுவர் 'அறன் வலியுறுத்தல்' என்று ஒரு அதிகாரத்தையும் இல்லறத்தைக் கூறத் தொடங்குமுன் நான்காவதாக வைத்துள்ளார்.

அதனில் அவர் அறம் என்ருல் என்ன என்பதனை முதலில் வற்புறுத்திக் கூறுகின்ருர். அறம் என்ருல் ஏதோ என்று எண்ணி மயங்கிக் கொண்டிருக்க வேண்டாம். மனத்துக்கண் எவ்வித மாசும் இல்லாமல் இருப்பதே அறம் என்கின்ருர். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னச்சொல் ஆகிய நான்கையும் விடுத்து வாழ்வதே தலையாய அறம் என்கின்ருர். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னச்சொல் ஆகியவற்றை விடுத்து மனத்துக்கண் ஒருவன் மாசில்லாதவனுக இருப்பானே ஆகில் அவன் தலைசிறந்த மனிதனுக மாறிவிடுகின்ருன்.

வள்ளுவர் அறம் என்று பொதுப்படையாகவே கூறுகின்ருர். அதனை அவர் அன்னதானம், கோதானம், பொன் தானம், கன்னிதானம், பூமிதானம், கல்விதானம் என்று எவ்வகையானும் பிரித்துக் கூறி யாரையும் பயமுறுத்தவில்லை. அவைகளும் அறத்தின்பாற்படுமெனினும் அவைகளை அவரவர் சக்திக்கேற்ப அவரவர் செய்துகொள்ளட்டும் என்று எண்ணியே "ஒல்லும் வகையான் அறவினை செய்க" என்று கூறிவிடுகிருர்.

இதைச்செய் அதைச்செய் என்று கூறிக்கொண்டிருந்தால் அவை பெருகிக்கொண்டே போகுமாதலால் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் அவரதுகொள்கைக்கு முரண்பட்டுப்போகும். அதனால் செல்லுமிடத்தெல்லாம் செய்யட்டும், ஒல்லும் வழியெல்லாம் செய்யட்டும், செய்தால் அவ் அறத்தினைப் போன்ற ஆக்கம் இல்லை அது சிறப்பைத் தரும், செல்வத்தைத் தரும். அத்தோடு மனத்திற்கு உவகையைத் தந்து உயிர்க்கு உறுதியையும் தரும் என்று கூறுகின்றார்.

அவ்வாறு அறத்தின் வழிவரும் இன்பமே உயிர்க்கு இன்பம் பயக்கும் என்பதை "அறத்தான் வருவதே இன்பம்" என்று கூறுகின்றார். இதனையே புறப்பாடலாகிய புறநானூறும்

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல" புறம் 31.

என்று கூறுகிறது.

மனிதன் எய்த வேண்டியவை பொருளும் இன்பமுமே. அவை இரண்டையும் அவன் எவ்வாறு பெறுதல் வேண்டும்? அறத்தால் பெறுதல் வேண்டும். அறத்தால் பொருள் ஈட்டிப் பொருளால் இன்பம் துய்ப்பதே முறைமை. இதனையேவள்ளுவர் அறத்துப்பால் முழுமையும் யாண்டும் விளக்கிச் செல்லுகின்றார் அக்காரணம்பற்றியே அறத்துப் பாலையும் முதற்பாலாகிய நம் முதற் பாவலர் வைத்திருப்பது எண்ணி இன்புறத்தக்கதாகும்.

அத்தகைய அறத்துப்பாலில் அறன் இது எனவும் அதனால் வரும் பயன் இது எனவும் வலியுறுத்திய வள்ளுவர் அறங்கள் இவையென வரிசைப்படுத்துகின்றார். வாழப் பிறந்த மனிதன் அவன் கண்முன் தோன்றுகின்றான். எனவே அவனுக்கு வாழ்க்கை என்றால் என்ன? அதனை எவ்வாறு நடத்துதல் வேண்டுமென முதலில் வற்புறுத்த எண்ணி இல்வாழ்க்கையை ஒரு அறமாகவே காட்டுகின்றார். வாழ்வுஒரு அறமாகுமா? என்ற சந்தேகம் தோன்றலாம். அச்சந்தேகங்களை எல்லாம் விளக்கி ஆம்! வாழ்வதே ஒரு அறம்தான். வாழ்வு என்றால் எல்லாமே வாழ்வாகி விடாது. வாழ்க்கையை வாழவேண்டிய முறைப்படி

வாழ்ந்தால்தான் அது வாழ்க்கை என்றே சொல்லப்படும். அவ்வாறு வாழும்போது ஒரு மனிதன் செய்யவேண்டிய கடமைகள் ஆயிரம் ஆயிரம் உண்டு. அவற்றையெல்லாம் அவன் முறைப்படி நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட்டவன். அப்படி அவற்றையெல்லாம் ஒரு மனிதன் ஒழுங்குபட நிறைவேற்றும்போது வாழ்க்கை சுவை பயப்பது மட்டுமல்லாமல் அறமாகவும் தோற்றம் பெறுகிறது. எனவேதான் உலகியலில் தோய்ந்த வள்ளுவர் முதலில் இல்வாழ்க்கையை முதல் அறமாக எடுத்துக் கொண்டு பேசத்தொடங்குகின்ருர். அதற்குக்காரணம் இல்லறத்தின் உட்பிரிவுகளாகிய பல்வேறு அறங்களும் துறவற வித்திலிருந்து தோன்றுகின்ற முளையே மரம், கொப்பு, கிளை ஆகிய இன்னபிறவாக மாறுவது போலத் தோற்றம் பெறுகிறது என்பதை உணர்த்துவதற்காகத்தான்.

'இல்லற மல்லது நல்லற மன்று' என்பதும் ஔவை முதுமொழியன்ருே? எனவே இல்லறமே அறங்களுக்கெல்லாம் தலையாய அறம். முதல் அறம் உண்மை அறம் என்பது உணர வேண்டிய ஒன்ருகும்.

வள்ளுவர், உணர்ந்ததைத்தான் உலகுக்கு உணர்த்துவார். இல்வாழ்க்கை நல்வாழ்க்கை என்பது அவர் கருத்து. அங்கேதான் அன்பு தோன்றுகின்றது. அன்பில் தான் அறம் தோன்றுகின்றது. அன்பின்றேல் அறம் இல்லை. அறம் இன்றேல் பொருளுமில்லை, இன்பமும் இல்லை ஆகவே எல்லாவற்றுக்கும் அடிப்படை இல்வாழ்க்கையே.

இல்வாழ்வான் ஒருவனுல்தான் உலகத்தில்உள்ள எல்லோரையும் பேண முடியும். துறவியினுலோ மற்றவர்களாலோ அது முற்றமுடியுமா என்பது சந்தேகமே. அவர்களால் விளையும் பயன் அவர்களுக்கே உரித்தாவதும் அல்லது அவர்களை அண்டி நிற்கின்ற ஒரு சிலரைச் சார்வதாகவும்மட்டுமே அமைய முடியும். எனவேதான் எல்லோரும் இல்வாழ்வானின் பின் வந்தேயாக வேண்டும் என்ற கருத்தில் முதல் கருத்தை வலியுறுத்தி இல்வாழ்க்கையை ஒரு தலைசிறந்த அறமாகக் காட்டுகின்ருர்.

(தொடர்ச்சி ௫கூ-ம் பக்கம் பார்க்கவும்)

அகவன் மகளிர்

புலவர். திருமேனி நாகராசன்,
காரைக்கால்.

அகவல் என்பது அழைத்தல். இதனைக் கூப்பிடுதல் எனினும் பொருந்தும். 1. அகவிக் கூறலின் அகவலாயிற்று. அகவிக் கூறல் என்பது தெய்வங்களை ஓசையுடன் அழைத்துக் கூறல் என்றறிக. அவ்வாறு அகவிக் கூறுவாரை 2, அகவல் மகள் என்பர் அறிவோர்.

அகவல் மகளைக் கட்டு விச்சி 3. எனவும் அழைப்பர். அவள் குறிஞ்சி நாட்டினள் ; செவ்வேள் வணக்கம் செய்பவள் ; திறனும் உறனும் மிக்கவள்; அறிவின் மிக்கவள்; அழகில் தேர்ந் தவள்; மாற்றார் மனநிலை அறிவதில் தலைநின்றவள்; சுவைக்கப் பேசும் இயல்பினள்.

அவ்வகவன் மகளிர் பண்டைக் காலந் தொட்டே பழந் தமிழ் நாட்டில் மேம்பட்டு வந்தவர். என்னை ?

4 "கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" எனவரும் தொல் காப்பியர் கூற்றான் கட்டுவிச்சியர் வருங்காலம் கூறியது புலனும். இவளையே பிற்காலத்தார், 5. குறத்தி என்று வழங்கினர்.

அகவல் மகளிர் அல்லது கட்டு விச்சியர் தொழில் யாதெனில் கட்டுப்பார்த்தல். கட்டுப்பார்த்தலாவது, கட்டுவிச்சி முறத்தில் நெல்லை இட்டு அதனை எண்ணி அதனால் போந்த சில குறிப்புக்களான் வருங்காலம் உரைக்கும் திறமையாகும் அஃது எதற்காக யாரான் எச்சூழ்நிலைக்கண் பார்க்கப்படும் என்று சற்று விளங்கக் கூறுவோம்.

பண்டு தலைவனும் தலைவியும் ஊழான் ஒரு சோலையில் எதிர்ப்படுகின்றனர்; கண்கள் கலக்கின்றன; உள்ளங்கள் ஒன்றுபடுகின்றன. உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னர் மெய்யுறு புணர்ச்சியும் முறைமையினில் நிகழ்கின்றது. அக்கள வொழுக்கம்

பல நாள் நீடிக்கிறது; அதனால் தலைவியின் உடலிலும் உள்ளத்திலும் மாறுகல் நிகழ்வதாகிறது. செவிலியும் அன்னையும் தலைவியின் மாற்றத்திற்குக் காரணம் அறியாது கலங்குவர். அந்நிலைக்கண்தான் அகவன் மகள் அழைக்கப் பெறுவாள். அவளிடம் செவிலியும் தாயும் தலைவியின் மாற்றத்திற்குக் காரணம் கேட்க, அவள் ஒரு முறத்தில் நெல்லை இட்டு அதனை எண்ணி அதனால் போந்த சில குறிகளைக் கொண்டு ''தலைவி முருகனால் அணங்கப் பட்டாள்'' என மொழிவாள். அதன் பின் செவிலியும், தாயும் வேண்டிய செயல்களை மேற்கொள்வர்.

வாய்மைக்கண் நின்று ஒழுகும் அகவன் மகளிர் ''தலைவி முருகவேளால் அணங்கப்பட்டாள்'' என்றது பொய்ம்மொழியன்றோ? என வினா உண்டேல், அது கடா இன்மை அறிக. என்னை? அகவன் மகளிர் ஈண்டு முருகவேள் என்றது இறையை அன்று. அவள் உவம ஆகுபெயராய்த் தலைவனை உணர்த்தி நின்றாள் என்பதை நுண்மாணுழை புலம் மிக்கார் உணர்ந்து கோடல் வேண்டும்.

6. ''முருகன் சீற்றத் துருகெழு குருசில்''

7. ''.........அந்தரத்துக் கோழியான் என்னின் முகம் ஒன்றே'' எனவரும் சான்றோர் கூற்றான் முருகவேளைத் தலைவற்கு உவமையாகக்கொள்வது மரபென்று உணர்க. பின்னும், காளை போல்வானைக் காளை எனவும், பாவைபோல்வாளைப் பாவை யெனவும் வழங்குமாறுபோல முருகவேள் போன்ற தலைவனை முருகவேள் என்பதும் முறையாயிற்று என்க. இதனை உவம ஆகுபெயர் என்பது இலக்கணம். ஆகவே, அகவல் மகளிர் தலைவியை மயக்குறுத்திய தலைவனை முருகவேள்என மொழிந்தது அவள் மூதறிவுக்குக் காட்டாகுமே யல்லது, பொய்யுரையாகாது என்பதைத் தெள்ளிதின் அறிந்துகொள்க. அன்றியும் அவ் வேட்டுவச்சி தலைவியை அணங்கியவன் முருகவேள் என்று சொல்லித் தலைவனையே உணர்த்தியதோடு அல்லாமல் குறிப்பான் தன் குல முதல் தெய்வத்தின் தலைமையையும் ஆண்டுச் சுட்டிச் சிறப்புற்றனள் என்ற நயனுடைச் செய்தியையும் ஈண்டு அறிக.

இனி அகநானூற்று 98ஆம் பாட்டு அகவன் மகளிரைப் 'பொய்வல் பெண்டிர்'' என அழைக்கின்றதே என ஐயுறுவார்க்கு

ஐயம் தீர்ப்பாம்: பொய்யில் பெண்டிர் எனப்பாலதே பொய்வல் பெண்டிர் என ஏடெழுதுவார் சோர்வினால் மாறிப் போயிற்று என்க. அன்றியும், பொய்வல் பெண்டிற்குப் பொய்யில் பெண்டிர் என்பது பர்டம் என்பதும் ஒரு சாரார் கொள்கை. அவர் பொய் யராயின் அன்று தொட்டு அவர் மேம்பட்டிரார்; அவர் வழியி னர் பிற்காலத்தும் பல்கியிரார் என்க. அன்றியும் அவ்வகவன் மகளிரைப் பண்டைக்குல மகளிர் அழைப்பித்தும், அவர் சேரி புகுந்தும் உற்றது வினவி வந்தவாறு பண்டைத் தமிழ் இலக்கி யங்கள் நெடுகிலும் சால உண்டு. அதனை மேல் காண்போம். இவ்வாறு, எவ்வாறு நோக்கினும் அகவன் மகளிர் பொய்யில் லாப் பெண்டிராதல் புலப்படும்.

இனி அகவன் மகளை அழைத்து அரிவையர் குறிகேட் கும் வழக்கத்தையும், அக்கால் அவள் உரைக்கும் குறிச்சிறப் பினையும் முறைமையினில் காண்போம்:

தலைவன் பிரிவால் தலைவி உடல் மெலிகிறாள். அவள் தோற்றமும், ஒழுக்கமும் வேறுபட்டாள்; உண்டியும் சுருங்கினாள். தலைவி நிலைகண்டு கவன்ற செவிலி அகவல் மகளை, அழைப்பித் துத் "தலைவிக்குப்பட்டது உரைக்க" என்ன அப்பொழுது ஆண் டிருந்த தலைவியின் உயிர்த்தோழி அகவன் மகளை நோக்கி "அவர் (தலைவன்) நெடிய குற்றத்தை நீ பாடுக" என வுரைப்பார். என்னை? 8. "அகவன் மகளே! அகவன் மகளே! சங்கு மணியி னால் ஆகிய கோவை போலும் வெண்மையாகிய நன்னெடுங் கூந்தலையுடைய அகவன் மகளே! பாட்டுக்களைப் பாடுவாயாக; இன்னும் பாட்டுப் பாடுக. தலைவருடைய நெடுங் குற்றத்தைப் புகழ்ந்து பாடிய பாட்டை இன்னும் பாடுவாயாக!"

அகநானூற்றில் வரும் பிறிதொரு சான்றினையுங் காண்க:— 9. "தலைவனின் இனிய உள்ளம், பிரிவினால் இன்னா வாயினமையின் எனக்கு மெலிவு உண்டாயிற்று. அது தலைவ னின் மார்பு உறுவ தொன்றானே தணிதலை அறியாதவளாகிய நம் அன்னை, ஒளி பொருந்திய நின்வளை நெகிழ்ந்த நிலையினைக் கண்டு கையறு நெஞ்சினளாய்க் குறி கேட்டபோது முதுமை வாய்ந்த பொய்யில் கட்டு விச்சியர் பிரப்பரிசியைப பரப்பி வைத்து இது முருகனது செயலால் வந்த வருத்தம் என்று கூறலின்........"

அகவன் மகளிரைப்பற்றி நற்றிணைதரும் குறிப்பு வருமாறு:— 10. "மலை நாடான் நம்மைப் பிரிதலினால், நன்னுதலின் பசலை பரந்ததாக அதனை நோக்கி நம் அன்னை செம்முது பெண்டிரோடு முறத்தில் நெல்லைப் பரப்பிக் கட்டு வைத்து நம்மையும் எதிரில் நிறுத்திக் குறி கேட்குமாம்.

பிரிவாற்றாமையால் மெலிந்த தோழியின் நிலையை உயிர்த்தோழி செவிலிக்கு உணர்த்து முகத்தான் பேசுங்கால், கட்டுவிச்சியைப் பற்றிய தோர் செய்தியும் வருவதாகிறது. அஃது இது:— 11. "அன்னையே ஒளி பொருந்திய நெற்றியினை யும், தழைத்த மென் கூந்தலையும் உடைய தலைவியின் உடலில் அணியப் பெற்றுள்ள அணிகள் யாவையும் நெகிழச் செய்வித்த மருந்துகளால் தீர்க்க இயலாக் கொடிய நோயின் பொருட்டுப் பிறர் அறியாதவற்றைக் குறியான் உணரும் கட்டுவிச்சி முதலிய அறிவோரைத் தலைவி இவ்வாறு மெலிந்தமைக்குக் காரணம் யாதென வினவ அவர் தலைவிக்குத் தெய்வத்தான் இது நிகழ்ந்தது என்பர்."

ஈண்டு எடுத்துக் காட்டிய இலக்கியச் சான்றுகளால் அகவன் மகளிர் சங்க காலத்தில் பரவி இருந்தமை புலனாகும். இனிச் சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய காப்பியக் காலத்தும் கட்டுவிச்சியர் காணப்படுகின்றனர் என்க. அக்காப்பியக் காலத்துள் எழுந்த தலைசிறந்த காப்பியமாகிய சிலப்பதிகாரத்துள் அகவன் மகளிர் தெய்வம் ஏறப்பெற்றுக் குறி உரைப்பதாகக் காட்டப்படுகிறது. சங்க காலத்தில் தன்னிலையில் அமுந்த நின்று குறி சொன்ன அகவன் மகளிர் காப்பிய காலத்தில் அவ்வாறு சொன்னதோடன்றித் தம்மேல் தெய்வம் ஏறத் தன்னிலை மறந்து தெய்வநிலை உற்றுக் குறி உரைத்ததும் உண்டு இதற்கு வெளிப்படைச் சான்று சிலப்பதிகார வேட்டுவ வரியில் சாலினி தெய்வம் ஏறப்பெற்றுக் கட்டுரை கூறுமாற்றைக் காண்க 12.

தமிழகத்தின் இடைக்காலத்தில் தோன்றிய பேரிலக்கியம் பெருங்கதையிலும் அகவன் மகளிரைப் பற்றிய குறிப்புண்டு. 13. பாகீரதி யூகி சூழ்ச்சியால் பித்துக்கொண்டாற் போலத் தெருவினில் செல்வாள். அப்போது அது கண்ட நகர மூதிர்ப்பெண்டிர் "நாளை புறப்படும் படை யெழுச்சி யாதாயிற்று?" என்றறிவான் பொருட்டு அகவன் மகளிரை அழைத்து

உற்ற குறி கேட்பாராயினர். அவள் தானும் யூகியின் மதிவழி ஒழுகுகின்றவளாதலின் "அன்னையீர்! இக்குறி தீமை பயக்கும் என்பதனையே காட்டுகின்றது" என உரைப்பாள். ஈண்டு அகவன் மகளிரை அரசியல் சூழ்ச்சியில் பிற்கால அரசியல் பிழைப்பாளர் பயன்படுத்திக்கொண்டமை புலனாகும்.

பிற்காலத்தில் எழுந்த புராணங்களிலும், பிரபந்தங்களிலும் அகவன் மகளிரைப் பற்றிய செய்தி சற்று விரிவாகக் காணப்படுகின்றது. ஆதலின், புராணத்துள் திவ்வியப் பிரபந்தம் தன்னில் அகவன் மகளிரைப் பற்றிய செய்தியைச் சுட்டுவோம்:—
14. திருமால் வீதியினில் பறைமுழங்கத் தேரேறி வலம் வருகின்றான். தலைவி அவனைக் காண்கிறாள். அவள் நெஞ்சம் அவன்பாலாகிறது. ஆதலின் அவள் நலனெல்லாம் அழியக்காதல் நோய் கொள்வாளாயினள். அவட்கு வருத்தம் எற்றினால் ஆயிற்றென அறியா அன்னையர் அகவன் மகளை அழைத்துக் குறி கேட்பர். அவ்வகவல் மகள் முறத்தினில் நெல்லையிட்டு அலகிட்டுப் பெரிதும் வியப்புற்று மெய்சிலிர்த்து "இவளை அணங்கியவன் பேராயிரம் உடைய திருமாலே" என்பாள். பின்னும் கரிய மேனியன்; கையினில் சங்குடையான்; திருத்துழாய் மார்பினன்" என்று கட்டுரைத்துப் பின்னும் "அன்னையீர்! நீர் ஏதும் அஞ்சல் வேண்டா. உம்முடைய மகளுக்கு இந்நோய் செய்தான் வேறு யாருமல்லன். அவனை நான் குறியான் உணர்ந்து கொண்டேன். அவனை உமக்கு அறியக் கூறுவேன். கேட்க: இவ்வுலகு எவனால் அடி அளக்கப்பட்டதோ, அவனே தான்; எவனால் இலங்கை அன்று பொடிப் பொடியாய்ப் போயிற்றோ அவனே தான்" (திருமாலே என்றபடி) எனக் கூறுபட உரைப்பாள்.

இனிப் பதினேழாம் நூற்றாண்டில் முகிழ்ந்த கலம்பகச் சிற்றிலக்கியங்களுள் குறம் என்னும் ஓர் உறுப்பால் அகவன் மகளிரைப் பற்றிப் பேசப்படுகின்றது. மதுரைக் கலம்பகத்தில்
15. "மேகங்கள் தங்குகின்ற சோலையை உடைய மதுரைப் பதியில் உள்ள அந்தப்பாண்டியருடைய திருமணத்தைத் தடாதகைப் பிராட்டிக்கு முன்னே அறிந்து குறி சொன்ன குறமகள் ஆவேன் யான். தும்மலும் நல் வரவாக இருக்கிறது. முறத்தில் உன் தாய் நெல்லைக் கொணர்ந்துபோட்ட குறியை ஆராய்ந்து சொல்லும் இடத்து நீ மனத்தில் பெறக் கருதிய பொருள் ஒன்றுண்டு. கொங்கைகள்பட்ட தழும்புக் குறியுடனே கைவளை

யில் பட்டதனுலாகிய தழும்புகளையும் உடைய ஒரு வடிவுதான் அது'' என வந்தவாறு காண்க.

குறமகள் என்றழைக்கப்படும் அகவன் மகளை மையமாகக் கொண்டிலங்கும் ஒரு சிற்றிலக்கியம் பதினேழாம் நூற்றாண்டில்தான் தொடங்கிற்று. அச்சிற்றிலக்கியங்களைக் குறவஞ்சி என்றழைப்பர் சான்றோர். குறவஞ்சி என்பதற்கு வஞ்சிக் கொடியை ஒத்த மலைவாணர் மகள் எனப்பொருளாகும் அக்குறமகள் பண்பினை எடுத்து மொழியும் நூல் குறவஞ்சி ஆயிற்று. குறவஞ்சி நூற்களில் குறத்தி நிலை, அவள் மலை, நாடு, நகர், அவளின் குறி சொல்லும் சிறப்பு. அக்குறி பலிக்கும் தன்மை, அவள் கொள்ளும் பரிசில் முதலியவை விளங்கப் பேசப் பெறும். அவ்வகைக் குறவஞ்சி நூற்களுள் உச்சிமேல் வைத்து உயர்ந்தோர் மெச்சிப் புகழ்வது திருக்குற்ருலக் குறவஞ்சியேஆகும்.

திருக்குற்ருலக் குறவஞ்சியில் உரைக்கப்படும் குறமகள் தன்மையோ சுவை சொட்டுவது; சொல்லற்கு இன்பம் ஈவது; என்றும் மேம்பாடு உடையது. அதோ குறமகள் வருகின்ருள். அவள் வருகின்ற நிலையைப் பாருங்கள்:— குறமகள் திருநீற்றை நெற்றியில் அணிந்து பொட்டும் இட்டுப் பாசிமணி மாலையும், குன்றிமணி மாலையும் அணிந்து, வெள்ளாடை உடுத்திய இடையினில் கூடை தங்க, வலக்கையினில் குறி சொல்லும் கோல் கொண்டு, பேச்சுக்குப் பேச்சு பசப்பு மொழி நயமும், ஒரு கொங்கைக்கு மறு கொங்கை குலுக்கும், கண்ணுக்குக் கண் ஒரு சிமிட்டும், வெளிக்கு ஒரு பகட்டுமாய், உருப்பசி அரம்பை இவர்களின் செருக்கு அடக்கவும், தன் சிரிப்பின் கொடுமையால் முனிவர்களும் மயங்கவும் சமப்படுத்திப் பேசும் பேச்சால் சபையெல்லாம் ஒடுங்கவும், வான் வழிச் செல்லும் சித்தர்களும் தன் கடைவிழிப் பார்வையால் கதிகலங்கவும், தன் மந்திரக் கட்டுப் பாட்டால் பேய்க்கணங்கள் அடங்கவும், கொங்கணம் ஆரியம் குச்சலர் நாடுகளிலும் தென்னவர் தமிழில் வெற்றித் தூண் நாட்டியும், ஆடவர்க்கு வலக்கை பார்த்தும், மகளிர்க்கு இடக்கை நோக்கியும் சென்ற காலக் குறி, நிகழ்காலக் குறி, வருங்காலக் குறி, வேண்டுவோர் மனக் குறி, மெய்க் குறி, கைக் குறி, விழிக்குறி. மொழிக்குறி எக்குறியாயினும் ஒரு நொடிப் பொழுதினில் சொல்லவல்ல குறவஞ்சி வருகின்ருள்.

அக்குறமகள் தன் மலையையும், ஒழுக்கத்தையும் உரைக்கும் மாண்பினைக் கேளுங்கள்:— வானரங்கள் துள்ளும்; வானின்று தேனருவி பாயும்; தினையும், பனையும் பயிராகும்; குறவர் என்றும் குதூகலிக்கும்; வயிரமுடன் மாணிக்கமும் விளையும். என் தலைவன் மலை பழநி மலை; விந்தை மலை எந்தை மலை; இமய மலை எந்தன் தமயன் மலை; திரிகூட மலையே எங்கள் மலை. குறக்குலந் தவிர வேற்றுக்குலத்தில் பெண் கொடோம். வேற்றுக் குலத்திலும் பெண் கொள்ளோம். ஒருவரை நட்புக்கொண்டால் அவரை இடை முறிக்க மாட்டோம்.

அக்குற மகளிடம், திருக்குற்றால நாதரிடம் கொண்ட காதல் மயக்கத்தால் மெலிவுற்ற வசந்தவல்லி குறி கேட்பாளாயினள். குறி கேட்ட வசந்தவல்லியின் "முத்திர மோதிரம் இட்ட கையை"க் காட்டுக என்ன, அவள் தன் தாமரைக் கையை குறமகள் முன் நீட்டிக் காட்டவும் அக்கை கண்ட குறமகள்

16. "மாறுமல் இருநிலத்தில் அறம் வளர்க்கும் கையே
மனையறத்தால் அறம் பெருக்கித் திறம்வளர்க்கும் கையே
வீறுக நவநிதியும் விளையும் இத்தக் கையே
மேன்மேலும் பாலமுதம் அணையும் இந்தக் கையே"

எனப் பலபடப் புகழ்ந்து தன் குல தெய்வங்களை எல்லாம் முறை கூவி அழைத்து, அவை அருளினல், சொலல் வல்ல குறமகள் வசந்தவல்லியின் மனத்தகத்துக்கிடந்த மாண்புடைக் கருத்தினைத் தெள்ளிதின் விளம்புமாறு காண்க: இடப வாகனத்தில் ஏறி வருகின்ற யோக புருடனுகிய திருக்குற்றாலநாதரின் சிறப்பான திருவுலாக் காட்சியைக் காண விரும்பிய பெண்களில், நீ அவரைக் கண்டு ஆசை கொண்டாய் அம்மே! அதனை முன்னே சொல்வதற்குச் சிறிது அஞ்சினேன். இனிச் சொல்வேன் கேள்: காக்கைகளும் கூடப் பறவாத திரிகூட மலைக்கே நீ காமக் காய்ச்சல் கொண்டுள்ளாய் (வேறு எந்தக் காய்ச்சலும் இல்லை என்றபடி) ஆடவர்களை மயக்குகின்றவளே! உன்னுடைய மயக்கமெல்லாம் அக்குற்றாலநாதன் மீது நீ கொண்ட காதல் கிளுகிளுப்புத்தானடி! என்றுரைத்த குறமகள் பின்னும் அழகுபட "பெண்ணரசே! பெண்ணென்று சொன்னல், திரி என்று பொருள் தரும்; பெரு பெண்ணுடன் சேரவென்று சொன்னல், கூட என்று பொருள் தரும் ஆதலின் இம்மூன்றையும் சேர்த்துக்

கணக்கிட்டால் நான் கூறிய அவன் திரிகூடநாதன் என்று சொல்லலாம் அம்மா!'' என்பாள்.

அவ்வுரை கேட்டு ஒருசார் உவகையால் பூரித்தும், பிறிதொருசார் நாணத்தால் தலை கவிழ்ந்தும் நின்ற தலைவியாம் வசந்தவல்லி குறமகளின் குறிசொற்ற மூதறிவினை வியந்து, அவட்குத்தான் தேடி வைத்த எல்லா வகை அணிகளையும் அணிவித்துச் சிறப்பித்தாள் என்க. என்னை?

17. ''............குறவஞ்சி தன்னை அழைத்தே அவட்கு ஈட்டுசருவாபரண பூட்டினளே!' எனவரும் அடிகளான் அறிக.

இவ்விருபதாம் நூற்றாண்டில்கூடக் குறி சொல்லும் மகளிரைத் தென்னகத்தில் காணலாம். சிறப்பாகத் தமிழகத்திலும் கேரளத்திலும் குறி சொல்லும் மகளிரைப் பரவலாகக் காணலாம். அம்மகளிர் முடித்த கூந்தலுடனும், முற்றிய அறிவுடனும், கையினில் சிறுகோல் கொண்டு, கூவி அழைத்தவாறு தெருவினில் பிடிபோலும் நடைபயிறலை இன்றும் நாம் பார்க்கலாம். ஒழுக்கமும், மரபும் பேணிவாழும் அம்மகளிர் வழி எஞ்சல் எக்காலும் இல்லை!

மேற்கோள்களும் ஆதாரங்களும்

1. தொல்காப்பியம்; செய்யுளியல்: எண் 81 (பேராசிரியர் உரை)
2. குறுந்தொகை; எண்: 23 அடி— 1—1.
3. ''கட்டறி மகடூஉக் கடிமுறத் திட்ட'' பெருங்கதை; க: 37; அடி— 235—6.
4. தொல்காப்பியம்; எண்: 113, அடி— 3—4.
5. பிற்காலத்துக் கலம்பகங்களில் உள்ள குறம் என்னும் உறுப்பும், குறவஞ்சியும் அகவன் மகளைக் குறத்தி என்றே அழைக்கின்றமை அறிக.
6. புறநானூறு; எண்: 16; அடி— 12.
7. முத்தொள்ளாயிரம்; எண்: 130, அடி— 2—3.
8. குறுந்தொகை: 23.
9. அகநானூறு: 98.
10. நற்றிணை: 28; அடி— 4—7
11. குறிஞ்சிப் பாட்டு; அடி— 1—4.
12. சிலப்பதிகாரம்: வேட்டுவவரி; அடி— 47—49.
13. பெருங்கதை: யூகி சூழ்ச்சிப்படலம்.
14. திவ்வியப் பிரபந்தம்: சிறிய திருமடல்; 12—26.
15. மதுரைக்கலம்பகம்: குறம்.

16—17. குற்றாலக் குறவஞ்சி.

மொழியியல் கலைச்சொல் விளக்கம்-2

சு. இராசாராம், எம். ஏ.,

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூர்-6,

Language – மொழி: நாம் இரயிலிலோ காரிலோ பிரயாணம் செய்கிறோம். சாலையின் இருமருங்கிலும் போக்குவரத்து விதிகளைத் தெரிவிக்கும் வகையில் எத்தனையோ அறிவிப்புப் பலகைகளைப் பார்க்கிறோம். பல்வேறுபட்ட குறியீடுகளைத் தாங்கி நிற்கும் அவ்வறிப்புப் பலகைகளில் நம்முடைய கண்கள் சிலநேரம் தங்குகின்றன. வாகனத்தின் வேகத்தில் அப்பலகைகள் மறைகின்றன. நம்முடைய மனத்திலும் அவற்றைப் பற்றிய எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கிறோம். இந்நிகழ்ச்சிக்கு நிச்சயமாக நம்முடைய பிரயாண அனுபவத்தில் முக்கிய இடம் கிடையாது என்பது உண்மைதான். ஆனால் அதே அறிவிப்புப் பலகையை நின்று நிதானித்துப் பார்க்கும்போது அது யாருக்கோ எதையோ சொல்லுகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். நமக்கு அது பேசுகின்ற மொழி புரியவில்லை. அதே நேரத்தில் சாலையில் வேகமாக வருகின்ற ஒரு கார் தன்னுடைய வேகத்தைத் திடீரென்று குறைத்துக்கொண்டு அமைதியாகச் செல்கிறது. ஏன் அப்படி என்று நாம் திகைக்கிறோம். இப்பொழுது நாம் அறிவிப்புப் பலகையைப் பார்க்கிறோம். அதில் கம்பி வலைபோல் ஒரு படம் வரையப்பட்டிருக்கிறது. சற்று தூரம் சென்று பார்த்தால் இரயில்வே லெவல் கிராசிங்கைப் பார்க்கலாம். இதை அந்தக் காரோட்டி எப்படிப் புரிந்துகொண்டார்? அறிவிப்புப் பலகையோடு அவர் எந்த மொழியில் பேசினார்? நமக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிகிறது. அறிவிப்புப் பலகையும் அந்தக் காரோட்டியும் ஏதோ ஒரு வகையில்—ஏதோ ஒரு மொழியில் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர் என்பது. இக்கருத்துப் பரிமாற்றமே மொழியாகும்.

'மொழி' என்ற சொல்லிற்கு மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தன்னுடைய கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பது என்ற

குறுகிய விளக்கத்தோடு விட்டுவிடாமல் சைகையாலோ, படத்தாலோ, குறியீட்டாலோ ஒரு கருத்தைப் பிறருக்குத் தெரிவித்தாலும் அதுவும் மொழியேயாகும் என்ற பரந்த விளக்கமே பொருந்தும். எனவே, ஒருவர் அல்லது ஒன்று முறையே மற்றொருவர் அல்லது மற்றொன்று புரிந்துகொள்ளுமாறு கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதே மொழி என்று கூறலாம். கருத்தைப் புலப்படுத்தும் முறையோ வழியோ எவ்வாறு இருப்பினும் கருத்தை இருவர் புரிந்துகொண்ட மாத்திரத்திலேயே மொழியின் செயல் நிறைவு பெற்றுவிடுகிறது.

இன்றைய மொழி மனித வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே மனிதன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய உணர்வோடு முயன்றுவந்த முயற்சியின் முற்றிய வளர்ச்சியேயாகும். மொழியின் இத்தகைய வளர்ச்சிக்கும், மொழியை ஆராய்கின்ற மொழியியலின் வளர்ச்சிக்கும் அடிகோலிய இலக்கண நூலாரும் மொழி நூலறிஞரும் மொழியமைப்பைப் (Structure of Language) பற்றி எவ்வளவோ கருத்துவேறுபாடுகள் கொண்டிருக்கின்றனர். இருந்தபோதிலும், மனிதனின் மொழித் தோற்றத்தைப் பற்றிய பிரச்சினை இன்னும் ஆய்வுக்குரிய பிரச்சினையாகவே இருக்கிறது என்ற கொள்கையில் ஒருமித்த மனத்தோடு ஒன்றுபடுகின்றனர்.

மொழி எவ்வாறு தோன்றியது என்றகேள்வி இன்றைய விஞ்ஞான உலகத்தில் எழுப்பப்பட்டதன்று. இக்கேள்வியின் வயது பல நூற்றாண்டுகளாகும். அறிவைத்தேடி அலைந்த பழங்காலத்து மக்களே இக்கேள்விக்கு விடைகாண முயன்றனர் என்பதை நாம் மொழி வரலாற்றில் பார்க்கிறோம். மொழி வரலாற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற பழங்காலத்து மக்களின் அறிவுத்தாகமே மொழியின் தோற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கு அடிப்படையாகியது எனலாம்.

மொழி கடவுளால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பரிசு என்ற புராணக் கொள்கையின் எல்லைக்கு வரம்பில்லை. உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழுகின்ற மக்களின் நாகரிகத்திற்கேற்பவும், பண்பாட்டிற்கேற்பவும் இப்புராணக்கொள்கை பல்வேறு கதை வடிவங்களில் வழங்கி வருகிறது. பதினேழாம் நூற்றாண்

டில் வாழ்ந்த சுவீடன் மொழி நூலறிஞர், ஈடன் தோட்டத்தில் கடவுள் சுவீடிஷ் மொழியைப் பேசினர் என்றும். ஆதாம் டேனிஷ் மொழியைப் பேசினன் என்றும், பாம்பு பிரெஞ்சு மொழியைப் பேசியது என்றும் கூறுகிருர். தமிழ்நாட்டிலும் இதைப்போல் வழங்குகின்ற புராணக் கதைகள் கணக்கிலடங்கா தவை. சிவபெருமான் பாணினிக்கு வடமொழியையும் அகத்திய ருக்குத் தமிழ்மொழியையும் போதித்தார் என்ற புராணக் கதை பரவலாகப் பேசப்படுகிறது. மேலும், வடமொழியிலிருந்தே உலகின் எல்லா மொழிகளும் தோன்றின என்ற கருத்தும் நம் நாட்டு மக்களிடையே உண்டு. இதைப்போல் கி. பி. 1934–ஆம் ஆண்டு நடந்த துருக்கிய மொழியியல் கருத்தரங்கு ஒன்றில் உலகிலுள்ள எல்லா மொழிகளும் துருக்கிய மொழியிலிருந்தே பிறந்தன என்ற கொள்கை தீவிரமாக விவாதிக்கப்பட்டது. இவ் வாறு மொழியின் பிறப்புப்பற்றி இன்று ஏராளமானகோட்பாடு கள் மொழி நூலறிஞரிடையே வழங்கி வருகின்றன. சில வேளை களில் இக்கோட்பாடுகள் மொழி நூலறிஞர்களும் கற்பனைவளம் மிக்கவர்களே என்று காட்டிவிடுகின்றன. அறிவியல் கண்ணேட் டத்தோடு ஆய்வோருக்கு இக்கொள்கைகள் கற்பனைக் கதை களாகவே தோன்றுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஜெர்மானிய மொழி நூலறிஞர் வில்கம் உண்ட் என்பவர் இக்கோட்பாடுகளை இருபெரும் பிரிவுகளாகப் பகுத்தார். இதன் அடிப்படையில் மொழியின் இருவடிவங்களாகிய ஒலியும் சைகையும் மொழியைப் பற்றிய கோட்பாட்டில் முக்கிய இடம் வகித்தன. இவை மொழி யைப் பற்றிய பல கோட்பாடுகள் மேலும் தோன்றுவதற்கு ஆதாரமாக அமைந்தன.

பழைய கிரேக்க தத்துவ ஞானிகளே முதற்கண் மொழி யின் தோற்றத்தை ஆராயத் தலைப்பட்டனர். எனவே மொழித் தோற்றம் பற்றிய கோட்பாடுகள் அறிவியல் நோக்கில் அமை யாது தத்துவ ஞானத்தையே அடிப்படையாகக் கொண்டிருந் தன. மேலும், மொழியின் தோற்றத்தைப் பற்றிய இவ்வாராய்ச் சியே மொழி என்றால் என்ன என்ற கோட்பாட்டிற்கு விளக்கம் கூறும் ஆராய்ச்சியாகப் பின்னர் மாறியது.

மொழி மனிதனுக்குஇயற்கையாகக்கைவரப்பெறுகிறது

என்றும், அது மனிதனுக்கு இயல்பாகவே அமைகின்ற தேவை (Inherent necessity) என்றும் கிரேக்க தத்துவ ஞானிகளான பித்தகோரஸ், பிளேட்டோ, ஸ்டாயிக்ஸ் ஆகியோர் கூறுகின்றனர். எட்வர்டுசாபிர் என்ற மொழி நூலறிஞர் இக்கருத்தை மறுக்கிறார். குழந்தை நடைபழகுவதற்காகப் பெற்றோரின் துணையையோ அல்லது மற்றவர்களின் உதவியையோ நாடுவதில்லை. பிறப்பிலேயே அமைந்துவிட்ட தசையுறுப்புக்களின் அமைப்பில் குழந்தை இயல்பாகவே நடக்க ஆரம்பித்துவிடுகிறது. இம்முயற்சிக்குக் குழந்தையின் சமுதாயச் சூழ்நிலை எந்தவிதத்திலும் பொறுப்பாகாது. ஆகவே, நடை பழகுவது குழந்தைக்கு இயல்பாகவே (Inherent) கைவரப்பெறும் பழக்கம். ஆனால் மொழி அவ்வாறன்று*. குழந்தையின் மொழி வளர்ச்சிக்கு அதனுடைய சமுதாயச் சூழ்நிலையே காரணமாகும். இச்சூழ்நிலையிலிருந்து ஒரு குழந்தையைப் பிரித்து வைத்து வளர்த்து வந்தால் அக்குழந்தை நடக்கப் பழகிவிடலாம். ஆனால், பேசிப் பழகத் தெரியாது.

மொழியே மனித இனத்தை விலங்கினத்தினின்றும் வேறுபடுத்துகிறது. தன் எண்ணங்களை மனிதன் பிறருக்குத் தெரிவிக்க முற்படும்போது அவன் உபயோகிக்கின்ற ஒழுங்கான மொழியைப்போல் விலங்குகள் உபயோகிப்பதில்லை. சூழ்நிலைகளுக்கேற்பத் தன்னுடைய எண்ணங்களைத் தெரிவித்துக்கொள்வதற்கு மனிதன் கையாண்டு கொள்கின்ற ஒரு கருவியாகவே மொழி பயன்படுத்தப்படுகிறது. புதிய சூழலுக்குத் தகுந்தவாறு புதிய எண்ணங்கள் மனிதனுடைய மனத்திலே தோன்றுவது இயற்கை. அவற்றை மொழியால் பிறருக்கு உணர்த்துகின்ற ஆற்றலே மனித இனத்திற்கே உரிய தனிப்பெரும் சிறப்பு.

---

*. In a very real sense the normal human being is predestined to walk, not because his elders will assist him to learn the art, but because his organism is prepared form birth, or even from the moment of conception, to take on all thosc expendititures of nervous energy and all those muscular adaptations that result in walking. To put it concisely, walking is an inherent, biological function of man. Not so language. Edward Sapir, Language, A Harvest Book, Harcourt, Brace and Company, New York, 1921. PP. 3–4.

சிறு குழந்தை அரற்றுகின்ற ஒலிகளும் விலங்குகளின் ஒலிகளும் ஒன்றே. இவ்வொலிகளுக்குப் பொருளில்லை. ஆனால், வயது செல்லச்செல்லக் குழந்தை அதனுடைய மொழிச் சூழலுக்கேற்ப மொழியைக் கற்றுக்கொள்கிறது. விலங்குகளின் மொழி பொருளற்ற ஒலியளவிலேயே நிறைவுபெற்று விடுகிறது. ஆனால் விலங்குகளும் தம் எண்ணங்களைப் பிற விலங்குகளுக்குத் தெரிவிக்கப் பல்வேறு சைகைகளையும் குறிப்பிட்ட ஒலிகளையும் உபயோகிக்கின்றன என்று அறிவியலார் நம்புகின்றனர். எடுத்துக்காட்டாக, தேனீ தன் எண்ணத்தைப் பல்வேறு கோணங்களில் நடனம் ஆடிப் பிற தேனீக்களுக்குத் தெரிவிக்கிறது. இச்சைகைகளின் மூலம் தேன் கிடைக்கும் திக்கு, தேன் கூட்டிலிருந்து அவ்விடத்திற்குச் செல்ல வேண்டிய தூரம் ஆகிய பல செய்திகளை அவை எளிதாகப் புரிந்துகொள்கின்றன. இத் தேனீயின் மொழி மற்றொரு தேனீயால் மட்டுமே புரிந்துகொள்ள முடியுமே தவிரப் பிற பிராணிகளால் புரிந்துகொள்வதற்கியலாது. இவ்வாறே ஒவ்வொரு விலங்கினமும், பறவையினமும், பிராணி இனமும் தமக்குள் பல்வேறு முறைகளில் தம் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்கின்றன.

குரங்கினத்தின் மொழியை ஆய்ந்த ஆராய்ச்சியாளர் பலர் குரங்கினத்திற்கே புரிகின்ற ஒரு சைகை மொழியை ஒவ்வொரு குரங்கும் தன் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ள உபயோகிக்கின்றது என்கின்றனர். எடுத்துக்காட்டாக, ஒரு குரங்கு மற்றொரு குரங்கோடு சேர்ந்து செல்ல விரும்பினால் அது அக்குரங்கின் கையை இழுத்து, நடப்பதுபோல் சைகையும் காட்டுகிறது. குரங்கினத்தின் மொழியைப் பற்றிய இவ்வாராய்ச்சிகள் இக்குரங்கினத்தின் பல்வேறுபட்ட ஒலிக்கூறுகளும் மனித மொழியின் ஒலிக்கூறுகளும் ஒன்றே எனவும், மனிதனைப்போல் அவ்வொலிகளை உச்சரிக்க இயலாமையே இவ்வொலிக் கூறுகளை மனித மொழியினின்றும் வேறுபடுத்துகிறது என்றும் கூறுகின்றன. கார்னர் என்பவர் மனிதக் குரங்குகளின் மொழி ஓரசைகளைக்கொண்ட இலக்கணமில்லாத ஒரு மொழி என்று குறிப்பிடுகிறார். இவ்வோரசை ஒலிக்கூறுகளைக் கற்றுக்கொள்வதன் மூலம் மனிதன் குரங்கோடு உரையாட முடியும் என்கிறார் இவர். சில மொழி நூலறிஞர்கள் முப்பத்திரண்டு ஓரசை ஒலிக்கூறுகளை இம்மனிதக் குரங்குகள் உச்சரிக்க முடியும் என்று ஆராய்ந்திருக்

கின்றனர். ஆனால் மனிதனின் மொழியோ ஒரு குறிப்பிட்ட எல்லையில் நில்லாது அவன் மனத்தகத்தே வளருகின்ற எண்ணங்களுக்கேற்பப் பல்வேறு புதிய வாக்கியங்களைப் படைக்கின்ற ஆற்றல் பொருந்திய கருவியாகும்.

இத்துறையில் பிற்காலத்தில் எழுந்த ஆராய்ச்சிகள் பல விலங்குகள் தம் எண்ணங்களைத் தெரிவிக்கச் சைகைகளையே உபயோகிக்கின்றன என்றும் அச்சைகைகளுக்கு மனத்தில் எந்தவித உள்ளமைப்பும் (Internal Structure) இல்லை என்றும் கூறுகின்றன. சொன்னதைச் சொல்லும்கிளி ஒரேவார்த்தையைப் பல தடவை திரும்பத் திரும்பக் கூறிவிடலாம். ஆனால் ஒரு புதிய சூழ்நிலைக்கேற்ப எந்தவித மொழியையும் கிளியால் உபயோகப் படுத்த முடியாது. எனவே, உணர்வுகளின் தூண்டுதலிலேயே (Stimulus) விலங்குகள் பொருளற்ற ஒலிகளை ஒலிக்கின்றன. மனிதனோ இவ்வுணர்வுகளின் தூண்டுதல் இல்லாமலேயே தன் எண்ணங்களைப் பிறருக்கு எளிதாக மொழியால் உணர்த்திவிட முடியும். சுருங்கக் கூறின் பேசுவது என்பது புதிய சூழ்நிலை களுக்குத் தகுந்தவாறு மொழியில் புதுமையைப் புகுத்துவதே யாகும்.

குழந்தை எவ்வாறு மொழியைக் கற்றுக்கொள்கிறது என்பது இன்னும் புதிராகவே இருக்கிறது. வியக்கத்தக்க முறையில் எந்த ஆசிரியரின் துணையுமின்றிச் சுற்றுப்புறச் சூழலுக்குத் தகுந்தவாறு அது எவ்வாறு தன் சமுதாயத்திலுள்ள அங்கத்தினர்களோடு உறவாடுகிறது? இக்கேள்விக்குப் பதில் கூறும் முகத்தான் இன்று மொழியியல் துறையில் அறிவியலே முக்கியப் பங்கு கொள்கிறது. உளவியலாரும் மொழி நூலறிஞரும் இதன் பொருட்டு நடாத்திய ஆராய்ச்சிகள் இன்று பல உண்மைகளைத் தெளிவாக்கியிருக்கின்றன.

எதையும் முழு ஆதாரமாகக்கொண்டு குழந்தை மொழியைக் கற்பதில்லை. குழந்தையின் மொழி வளர்ச்சிக்கு ஆதாரமாகப்பல அமைகின்றன. குழந்தையின் சிறுபருவத்தில் அதனுடைய மழலை மொழிக்குத் தக்கபடி பெற்றோர் மொழியைச் சொல்லித்தருகின்றனர். ஒலியளவிலோ பொருளளவிலே குழந்தை தவறு செய்யும்போது அத்தவற்றைத் திருத்துகின்றனர். இப் பயிற்சி குழந்தையின் பிந்திய மொழி வளர்ச்சிக்கும் மழலை

மொழிக்கும் ஒரு பாலமாக அமையும் என்று நாம் நம்புகிறோம். ஆனால், இப்பயிற்சிக்குக் குழந்தையின் மொழி வளர்ச்சியில் எவ்விதப் பங்குமில்லை என்றே அறிவியலார் கருதுகின்றனர். இதன் பொருள் குழந்தை தானாகவே புதிதாக ஒரு மொழியைத் தனக்கெனக் கண்டுபிடித்துக் கொள்கிறது என்பதன்று. முன்னர்க்கூறியதுபோல் ஒருகுழந்தையைச் சமுதாயச்சூழலினின்றும் அப்புறப்படுத்தி வளர்த்து வந்தால் அக்குழந்தை எந்த மொழியையும் கற்றுக்கொள்ள முடியாது. மாறாக, ஒரு மொழியையே பேசுகின்ற ஒரு சமுதாயத்தில் அக்குழந்தை வளர்க்கப்படுமானால் அம்மொழியை அக்குழந்தை எளிதாகக் கற்றுக்கொள்ளும். எனவே, குழந்தையின் மொழி வளர்ச்சிக்கு அதன் சுற்றுப்புறச் சூழலே அடிப்படையாக அமைகிறது எனலாம். இதைப் பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

மொழியைப் பற்றிய பல்வேறுபட்ட இவ்வாராய்ச்சிகளின் முடிவாக மொழி என்றால் என்ன என்பதற்குப் பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. மொழியின் தொடக்க காலத்தில் மனிதன் தன் எண்ணங்களைத் தெரிவிக்கப் பலவகை சைகைகளையே மொழியாகக் கொண்டிருந்தான் என்பதைப் பார்த்தோம். பிற்காலத்தில் அவனால் வளர்க்கப்பட்ட மொழி இச்சைகைகளையும், பொருளுள்ள குறியீடுகளையும் நீக்கிவிட்டு அவற்றிற்கு ஒலி வடிவமும் வரிவடிவமும் கொடுத்தது என்பர் மொழியாராய்ச்சியாளர்களில் பலர். சிலர் இச்சைகைகளுக்கும், குறியீடுகளுக்கும்,மொழிக்குமிடையே எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பர். மேற்கூறிய ஒலி வடிவங்களின் சீரான அமைப்பே மொழியமைப்பில் அமைக்கப்பட்ட காரணகாரியங்களின் விளக்கத்திற்குட்படாத ஒலியுருவங்களாகும். இதையே டிராகர் என்ற மொழி நூலறிஞர் "மொழி என்பது மனித இனம் தன் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கும் பொருட்டு உபயோகிக்கின்ற காரணகாரியங்களின் விளக்கத்திற்குட்படாத ஒலியுருவங்களின் சீரான அமைப்பே"2 என்கிறார். பிளாக் என்ற மொழிநூலறிஞர்

---

2. A Language is a System of arbitrary vocal symbols by means of which a social group Cooperates. B. Bloch and G L. Trager, Outline of Linguistic Analysis; Baltimore (Md.), 1942.

மனித இனம் தன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கென மரபோடு இயைந்த செவியால் உணரக்கூடிய ஒலி வடிவங்களின் சீரான கூட்டமைப்பே மொழி'' 3 என்று குறிப்பிடுகிறார். மொழியியலில் அறிவியலின் பங்கு வளர வளர மொழியைப் பற்றிய விளக்கங்கள் பல்வேறு துறைகளில் படரத் தொடங்கின. இவற்றைப் பின்னர் விரிவாகக் காணலாம்.

தமிழ் இலக்கண நூலாசிரியர்களோ அல்லது பிற்காலத்தில் வளர்ந்த மொழி நூலறிஞர் மரபினரோ மொழியைப் பற்றி எந்தவிதக் கோட்பாட்டைக் கொண்டிருந்தனர் என்பது இன்னும் தெளிவாகவில்லை. இன்று நமக்குக் கிடைக்கின்ற தொல்காப்பியம் முதலாகப் பல இலக்கணங்கள் இலக்கண நூலார் மொழியைப்பற்றி ஏதோ ஒரு அடிப்படைத் தத்துவம் கொண்டிருந்தனர் என்பதை இலைமறைகாயாகக் காட்டுகின்றன. மொழியின் இலக்கணக் கூறுகளைப் பகுத்தாராய்வதிலும், அவைகளுக்கு விரிவான விளக்கம் வரைவதிலுமே இலக்கண நூலாரும் உரைகாரரும் ஆழ்ந்த கவனம் செலுத்தி வந்ததால் மொழியைப் பற்றிய கோட்பாட்டில் கவனம் செலுத்த இயலாது போயிற்று. இன்னும் விரித்துக் கூறினால், மொழியை முழுப்பொருளாகப் போற்றிவந்த பண்பைவிட மொழியுறுப்புக்களை நுணுகி ஆய்ந்த ஆராய்ச்சிப் பண்பே இவர் தம்மிடையே மேலோங்கி வளர்ந்து வந்தது. இதன் விளைவாக, மொழியைப் பற்றிய கோட்பாடு இன்னும் விளக்கப்படாத ஒரு பகுதியாகவே நிற்கிறது.

இலக்கணப்பகுதியில் அடங்காது எஞ்சி நின்ற சில இலக்கண அமைப்பில் உண்டான சில மாறுதல்கள், அவைகளின் வளர்ச்சி இவற்றை மொழியியல் அடிப்படையில் மொழி

---

3. The totality of the conventional auditory signs by which the members of a speech-Community interact. B. Bloch, A Set of Postulates for the Science of Language, Language vol 24, 3-46, 1948

யியல் கட்டுரைகளாக ஆக்கித்தந்தனர். 4 இவ்வளர்ச்சியே தமிழ் மொழியில் பிற்காலத்தில் நல்லதொரு இலக்கண நூல் தோன்றுமைக்கு முக்கிய காரணமாக அமைந்தது எனலாம்.

நன்னூலிற்குப் பின்னர் இன்றுவரை தமிழ் மொழிக்கென ஒரு சிறப்பான இலக்கணம் தோன்றவில்லை. பிற்காலத்தில் எழுதப்பட்ட 'இலக்கண விளக்கம்', 'இலக்கணக்கொத்து' ஆகிய சிற்றிலக்கணங்கள் நூலமைப்பில் கையாளப்பட்ட மொழியிலும் எடுத்துக்காட்டுக்களிலும் சிறந்த பல மாற்றங்கள் கொண்டிருந்தன. இருந்தபோதிலும் இலக்கணத்திற்கில்லாத ஒரு கவர்ச்சியும் புதுமையும் மொழியியலுக்கு இருப்பதாலேயே மொழியில் வளர்ந்துவிட்ட சில புதிய இலக்கணக் கூறுகளுக்கு மொழியியல் அடிப்படையிலேயே பழைய இலக்கண மரபில் இல்லாது விளக்கம் தந்தனர் மொழி நூலறிஞர். 5 எனவே, இன்னும் பல ஆண்டுகள் சென்றாலும் இன்றைய தமிழ்க்கென யாரும் ஒரு புதிய இலக்கண நூலைப் பழைய மரபுகளுக்கேற்ப இயற்றப்போவதில்லை என்று கூறலாம்.

இன்றைய மொழியியலின் வளர்ச்சியில் அறிவியலின்

---

4. இக்கட்டுரைகளைச்சென்றஇதழில் குறிப்பிட்டபடி இலக்கண விளக்கக் கட்டுரைகளாகக் கொள்ளலாம். மொழியியல் அடிப்படையில் இலக்கணக் கூறுகளுக்கு மேலும் விளக்கம் கொடுக்கின்றவைகளே இக்கட்டுரைகள். இவை மொழியாராய்ச்சியாளர்–1, மொழியாராய்ச்சியாளர்–2 என்ற இரு பிரிவுகளின் கீழ் முறையே இலக்கண விளக்கக் கட்டுரைகளும், மொழியியற் கட்டுரைகளும் பாகுபடுத்தப்படுகின்றன. இதன் பொருள் இவ்விரு வகையான கட்டுரை ஆசிரியர்களைப் பாகுபாடு செய்வதன்று. ஏனெனில் ஒரே ஆசிரியர் இரு தலைப்புக்களிலும் கட்டுரை எழுதியிருக்கலாம். எனவே, மேற்கூறிய பாகுபாடு கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டதே தவிர கட்டுரையாசிரியர்களை அடிப்படையாகக் கொண்டதன்று என்பதை இங்கே தெளிவுபடுத்த வேண்டும்

5. இவ்விலக்கண விளக்கம் சிறப்பாக இரண்டு முறைகளில் அமைகின்றன. ஒரு முறை, இலக்கணத்திலுள்ள நூற்பாக்

பங்கை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இன்றைய அறிவியல் வளர்ச்சி அக்காலத்தில் இல்லை.

மனிதனின் சில தேவைகளுக்காக மொழியை அறிவியல் கண்ணோட்டத்தோடு நோக்கும் காலம் இக்காலம். மொழி கம்ப்யூட்டர்களின் தோற்றம், திக்குவாயர்களுக்குக் கொடுக்கப்படும் சிகிச்சை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மொழியை அறிவியல் கண்ணோடு நோக்கிய இம் முயற்சி மொழியைப் பற்றிய பல்வேறு உண்மைகளைத் தெரிந்துகொள்ள உதவிற்று. தத்துவஞானிகள் மொழியை விளக்க முற்பட்ட காலத்திற்கு மாறாக இன்று உளவியலாரும், பௌதீக இயலாரும், கணிதவியலாரும் மொழியைப் பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

களை உரைகாரர் கொண்ட விளக்கத்தோடு எடுத்துக் கொண்டு மொழியியலில் இது இப்பெயரால் வழங்கப்படுகிறது என்பதும், மொழியியலில் இது இவ்வாறு பாகுபடுத்தப்படுகிறது என்பதுமாகும். இம்முறையில் எழுதப்படுகின்ற கட்டுரைகள் பொதுவாகத் தமிழ் இலக்கணத்தை ஆங்கில இலக்கணத்தோடு இனங்கண்டு கொள்பவைகளாகவே அமைகின்றன.

இரண்டாவது ஆய்வுமுறை வரலாற்று இலக்கண விளக்க முறையாகும். தொல்காப்பியர் காலத்துத் தமிழ் மொழியின் ஒரு குறிப்பிட்ட இலக்கண வடிவத்தை எடுத்துக்கொண்டு காலவோட்டத்தில் அவ்விலக்கண வடிவில் உண்டான மாற்றங்களை விளக்கி, அவ்விலக்கண வரம்பிற்கு உட்படாது வளர்ந்துவிட்ட புதிய வளர்ச்சிக்கு மொழியியல் அடிப்படையில் புதிய விளக்கம் கொடுப்பதே வரலாற்று இலக்கண விளக்கமுறை என்று இங்குப் பொருள் கொள்ளப்படுகிறது.

தமிழ் மொழியில் மட்டுமல்லாது ஏனைய மொழிகளின் இலக்கண விளக்கக் கட்டுரைகளிலும் இவ்விரு ஆய்வு முறைகளைக் காணமுடிகிறது. இவ்விரு முறைகளிலும் எது சிறந்தது என்பதோ எது சரியானது என்பதோ இக்கட்டுரையின் நோக்கமன்று.

தமிழ் நாடகமேடை அன்றும் இன்றும்

—*—

ஏ. என். பெருமாள்

தமிழ் ஆராய்ச்சித்துறை, கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்

நாடகம், உலக வாழ்க்கையின் படமாகவும், மக்கள் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களை உள்ளவாறு எடுத்துக் காட்டும் கலையாகவும், உலகியலின் உண்மை நிலையை எதிரொலித்துக் காட்டுங் கண்ணாடியாகவும் விளங்குவதாக மேனாட்டு அறிஞர் சிசரோ கூறுகிறார். கீழ்நாட்டு நாடகக் கலைஞர் டி. கே. சண்முகம், நாடகத்தைக் கலைகளின் அரசு என்றும், பாமரர்களின் பல்கலைக் கழகம் என்றும் உணர்ச்சியைத் தூண்டி, உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பயன்படுத்தும் மகத்தான கலையென்றும், பாராட்டுகிறார். இத்தகைய சிறப்புடைய நாடகக் கலை தமிழ்நாட்டில் அன்று எவ்வாறு இருந்தது என்பதைக் கண்டு படிப்படியாகப் பல மாற்றங்களைப் பெற்று இன்றுள்ள நிலைக்கு எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காண முயலுவோம்.

வரலாறு கண்ட காலம்தொட்டு இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் தமிழோடு இணைந்து 'முத்தமிழ்' என்னும் சொல்லாட்சியைத் தந்தமை கொண்டு பண்டை நாளிலிருந்தே நாடகம் தமிழ்நாட்டில் சிறந்திருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் துணிகின்றனர். சங்ககாலம் முதற்கொண்டு தமிழ்நாட்டில் பல நாடகங்கள் நடிக்கப்பட்டும், மக்கள் அவற்றைக் கண்டும் களித்தும் இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் உறுதியாகக் கூறலாம். பல நாடக இலக்கண நூல்கள் முன்பு இருந்ததாக அடியார்க்கு நல்லார் தனது உரையில் பெயர்கள் பல தந்து கூறுகிறார். நாடகம், இலக்கியம் இல்லாத நாட்டில் இத்தகைய இலக்கண நூல் எழாது என்பது உண்மை. அக்காலத்து மக்கள் நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்தாரே அன்றிப் படித்து இன்புற விரும்பவில்லை. ஆகையினால் நாடக உரையா

டல்கள் நடிகர்களின் வாயுரையாக மக்களின் காதுகளை எட்டினவேயன்றி, நூல்களில் எழுதப்பட்டு வரி வடிவாகி அவர்களின் கண்களில் எட்டவில்லை. இதனை அண்மைக் காலத்திலுள்ள கோவிந்தசாமி ராவ் போன்றவர்களில் நாடகக் குழுக்களின் நடைமுறை வழக்கத்தைக் கொண்டே நிரூபிக்கலாம். இவர்களது நாடகங்களின் உரையாடல்கள் எழுதப்படாது வாயுரையாகவே இருந்தன. அதனுல் ஒரே நாடகம் இருமுறை ஆடப்பட்டபோது உரையாடல்கள் மாற்றங் கொண்டுள்ளதை நாடகம் காண்போர் அறிந்துள்ளனர். சமீபகால வழக்கம் சங்க கால வழக்கத்தைக் கற்பனைக் கண்கொண்டு காண உதவுகிறது. அக்காலத்தில் நாடகங்கள் அரங்கத்தில் நடிக்கப்பட்டன என்பது உண்மை. ஆனுல் நூல்களில் எழுதப்பட்டனவா என்பது ஐயம்.

முன்பு தமிழ் மக்கள் நாட்டியத்தையும், நாடகத்தையும் வேருகக் கருதவில்லை என்றுதான் கூறவேண்டும். தனிப் பாடல்களுக்குத் தகுந்த அசைவுகளைக் கொடுத்து ஆடுவதை 'நாட்டியம்' என்றும், ஏதேனும் ஒரு கதையைத் தழுவி அதற்குப் பொருத்தமான கோலம் பூண்டு ஆடுவதை 'நாடகம்' என்றும் அழைத்திருக்கிருர்கள். இரண்டிற்குமுரிய பொதுப் பெயராகக் 'கூத்து' என்ற சொல் வழங்கப்பட்டிருக்கிறது. கூத்து அகக்கூத்தென்றும், புறக்கூத்தென்றும் இரு பிரிவாக உள்ளது. பண்டைத் தமிழ்ப் பண்பாடு மலிந்துள்ள சாவா நாட்டில் அகக்கூத்து புறக்கூத்து என்பன இன்றும் வழக்கில்உள்ளன என்பது இதற்குச் சான்று பகரும். கல்வியறிவினுற் சிறந்தவர்கள் நூலாராய்ச்சியினுல் அறிந்து கொள்ளும் அரிய நீதிகளைக் கற்ருேரல்லாதருங் காட்சி மாத்திரத்தால் கண்டு உணரும்வண்ணம் செய்வது ஆடலாகும். ஆடலைக் கூத்தென்றும், நாடகமென்றும் தமிழர் வழங்குவாரென்று தமிழ் வளர்த்த தந்தை டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் கூறுகிருர். பாவேந்தர் பாரதிதாசன் தமிழ்நாட்டில் நாடகம் பிறந்த கதை பற்றிக் கூறுவதையுங் கேட்டுச் செல்வோம்.

'பழந்தமிழ் மக்கள் அன்னுள்
பறவைகள் விலங்கு வண்டு

தாழை மூங்கில் இசைத்த தைத்தாம்
தழுவியே இசைத்த தாலே
எழும் தமிழ் இசையே இன்பம்
எய்திக் குதித்ததாலே
விழியுண்ணப் பிறந்த கூத்து
தமிழே என் வியப்பின் வைப்பே!

இயற்கை வழி இன்ப இசையினையும் இணைத்த கூத்தினையும் பெற்று மகிழ்ந்தனர் தமிழர், என்பது அவருடையகருத்தாக உள்ளது.

நடனக் கலையில் சிறந்து விளங்கிய நங்கையரை நாடகக் கணிகையர் அல்லது கூத்தியர் என்றும், கூத்துக்கலையில் திறனுடைய கலைஞரைக் கூத்தர் என்றும் தமிழ் மக்கள் அழைத்தனர். இருபாலரும் கோவில், அரசவை, செல்வர்முன்றில், மக்கள் மன்றங்கள் ஆகியவற்றில் நாடகங்கள் நடத்தி மகிழ்வித்தனர். மூதுகூத்தனார், மதுரைத் தமிழ்க் கூத்தனார் என்னும் புலவர்களும், ஆடுகோட்பாட்டு சேரலாதன், ஆட்டனத்தி ஆகிய அரசியல் தலைவர்களும் இத்துறையில் புகழெய்திச் சிறந்தவர்கள் என்று தெரிகிறது. இத்தகைய சிறப்புடையோர் கூத்துக் கலையில் பங்கு கொண்டு புகழீட்டியதிலிருந்து இக்கலையானது அக்கால மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டிருந்த நிலை செவ்வனே புலனாகும். மேலும் நாட்டிய மாதருக்கு, அளிக்கப்படும் 'தலைக் கோலி' என்னும் அரச விருது நடன மாதராலும், சமூகத்தினராலும் கிடைப்பதற்கரிய பேறாக மதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகத்தைப் 'பேரவை' என்றும் தமிழர்கள் அக்காலம் வழங்கி வந்தனர். இதிலிருந்து அன்று பேரவைகள் பல நிறுவி அரங்குகள் அமைத்து அவற்றில் சூதாட்டம் நடத்தி, நாடகம் நயந்து, கலைவிருந்து உண்டனர் என்று தெரிகிறது. 'கூத்தாட்டவைக்குழாத் தற்று' என்னும் குறளடியும் இக்கருத்தினை வலியுறுத்தத் துணை புரியும். பெருநகர்களில் பொருள்படைத்தோர் தமது மாளிகையின் மேல்மாடத்திலுள்ள அழகிய நிலா முற்றத்தில் மகளிருடன் இருக்கைகொண்டு, துறக்கம் எய்தும்பொருட்டு இன்னிசை இயக்கத்தின் மத்தியில் நாடகங்கள் நிகழச் செய்து, களிபேருவகையுடன் இராப்பொழுதைக் கழித்தனர் என்பதைப்

பட்டினப்பாலை வாயிலாக அறிகிறோம். முத்தமிழும் முரணாது விரவும் சிறந்த நூலாம் சிலப்பதிகாரம். நாடகக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு நாடகக் காப்பியமாக விளங்குகிறது. துணங்கை, குரவை, வெறியாடல், சாக்கைக் கூத்து போன்ற பல கூத்துக்கள் ஆண்களும் பெண்களும் மகிழ்ந்து கூடிக் குலாவி ஆடுவனவாகும். அவை நிகழும்போது நாடும் நகரும் விழாக் கோலங்கொண்டு திகழும்.

தமிழ் நாடக வளர்ச்சியைப் பற்றி இன்னும் செவ்வையாக அறியத்தமிழ்நாட்டுச்சிற்றூர் நடனங்கள் துணைசெய்யும். கும்மி கோலாட்டம், கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, ஒயிலாட்டம், சக்கையாட்டம், தேவராட்டம், உறுமிக் கோமாளி ஆட்டம் கைச் சிலம்பு, கனியல், பொம்மலாட்டம், வைந்தனை ஆட்டம், தெருக்கூத்து, பகல்வேடம், புலிவேடம், பாகவத நடனம், குறவஞ்சி ஆகியவை சிற்றூர் நடனங்களில் சிறந்தவை. சில வகைக் கும்மிகளில் பங்கு பெறும் நடிகர்கள் தலைக்கு ஒன்றாகக் கதையில் வரும் பாத்திரங்களை ஏற்று, அவற்றிற்கு ஏற்ற ஆடையணிகளுடன் காட்சியளிப்பார்கள். அவர்கள் பாடல்களுக்கு இடையிடையே உரையாடல்கள் இருப்பதும் உண்டு. இவை நமக்குத் திரைகட்டி அரங்கில் ஆடும் நாடகத்தை நினைப்பூட்டுவதாக உள்ளன. வட்டமாகச் சுற்றி வந்து கோலாட்டம் ஆடிப் பாடுவதைத் 'தண்டலாஸ்யா' என்று தமிழ்நாட்டில் சில இடங்களில் கூறுகிறார்கள். இராஜஸ்தானத்தில் இத்தகைய ஆட்டத்தைத் 'தண்டியாரஸ்' என்று அழைக்கிறார்கள். தஞ்சையில் இருவர் சேர்ந்து மக்கள் பெரிதும்விரும்பும் புராணக் கதைகளைப் பொய்க்கால் குதிரையாட்டத்தில் நடித்துக் காட்டுவர். சில சமயங்களில் சத்திரபதி சிவாஜி போன்ற வரலாற்றுப் புகழுடைய வீரர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் நடித்துக் காட்டுவதுண்டு, கோவை மாவட்டத்தில் ஒயிலாட்டத்திற்கான கதைகள் பெரும்பாலும் முருகப்பெருமானையும்,. வள்ளியையும்பற்றியதாகவே இருக்கும். காத்தவராயன், மதுரைவீரன் போன்ற பழக்கமான கதைகளையும் ஆடிக் காட்டி மக்களின் பாராட்டுதலைப் பெறுவதும் உண்டு, கைச்சிலம்பு ஆட்டத்தில் இடை நடுவே உரை நடையும், விளக்கப் பகுதியும் விரவிவருவது குறிப்பிடத்தக்கதாகும். மதுரைவீரன் கிளைக் கதையான 'பொம்மி கல்யாணம்' இந்தக் கலைஞர்கள் மிகவும் விரும்பும் பகுதியாகும்.

பாவைகளைக் கொண்டும், பொம்மைகளை வைத்தும் பல கதைகளைப்பாடலோடு கூடி ஆட்டிக் காண்பிப்பதை இன்றும் பல ஊர்களில் காணலாம். நடிகர்கள் பங்குகொண்டு நடிக்கும் இன்றைய நாடக அரங்கம் இத்தகைய பொம்மை அரங்கத்திலிருந்து வளர்ந்திருக்க வேண்டும் என்று எண்ண இடமிருக்கிறது. இதிலிருந்துதான் நாடக இயக்குநரைச் 'சூத்திரதாரி' என்று அழைக்கும் சொல்லாட்சி வந்திருக்க வேண்டும். திருவிழாக் காலங்களில் சிற்றூர் அரங்கங்களில் நடிக்கப்படும் நடன நாடகம் தெருக்கூத்தாகும். கன்னியாகுமரியின் பக்கத்திலிருக்கும் அகத்தீசுவரத்தில் ஆண்டுதோறும் நடக்கும் அம்மன் திருவிழாவில் பல நாடகங்களை நடத்தி வந்துள்ளார்கள். இன்றும் அவ்வழக்கம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. முன்பு நாடக அரங்கம் முறையாக அமையாத காலத்தில் பிரகலாதா, அரிச்சந்திரா, மார்க்கண்டேயா போன்ற புராண நாடகங்களை, அம்மன் தெருச்சுற்றி உலா வரும்போது நான்கு தெருக்களிலும் நடிகர்கள் சிறுசிறு பாகங்களாக நடிப்பதைப் பற்றிப் பெரியார் ஒருவர் சொல்லிக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அன்று தெருக் கூத்தாகவே நடந்த நாடகங்கள் இன்று ஆலயத்தின் முன்பு அமைக்கப்பட்டுள்ள அரங்கத்தில் தற்கால வசதிகள் அனைத்தையும் பயன்படுத்திச் சீரும் சிறப்புமாக நடப்பதைக் காண்கிறோம். குறவஞ்சி நாடகம் குறம் என்ற நடனத்தின் வளர்ச்சியாகும், இப்பொழுது தஞ்சாவூர்க்கோயிலில் பிரமோற்சவத்தில் அஷ்டகோடிஎன்னும் எட்டாம் நாள் விழாவில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் கோயில் தேவதாசிகளால் ஆடப்பட்டு வருகிறது. குறவஞ்சி நாடகம் என்பது நொண்டி நாடகம்போன்று இடைக்காலத்தில் உருவான நாடகப் பிரிவாகும். அக்காலத்தில் தமிழ் நாடகங்கள் எல்லாம் இசைக்கே சிறப்பிடம் கொடுத்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

தஞ்சை நகரத்திலிருந்து 12 கல் தொலைவில் அமைந்து, சிறந்த கலையகமாக விளங்கும் மேலட்டூர் என்னும் ஊரில் பாகவத மேளா என்னும் ஒருவகை நாடகம் இன்றும் போற்றுவதற்குரிய முறையில் நடத்தப்படுவதை அறிகிறோம். இதற்குக் காரணம் சுமார் 200ஆண்டுகளுக்கு முன் இவ்வூரில் வாழ்ந்து சரித்திர நாட்டிய நாடகங்களை இயற்றிப் புகழ்பெற்ற வெங்கட்ராம சாஸ்திரியே ஆகும். இவரது நாடகங்களைப் பல ஆண்டுகளாக இவ்

ஆரில் விழாக்காலங்களில் நடத்தி வருகிறார்கள். இப்பாகவத மேளாவானது பாவம், ராகம், தாளம் ஆகியவற்றின் கூட்டுற வால் சிறப்புற்று ஒன்பான் சுவைகளும் திறம்பட அமைந்து விளங்குவதாகும். நாட்டிய இலக்கணத்தில் குறிப்பிட்டுள்ள நாயகன்—நாயகி பாவங்கள் கையாளப்படுவது நோக்குதற்குரி யது. ஆனால் இந்த நாடகங்களில் பெண்களை நடிக்க அனுமதிப்ப தில்லை.

இலங்கையிலுள்ள பட்டிகோலா என்ற இடத்தில் தமிழ் நாடோடி நாடகங்கள் சிறப்புற்றிருந்தமை பற்றி டாக்டர் வித் யானந்தன் விரிவாகக் கூறுகிறார். வடமோடி நாடகம், தென் மோடி நாடகம் என்று இருவகையான நாடோடி நாடகங்கள் அங்குச் சிறப்புற்றிருந்தன. அவற்றிலுள்ள இலக்கிய நயத்திற் காகவும், நாட்டாண்மைக் குறிப்புகளுக்காகவும் மக்கள் இன்றும் அவற்றை மதித்துக் காக்கின்றனர். கலைத்தன்மை மிகுந்துள்ள அந்நாடகங்களில் உரையாடலைவிட இசைக்கும் நடனத்துக்கும் மிகுந்த சிறப்பு உள்ளது. நாடோடி நாடகங்களில் குறிப்பாக நடனத்திற்கே முதலிடம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காண் கிறோம். இன்றைய தமிழ் நாடகமானது பலவிதமான நடனங்களின் திருந்திய வடிவமாக, இலக்கியம், இசை, நடனம் ஆகிய கலைகளில் கூட்டுச் சேர்க்கையுடன் கண்ணுக்கும், காதுக் கும் இன்பமளிக்கும் இணையற்ற கலையாக வளர்ந்துள்ளது என்று கூறலாம், சில அறிஞர்கள் நாடகமானது சிறிது சிறி தாக மரப்பாவைக் கூத்து, பொம்மலாட்டம், தோற்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து, நாட்டியம், நாட்டிய நாடகம், நாடகம் என்ற முறையில் வளர்ந்திருக்க வேண்டுமென்று நம்பு கின்றனர்.

இடைக்காலத்து நாடகங்கள் கதை தழுவிய கூத்துக்களா கவே இருந்தன. தஞ்சாவூர், திருவல்லிச்சுரம், திருக்கழுக்குன் றம், திருப்பாதிரிப்புலியூர், ஆத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகள் மூலம் இடைக்காலத் தில் தமிழ்நாட்டில் பல நாடகங்கள் நடத்தப்பட்டிருப்பதைஅறி கிறோம். இக்காலத்தில் கோயில் விழாக்களின் போதே நாட கங்கள் நடிக்கப்பட்டன. நடிப்போருக்குக் குறிப்பிட்ட ஊதியம் வழங்கியுள்ளதையும் சாசனங்கள் தெரிவிக்கின்றன. அவர்களின்

தலைவன் 'திருவாளன்' என்று அழைக்கப்பட்ட காரணத்தால் நாடகம் நடித்தல் சமூகத்தில் இழிவாகக் கருதப்படவில்லை என்பது தெளிவு. அவர்கள் நடித்த நாடகங்கள் மிகுதியும் புராணக் கதைகளாகவும், தலமான்மியக் கதைகளாகவும் இருந்தன. இதற்குப் பிந்திய காலத்தில் பாடல்கள் பெருவரவினவாகவும் உரைநடை சிற்சில இடங்களிலும் அமைக்கப்பட்டும் நாடகங்கள் நடந்தன என்பதை அறிகிறோம். முதலில் திபதை அல்லது தோடயம் என்னும் இரு வரிப் பாடலும் பின்னர் கட்டியங்காரனது வரவுமாக நாடகத்தின் தொடக்கம் அமைந்துள்ளது. இவற்றில் அங்கம், களம் ஆகிய பிரிவுகள் இல்லாதிருந்ததினால் கட்டியங்காரன் முதலிலிருந்து இறுதிவரை பாத்திரங்களின் வருகையைக் குறித்துச் சொல்லிக் கொண்டே வருவான். இறுதியில் 'தரு' என்ற பொது மங்கலப் பாடல் பாடப்படும். கல்வியறிவில் குறைந்தோர் இந்த நாடகங்களை நடத்தியமையால் பெரும்பாலும் பாடல்களும், ஆடல்களும் மிகையாகவும் பொருத்தமற்றவைகளாகவும் இருந்தன. நாடகம் இரவில் நெடுநேரங் கழித்துத் தொடங்கப்பட்டு விடியவிடிய நடந்து அலுப்பைக் கொடுப்பதாக அமையும். ஆடைப் புனைவு பொருத்தமற்றதாக இருந்தது. 18ஆம் நூற்றாண்டிலும், 19ஆம் நூற்றாண்டுமுற்பகுதியிலும் நாடகம் மிகுந்த இழிநிலையில் இருந்தது, நடிகர்களைக் கூத்தாடிக் கூட்டமாகவே சமூகம் மதித்தது.

கி பி. 1870 முதல் தமிழ் நாடகங்களுக்குத் திரும்பவும் சிறப்பு ஏற்படத் தொடங்கியது. தெருக் கூத்தாக இருந்தது அரங்க ஆட்டமாக மாறியது. திரைகள் கட்டப்பட்டு, விளக்குகள் தொங்கவிடப்பட்டுக் கலையழகுடன் நாடகமேடை தோன்றியது. கோவிந்தசாமி ராவ் என்னும் மகாராட்டிரர் மனமோகன நாடக சபையைத் தொடங்கித் தமிழ் நாடக உலகில் சில புது முறைகளைப் புகுத்தினர். 1891-ல் பம்மல் சம்பந்தமுதலியாரது அயராதுமுயற்சியின் பயனாகச் சுகுணவிலாஸ் என்ற அமைச்சூர் நாடகக் குழு ஏற்பட்டது. தமிழ் நாடக வரலாற்றில் ஒருபெரும் புரட்சியே இது முதல் தொடங்கியது. பாடல்கள் குறைக்கப்பட்டு உரைநடையின் பங்கு கூட்டப்பட்டது. நாடகம் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கப்பட்டு நள்ளிரவுக்கு முன் தூக்கத்துக்குப் பங்கமில்லாத நிலையில் முடிவுற்றது. தேவையற்ற முறை

யில் பண்ணோடு நெடுநேரம் இழுத்துப் பாடும் முறை அகன்றது. நாடகக் காட்சிக்குத் தக்க திரை தொங்கியது. இசைக் கருவி நாடகங் காண்போரது கண்களில் படாதவாறு மறைவிடம் புகுந்து தேவைக்குப் பொருந்த இசைத்தது. ஒளிப்பாய்ச்சலில் வியத்தகு மாற்றம் ஏற்பட்டதால் நாடக மெய்மை ஓரளவு காக்கப்பட்டது. பாத்திரங்களுக்குத் தகுந்த ஆடை அணிகளுடன் நடிகர்கள் மேடையில் தோன்றிக் காண்போரைக் கவர்ந்தனர். சூத்திரதாரன், விதூடகன்' மோகினிகள் வரும் வழக்கம் கைவிடப்பட்டது. நாடகச் சுருக்கம் அச்சிட்டு அவையோருக்குக் கொடுக்கப்பட்டது. மக்கள் மன்றத்திற்கு அடுக்காத 'அவையல் கிளவிகள்' அடியோடு அகற்றப்பட்டுக் கலை எழுச்சியோடு நாடகம் நிமிர்ந்தது. மேனாட்டு நாடக ஆசிரியர்களைப் பின்பற்றித் தமிழ் நாடகங்கள் அங்கம், களம் ஆகிய பிரிவுகளுடன் எழுதப் பட்டன. படிப்பதற்கும் நடிப்பதற்குமேற்ற நாடகங்கள் பல தமிழ்நாட்டில் இன்னும் வரவில்லை என்றாலும் தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்தவர்களாகச் சுந்தரம்பிள்ளையும், சம்பந்த முதலியாரையும் எடுத்துக் கூறவேண்டும். நாடகங்கள் நடிப்பதற்கும், மக்களை மகிழ்விப்பதற்குமே என்ற கருத்தைத் தமிழ் உலகிற்குக் காட்டியவர் சம்பந்தமுதலியார் ஆவர். இவர் ஆங்கில முறையை ஒட்டி மக்கள் பேசும் எளிய உரைநடையில் நாடகங்கள் எழுதித் தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிரளித்தார். இன்பியலாகவே நாடகம் முடிய வேண்டும் என்பதை மாற்றித் துன்பியலாகவும் அது முடியலாம் என்று புரட்சி செய்து வெற்றி பெற்ற தனிப்பெருமை சம்பந்தமுதலியாரையே சேரும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பெண்கள் தமிழ் நாடகங்களில் நடிக்க முன்வந்தனர்.

1920ஆம் ஆண்டுக்குமேல் இழிந்தோரே நாடகம் நடிக்கும் நிலைமாறி கற்றோரும், மேலோரும், சருத்தொருமித்துக் கலையார்வம் மிக்கு, நாடகங்களில் பங்கு கொண்டு நடித்தனர். கூத்தாடிகள் என்று எள்ளி இழித்துரைக்கப்பட்ட நாடக நடிகர்கள், கலைஞர்கள் என்று மக்களால் போற்றிப் புகழப்பட்டனர். பொழுதுபோக்கு மையமாக இருந்த நாடக அரங்கம் கலைக்கூடமாகவும், அறிவுக் கருவூலமாகவும், சீர்திருத்தச் சாலையாகவும் விளங்கிற்று. இன்னும் காட்சித் தெளிவுடனும், நடிப்புத் திறனுடனும், கலை நுணுக்கத்துடனும், ஒழுக்கத் தூய்மையுடனும்

சிறந்து விளங்கும் என்று நம்புவோம். முன்னேற்றத்துக்கு என்றும் முடிவில்லை! தமிழ் நாடகமேடை தனக்கெனச் சிறந்த தனித் தன்மை பெற்று ஓங்கித் திகழட்டும்! வேற்றுநாட்டாரும் வியக்கும் வண்ணம் வளரட்டும்! நற்றமிழ் நாடகக் கலை வாழ்க! *

---

* 5—7—1970 இல், திருவனந்தபுரம் அனைத்திந்திய வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது.

மூன்று.

பேராசிரியர். வ. பெருமாள், எம்.ஏ., பி.டி., எம்.ஆர்.ஏ.எஸ்.
தமிழ்ப் பேராசிரியர், முதல்நிலைக் கல்லூரி, உரிகம்;
கோலார் தங்கவயல் (மைசூர் மாநிலம்)

உலக வழக்கின்கண் 'மூன்று' என்னும் எண்ணிற்கு இருக்கும் சிறப்பு நிலையை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உலகம் என்னும் நில உருண்டை தானே இயங்காது. இதனை இயக்க ஒரு சக்தி வேண்டும், அச்சக்தியையே இறைவன் ஆண்டவன், கடவுள் என்று குறிப்பிடுகிறோம். இறை என்னும் சொல்லுக்கு 'நிலை பெறுதல்' என்று பொருள். என்றும் நிலை பெற்றிருப்பவன் இறைவன். 'ஆள்' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது ஆண்டவன். உலகம் எல்லாவற்றையும் ஆள்பவனே ஆண்டவன். கடவுள் என்னும் சொல்லைக் கட+உள் என்று பிரிக்கலாம். மனிதனின் மனம், மொழி, மெய் ஆகியவற்றைக் கடந்து அதே சமயத்தில் உள்ளத்திலிருப்பவனே கடவுள். இறைவன்: இறைவன் ஒருவனே, அவன் செயல்கள் மூவகைப்படும். இறைவன் படைக்கும்போது பிரமனாகவும், காக்கும்போது திருமாலாகவும், ஒடுக்கும் போது சிவனாகவும் காட்சியளிக்கின்றான். இம்மூன்று நிலையை மும்மூர்த்தி என்று சொல்வது மரபு. இம்மூவகைத் தொழிலை'முத்தொழில்' என்பர்.

ஒன்றேயான இறைவன் முக்குணங்களை உடையவனாக இருக்கின்றான், அவையாவன:- சத்து, சித்து, ஆனந்தம். இவற்றை முறையே உண்மை, அறிவு, இன்பம் எனலாம். உண்மை, பேரின்பம், பேரறிவு ஆகியவற்றின் உறைவிடமாக இருக்கின்றான் என்பதால் அவனைச் 'சச்சிதானந்தம்' சத்து+சித்து+ஆனந்தம் என மக்கள் போற்றுவாராயினர். இதனை

''சத்தாகிச் சித்தமாகி இன்பமாகி''
என்று வள்ளலார் வாயாரப் பாடியிருக்கிறார்.

இறைவன் மூன்று உலகங்களையும் காக்கின்றான். மேலுலகம் (வானவர்) நடு உலகம் (மக்கள்) கீழுலகம் (நரகம்) ஆகிய மூன்றும் மூவுலகமாம். இவை மூன்றையே 'சுவர்க்க மத்ய

பாதலம்' என்பர். ஒருவனேயான இறைவனைப் படைப்புக்கொருவனும், காத்தலுக்கொருவனும், அழித்தலுக்கொருவனுமாக ஆக்கியது போல் மூவருக்கும் ''முச்சக்தி''யை மனைவியாக்கினர். பிரமனுக்குக் கலைமகளும், திருமாலுக்குத்திருமகளும், சிவனுக்கு மலைமகளும் மனைவியராம்.

தெய்வ சக்திகள் பலவும் மூன்று சக்திக்குள் அடங்கும். அவைகளை ஞான சக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி என்பர். ஞான சக்தியைக் கலைமகளாகவும், இச்சா சக்தியைத் திருமகளாகவும், கிரியா சக்தியை மலைமகளாகவும் கூறுவர். இச்சக்திகளை வழிபடும் நாளே 'நவராத்திரி'. ஒவ்வொரு சக்திக்கும் மும்மூன்று நாளாகப் பகுத்து வழிபடுவர்.

சிவபெருமானுக்கு மூன்று கண்கள் உண்டு. சிவனை வழிபடுவர் சைவர் எனப்படுவர். வலக் கண்ணை மதியாகவும், இடக் கண்ணைக் கதிரவனாகவும், நெற்றிக் கண்ணை அக்கினி (நெருப்பு) யாகவும் கூறுவர். சைவசித்தாந்தம் முப்பெரும் உண்மைகளை விளக்கிக்கூறுகின்றது. அவையாவன பதி (இறைவன்) பசு (உயிர்) பாசம் (உலகம்). பதியென்பது ஆதியந்தமின்மை, உருவின்மை, குணங்குறியின்மை, வேண்டுதல் வேண்டாமை இன்மை, ஒப்புயர்வின்மை, எங்கும் நிறைந்த தன்மை, மனுதி தத்துவாதீதமாயுண்மை, ஆத்மாத்மகமாயிருத்தல் ஆகிய எண் குணமும் பெற்றிருத்தலாம். பசுவென்பது அளவிடற்கரியதும், நித்தியதத்துவமுள்ளதும், மலவிருளால் அழுந்தியிருந்து இறையருளால் பிறவி நீக்கப்பெற்று, புண்ணிய மேலீட்டால் முக்தியடைதலுமாம். பாசம் என்பது செம்பிற் களிம்புபோலச் சிவனைப் பற்றி அறிவு மறைத்து இடர்ப்படுவதாம். பொதுவாக ஏசமாகிய இறைவனைப் பதியென்றும், அநேகமாகிய ஆன்மாவைப் பசுவென்றும், ஆணவம், கன்மம், அசுத்தமாயை, சுத்த மாயை ஆகிய நான்கும் பாசம் என்றும் கூறுவர். இம்முப்பொருள் பாகுபாடு அறிவு அடிப்படையில் அமைந்துள்ளது. தானுகவே அறிபவன் இறைவன் (பதி) பிறர் அறிவிக்க அறிபவன் மனிதன் (பசு) அறிவித்தாலும் அறிய முடியாதது அஃறிணை (பாசம்).

இவ்விறைவனைக் காண இயலுமோவெனின் இயலும். இதற்குப் பிரணுயாமம் தேவையென்பர். அதாவது உயிர்

வளியை (பிராண வாயு) ரேசக, பூரக, கும்பகஞ்செய்தலாம். ரேசகம் என்பது மூச்சு விடுதல் பூரகம் என்பது மூச்சையிழுத்து உள்ளே வாங்கல், கும்பகம் என்பது வாங்கிய மூச்சை உள்ளே நிறுத்தல் என்பதாம், அதோடு மனம், வாக்கு, காயம், ஆகிய மூன்றும் தூய்மையாய் இருத்தலும் வேண்டும். இவற்றையே உண்மை, வாய்மை, மெய்மை என்பர் அறிஞர். உள்ளத்தின் தூய்மை உண்மை; மொழியின் தூய்மை வாய்மை; செயலின் தூய்மை மெய்மை. இம்மூவகைத் தூய்மையுமிருந்தால் இறை யருள் கிட்டும்.

உயிர்வளி அடக்கலில் மனிதர்க்கு மூன்று நிலையுண்டு. அவையாவன: இடகலை, பிங்கலை, சுழிமுனை. இடகலையென்பது இடது நாசியிலும், பிங்கலை என்பது வலது நாசியிலும், சுழிமுனை என்பது இரு துவாரங்களிலும் வரப்போகுதலாகும். இட கலையைச் சந்திரன் எனவும், பிங்கலையைக் கதிரவன் என்றும், சுழிமுனையை அக்கினி என்றும் கூறுவர். இதனையே அம்பல நடனமென்பர்.

"நடனமது பார்மனமே நயனத்திடை நடுவே
நடனமது நாணம் பதங்காலாம்—நடனம்
பதிமதிவித் தாய்மனமே பலகெதிவித் தாயெனவே
அதிவித சித்தாந்த மாடும்."

என்னும் பட்டினத்தடிகள் பாட்டு வலியுறுத்தலால் அறிக.

இறைவனே உலகத்தைப் படைத்தான் என்னும் ஆழ்ந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு சைவம்விளங் குகின்றது. இதனைச் சிவஞான சித்தியார் அறுதியிட்டு உறுதி யுடன் கூறுகிறது. ஒவ்வொரு செயலுக்கும் மூன்று கரணியங்கள் (காரணம்) உண்டு. முதற்கரணியம், துணைக்கரணியம், நிமித்த கரணியம், ஒரு பானையைக் கண்டவுடன் அதனை உருவாக்க மண், இயக்கும் கருவி (உருளை) குயவன் ஆகியவர் தேவை என்று எண் ணுகிறோம். மண் முதற் கரணியம், கருவி துணைக் கரணியம், குயவன் நிமித்த கரணியம். இறைவனில்லை என்பவர்களின் கூற்று குயவன் இல்லாமற் பானை மட்டும் இருக்கிறதென்பதற் கொக்கும். இதனை,

"காரிய காரணங்கண் முதறுணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் டிரிகை பண்ணு மவன்முத றுணை நிமித்தங்

தேரின்மண் மாயையா கத்திரிகை தன் சக்தி யாக
வாரியன் குலாலனுய் நின்ருக் குவனகில மெல்லாம்''

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

இறைவனுடைய தன்மைகளைக் கம்பஇராமாயணத்தில் இரணியன் வதைப்படலத்தில் பிரகலாதன் இரணியனுக்குக் கூறுவதாகக் கம்பர் கூறுகிருர்.

''மூன்று அவன்குணங்கள் செய்கை மூன்று
அவன் உருவம் மூன்று
மூன்றுகண் சுடர்கொள் சோதி
மூன்று அவன்உலகம் மூன்று
தோன்றலும் இடையும் ஈறும்
தொடங்கிய பொருள்கட்கு எல்லாம்
சான்றவன் இதுவே வேத
முடிவிது சரதம் என்ருன்.''

இப்பாடலின் கருத்துக் காண்போம். சாத்வீதம், இராசதம், தாமதம் மூன்று குணம்; படைத்தல், காத்தல், அழித்தல்.- மூன்று செய்கை. அயன், அரி, அரன் ஆகிய உருவம் மூன்று, சந்திரன், பகலவன், அக்கினி ஆகிய மூன்று சுடர். காருகபத்தியம், தக்கிணுத்தியம், ஆகவனீயம் ஆகிய மூன்று சோதி. சுவர்க்கம், மத்தியம், பாதலம் ஆகிய மூன்று உலகம். ஆதி, நடு. அந்தம் அற்றவன் என இறைவனை இவ்வுலகத் தோற்றப் பொருளெல்லாம் அவனே என்று காட்டுகிருர்.

மொழி:

காலத்தால் குன்ருது ஞாலத்தின் இருளகற்ற வந்த இன்றமிழ் உலக முதன் மொழியாதலின் அத்தொன்மொழியைப் பற்றி ஆய்வோம். தமிழ் மூன்று வகைப்படும். அவையாவன இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்பனவாம். இதனை 'முத்தமிழ்' என்றலும் உண்டு.

'தமிழ்' என்னும் சொல்லே மூவெழுத்துக்கொண்டது. 'த' வல்லினவெழுத்து; 'மி' மெல்லினவெழுத்து; 'ழ்' இடையின எழுத்தாக மூவினத்தும் மூவெழுத்துச் சேர்ந்து முத்தமிழின் சீர்மையை உலகில் கால்கோலச் செய்துவிட்டது.

பண்டைடயத் தமிழகம் மூவேந்தரால் ஆளப்பட்டது. எண்ணிறந்த மன்னர்கள் தொன்றுதொட்டுத் தமிழகத்தை ஆண்டாரெனினும் அவர்களுள் மூவேந்தர்களையேபெருமையாகக் கூறுவர். சேரர், சோழர், பாண்டியர் ஆகிய முத்திற அரசரே மூவேந்தர் என அழைக்கப்பெற்றவர் சோழர்களுக்குரியது புலிக்கொடி; சேரற்குரியது விற்கொடி; பாண்டியர்க்குரியது மீன்கொடி என அவர்கள் முக் கொடியுடையராய் வாழ்ந்துள் ளனர்.

தமிழ் எழுத்துக்களை மூவினமாகப் பிரிக்கலாம். அவை யாவன: வல்லினம், மெல்லினம், இடையினம் என்பனவாம். மக்களுக்கு அறிவுகொடுக்கும் நூல்களை முதல்நூல், வழிநூல், சார்புநூல் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இதனை, "முதல் வழி சார்பென நூன்மூன்றாகும்" என நன்னூல் நூற்பா அறிவிக்கின்றது. முதல் நூலென்பது அறிவின் திறங்கொண்டு முதன் முதலில் ஆக்கப்பட்டது. வழிநூலென்பது முன்னைய நூலின் கருத்தையொட்டி எழுதப்பட்டது. சார்பு நூலென்பது மேற் கூறிய இரு நூல்கட்கும் தொடர்புடையதாய்த் தனித்திருப் பது இதனைக் கீழ் வரும் நன்னூல் நூற்பாவால் அறியலாம்.

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்"
"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூலாகும்"
"இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடை நூலாகும்"
(நன்னூல்)

சமயங்கள் :-

நீள்நிலத்தே நிலைதடுமாறி மக்கள் அல்லலுற்ற ஞான்று திருத்திச் செம்மைப்படுத்தத்தோன்றியதே மதம். அதுநாளடை வில் பல்கிக் கிளைத்துக் காய்த்துக் கனிந்து பலவாகி ஒரளவுக்குக் குழப்பத்திலாழ்த்திற்று. சிவனை முப்பொருளாய்க் கொண்டு வணங்கும் சமயம் சைவம். அது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளை விளக்கும் சமயமாகும். வல்லானும் நல்லானு

மாகிய இயேசுவின் சமயமான கிருத்தவமும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என முப்பொருளைக் கொண்டது மன்னராகப் பிறந்து தன்னலங் கருதாது மக்களின் நன்னலத்திற்குப் பன்னல முடைய அரண்மனையைத் துறந்து அல்லற்பட்டு அமைதிகண்ட அறநெறியாளர் புத்தர். அவர் கண்ட புத்த சமயம் மூவகைக் கோட்பாடுகளைக் கொண்டது. அவையாவன: புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி என்பனவாம். வள்ளலார் வகுத்த சமரச சன்மார்க்கம் அன்பு, அருள், இரக்கம் ஆகிய முப்பண்பைக் கொண்டு விளங்குகின்றது.

உலகத்திலுள்ள பல சமயங்கள் ஆசையை அறுக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றன. ஆசைகள் பலவகைப்பட்டாலும் அவற்றை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று மூவகையாகப் பிரிக்கலாம். மண்ணாசையால் மதிகெட்டுத் தன் விதிவழியே மாண்டான் துரியோதனன் என்பதை விளக்குகின்றது பாரதம். பெண்ணாசையால் மாண்டான் இராவணன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது இராமாயணம். உலக இயக்கம் மூன்று காரணங்களையுடையதாக உள்ளது. அவையாவன: இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். பக்தியின் மேலீட்டால் முக்தியடையும் வழிக்கும் மூன்று ஊர்களைத் தலங்களாகக் கூறுவர். ஆரூரில் பிறக்க முக்தி (திருவாரூர்). தில்லையில் தரிசிக்க முக்தி (சிதம்பரம்). காசியில் இறக்க முக்தி என்பர்.

மருத்துவம் :

சித்த மருத்துவம் தமிழகத்தில் தோன்றிய தலைசிறந்த மருத்துவமாகும். இம்மருத்துவம் நாட்டு மருந்து, வீட்டு மருந்து பாட்டி மருந்து, பச்சிலை மருந்து, மூலிகை மருந்து எனப் பல பெயர்களால் குறிக்கப்படும். மருத்துவத்தில் மூன்றுக்குப் பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு.

சுக்கு, மிளகு திப்பிலி ஆகிய மூன்றும் கைகண்ட மருந்தாகும். அவற்றைத் திரிகடுகம் என்று பண்டைத் தமிழகச் சித்த மருத்துவ அறிஞர்கள் குறித்தனர். (திரிகடுகம் என்னும் பெயரால் தமிழில் ஓர் அறநூல் இருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.) இதனைத் திரிசூஷணம் என்றும் மருத்துவ இயலார் குறிப்பர்.

திரிபலை என்பது கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகிய வற்றைக் குறிக்கும். வேறு சிலவற்றைக் கீழே காண்க :-

திரிஜாதகம்	—	லவங்கப்பட்டை, லவங்கபத்திரி, ஏலம்.
திரிகாஷகம்	—	சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு.
திரிபத்திரி	—	லவங்கபத்திரி, ஜாதிபத்திரி, தாளிசபத்திரி.
திரிநிம்பம்	—	வேம்பு, கறிவேம்பு, நிலவேம்பு.
திரிகாயம்	—	பெருங்காயம், வெங்காயம், மிளகு.
திரிமதம்	—	வாய்விடங்கம், சித்திரமூலம், கோரைக்கிழங்கு
திரிகடகம்	—	இந்துப்பு, திப்பிலி, பீதரோகணி.
திரிகோலம்	—	சந்தனம், சிவதை, வெள்ளைக்குங்கிலியம்,
திரிமூலம்	—	சிறுதேக்கு, திப்பிலிமூலம், சித்திரமூலம்.
திரிசமம்	—	கடுக்காய், சுக்கு, வெல்லம்.
திரிமதுரம்	—	நெய், தேன், கற்கண்டு.
திரிநெய்	—	பசுநெய், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய். இதனை முக்கூட்டெண்ணெய் என்றும் கூறுவர்.
திரிமஞ்சள்	—	மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள்.
திரிலவணம்	—	இந்துப்பு, வெடியுப்பு, கரியுப்பு.
திரிலோகம்	—	தங்கம் தாம்பிரம், வெள்ளி.
திரிபழகம்	—	பால் நெய், தேன்.
முக்கனி	—	மாம்பழம், வாழைப்பழம் பலாப்பழம்.

குறள் :

உலக நூல்களில் தமிழுக்குத் தனிப்பெருமை அளிப்பது திருக்குறள். இது 'வெண்பா' என்னும் மூவெழுத்துப் பாவின் இலக்கணத்திற்கொப்பக் 'குறள்' என்னும் மூவெழுத்து நூலாக ஆக்கப்பட்டது. குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் (இன்பத்துப்பால்) என முப்பிரிவுகளைக் கொண்ட முப் பாலாக விளங்குகிறது. திருக்குறளின் சீர்மையை வியந்த அறிஞர் பலர் பாடியுள்ள நூல் ஒன்று உண்டு. " திருவள்ளுவ மாலை " என்பதே அந்நூலின் பெயர். இம்மாலையில் சாத்தனார் பாடியதாக வரும் பாடலைஈண்டுக் காண்போம் :

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றான்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்."

மும்மலை — கொல்லிமலை, நேரிமலை, பொதியமலை.
முந்நாடு — குடநாடு (சேரநாடு). புனனாடு (சோழ நாடு). தென்னாடு (பாண்டிநாடு).
முந்நதி — பொருநைநதி, காவிரிநதி, வையைநதி.
முப்பதி — கருவூர், உறையூர், மதுரை.
மும்முரசு — மங்கலமுரசு, வெற்றிமுரசு, கொடைமுரசு.
முத்தமிழ் — இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்
முக்கொடி — விற்கொடி, புலிக்கொடி, மீன்கொடி.
மும்மா — கனவட்டம், பாடலம், கோரம்.
(குதிரை வகைகள்)

இவ்வாறு முன்மூன்றைத்தேர்ந்துஅவைகளைச்சிறந்தனவாக எண்ணி மதிப்பளித்து வந்துள்ள மூவரசர்களான சேர, சோழ, பாண்டியவேந்தர்கள் தம்முடிமீதுகொண்ட மாலையைப்போன்ற பெருமையுடையது அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப் பால் என்னும் முப்பிரிவைக் கொண்ட முப்பால் என்னும் திருக்குறள் எனச் சிறப்பித்துப் பாடுகிறார் சீத்தலைச் சாத்தனார். இதனால் தமிழ் மன்னர்கள் மூன்றுக்களித்த பெருமை எத்தகையது எனத் தெரிகின்றதன்றோ ?

மூவெழுத்துச் சொற்கள் :-

நந்தமிழ் மொழியாம் செந்தமிழில் சிறந்து விளங்கும் சொற்கள் மிகப் பல. மிகச் சிறந்த பொருளைக் குறிக்கும் சொற்கள் யாவும் மூவெழுத்தால் அமைந்திருக்கின்றன. அவையாவன: அன்பு, அறம், அருள், கருணை, பண்பு, நட்பு, பொருள், அழகு, அன்னை, கல்வி, கேள்வி, குழவி, மழலை, உடல், உறுதி, சக்தி, சிவன், ஆகூழ், ஆசான், அறிவு, முருகு, இளமை, உண்மை, நன்மை, வாய்மை, உயிர், மென்மை, தன்மை, தண்மை, பழம், பயன், மானம், மனம், நாணம், இயல், தமிழ், மாண்பு, பொறுமை, பெருமை, அருமை, மகள், மகன், மனைவி, குணம், குலம், இனம், பணம், பதவி, பாடல், ஆடல், தந்தை, காதல், பக்தி, உலகு, நிலம், வயல், உணவு, வண்டி ஆகிய பொருட் செறி

வுள்ள சொற்கள் பல இருப்பினும் மிகப் பல சொற்கள் நற் பொருளையே பயக்கின்றன. இவ்வாறு மூன்று, பல சிறப்புக் களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

கவிதை :–

உலகத்து நிலவும் கவிதைகளை மூவகையாகப் பிரிக்கலாம். எளிமை, நடு. கடினம் என்பனவாம். ஒரு சில கவிதைகளைப் படித்த அளவிலேயே பொருளுணர முடியும். அது திராட்சைப் பழத்தைப் போன்று சுவைக்கலாம். எனவே எளிய நடையைத் 'திராட்சைப் பாகம்' எனலாம் நடுத்தரக் கவிதை நடையை ஊன்றிப் படித்தாலன்றிப் பொருள் அறிய இயலாது. அது கதலி பாகம். அதாவது வாழைப் பழத்தைக் கண்ட அளவிற்றானே சுவையறிய இயலாது. தோல் நீக்கியுண்ணவேண்டும். எனவே அது கதலி பாகம். (கதலி–வாழை). இனி மூன்றாவது தேங்காய் பாகம். அதாவது நாருரித்து, ஓடு நீக்கியபின் உள்ளே இருக்கும் வெண்மையான பாகத்தை உண்பதுபோலக் கடினமான நடையுடைய கவிதைகளும் உண்டு. எனவே மிகக் கடினமான கவிதை நடையைத் தேங்காய்ப்பாகம் என்று கவிதைகளைவகைசெய்யலாமன்றோ ?

மனிதன் பெறுகின்ற அனைத்து அறிவையும் முப்பெரும் பிரிவுகளுக்குள் அடக்கிவிடலாம். கண்ணால் கண்டு பெறுகின்ற அறிவு 'பிரத்தியட்சம்' எனப்படும். மாட்டுக்கு இரண்டு கொம்பு உண்டு என்று சொல்கிறோம். மாட்டைக் குறித்து நாம் பெற்ற அறிவு கண்ணால் கண்டதை அடிப்படையாகக் கொண்டது. அசோகர் நல்ல வேந்தர் என்று நாம் ஒப்புக் கொள்கிறோம், இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் அசோகரைக் கண்ணால் பார்க்கவில்லை. ஆனால் வரலாற்று நூல் வாயிலாக வரலாற்று நூலைப் படித்து அறிந்திருக்கிறோம். இவ்வாறு நூலின் வாயிலாகப் பெறுகின்ற அறிவு 'ஆகமம்' எனப்படும் தூரத்தில் புகை எழும்புவதைக் கண்டு அங்கு நெருப்பு இருக்கின்றது என்று சொல்கின்றோம். புகையைத்தான் கண்ணால் கண்டோம். நெருப்பைக் காணவில்லை. கண்டதைக் கொண்டு காணாததை யூகிக்கிறோம். யூகித்துப் பெறுகின்ற அறிவு 'அனுமானம்' எனப்படும். இவ்வாறு அறிவு மூவகைப் படும்.

இவ்வாறு மூன்றின் சிறப்புக்களைச் சுருக்கமாக இக் கட்டுரையில் கண்டோம்.

பேராசிரியர் காட்டிய தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்குச் சில திருத்தங்கள்.

வித்துவான். கு. வைரக்கண்ணு.

பேராசிரியர், திரு. மு. உலகநாதன் அவர்கள், செந்தமிழ் 64, 65 தொகுதிகளில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் சிறந்த முறையில் காட்டியிருந்தார்கள். அதில் உள்ள நிறை குறைகளையும் சில திருத்தங்களையும் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பேராசிரியர் காட்டும் புதிய வரிவடிவமும் ஒலி வடிவமும்.

"உயிர்க்குறில் :- அ, இ, உ, ௭ (எ), ௭ (ஒ)"

"உயிர் நெடில் :- அா, இா, உா, ௭ா, (ஏ), ௭ா, (ஓ)- ஏன் இந்த மாற்றம் ?

"க்+அ='க' என்னும்போது தோன்றிய உயிர் மெய் புள்ளி மட்டும் நீங்கி அகர ஓசை பெற்றது. அகர வடிவில்லை. அகரமொடு உயிர்த்தல் காப்பிய விதி. அதனை அப்படியே கொள்வோம்."

"க்+அா='கா' என்று கொண்டால் அகர வடிவம் ஒரு சிறிது இருக்கிறது."

"க்+இ 'கி' இதனில் இகரத்தின் மேல் விலங்கு இருக்கிறது."

"க்+இா='கிா' எவ்வளவு பொருத்தம் பார்த்தீர்களா ?"

"க்+உா='குா' பொருந்துகின்றதல்லவா?"

"க்+௭='கெ' ஏற்றுக்கொள்ள இடமிருக்கிறது. எனவே தான், 'எ'யின் முன்னால் ஒருசுழிக்கொம்பைப் புதிதாகச் சேர்த்துள்ளேன்."

"க்+௭ா(ஏ)=கொ (கே) புதிய ஒலி வடிவம், வரி வடிவம் ஏற்படுகிறது. இது இன்றைய 'கொ'வைப் போல

இருப்பினும், 'கே' என்றே உச்சரிக்கப்படவேண்டும்.

"க்+ெஎ=ெக (கெ) புதிய ஒகர ஓசையும் வரிவடிவும் ஆக்கப்பட்டுள்ளன."

"க்+ெஓ (ஓ)=ெகொ (கோ) புதிய ஒகார ஓசையும் வரிவடிவும் காட்டியுள்ளேன். புதுமையாய்த்தான் இருக்கும். இருப்பினும் மனத்திற் கொள்க." என்று பேராசிரியர் அவர்கள் சில எழுத்துக்களின் வடிவங்களை மாற்றி, அதற்குக் காரணமும் காட்டியுள்ளார்கள்.

(செந்தமிழ்: தொகுதி 64-ம், பக்கம் 29, 30.)

தேவையில்லாத மாற்றம் :

பேராசிரியர் அவர்கள் உயிர் எழுத்துக்களில் செய்துள்ள மாற்றம் எவருக்கும் மன நிறைவைக் கொடுக்காதென்பது உறுதி. எகரத்திற்கு முன்னும் ஒகரத்திற்கு முன்னும் தேவையில்லாமல் ஒற்றைச் சுழிக் கொம்புகளைச் சேர்த்திருப்பதும் அதற்கு அவர் காட்டும் காரணமும் ஏற்கத் தக்கனவாக இல்லை.

ஒரே குறியீடு :

"உயிர் நெடில்களுக்கும் உயிர்மெய் நெடில்களுக்கும் ஒரே குறியீட்டைப் பயன்படுத்தலாம்" என்னும் கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதே. பேராசிரியர் அவர்கள் கூறுகின்றபடி நெடில் குறியீடாகக் காலைப் (ா) பயன்படுத்தலாமா? அல்லது, திரு. கி. பழநியப்பன் அவர்கள் கூறுகின்றபடி '2' என்னும் எண்ணைப் பயன்படுத்தலாமா? காலைப் பயன்படுத்தினல் எழுத்துக்களின் நீளம் மிகுவதோடு, எழுதும்போது காலச்செலவும் ஏட்டில் இடச் செலவும் மிகும். '2' என்னும் எண்ணைப் பயன்படுத்தினல் எழுத்துக்களிடையே எண் கலந்து வருவது ஏற்புடையதாக இராது. எனவே, நெடிலின் குறியீடாக ஒன்று (') போன்ற ஒரு கோட்டைப் பயன்படுத்தலாம்.

திருத்த முறையில் உயிர் எழுத்து: -

அ, அ/, இ, இ/, உ, உ/, எ, எ/, ஒ, ஒ/. அய் (ஐ) அவ் ஔ) இரண்டும் நீக்கப்பட்டுள்ளன.

மெய் எழுத்துக்கள் :-

மெய்யெழுத்துக்களில் எவ்வித மாற்றமும் தேவையில்லை யாயினும், அவைகட்கு மேற்புள்ளி தேவையில்லை என்பதைக் கீழே கண்டு தெளியலாம்.

உயிர் மெய் எழுத்து :-

"உயிரும் மெய்யும் கூடிப் பிறப்பது உயிர் மெய் எழுத்தாதலின், அதில் உயிரின் வடிவமும் மெய்யின் வடிவமும் பொருந்தியிருத்தல் வேண்டும்" என்று பேராசிரியர் அவர்கள் கருதுவது சாலவும் நன்று. உயிர் மெய்யெழுத்து, மெய்யின் முழு வடிவத்தோடு உயிரின் ஒரு பகுதியைக் குறியீடாகச் சேர்த்து எழுதப்படவேண்டும். அவ்வுயிர்க் குறியீடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயிருக்கே உரிய குறியீடாக இருத்தல் வேண்டும். பேராசிரியர் காட்டும் குறியீடுகள் அவ்வாறு இல்லை.

திருத்த முறையில் உயிர்க் குறியீடுகள்

அகரத்தின் குறியீடு, நெடிலின் குறியீடு, ஒன்று போன்ற கோடு :	...	ı
இகரத்தின் குறியீடு, மேல்விலங்கு	...	̂
உகரத்தின் குறியீடு, உயிர்க்குறி	...	ை
எகரத்தின் குறியீடு, ஒருசுழிக் கொம்பு	...	ெ
ஒகரத்தின் குறியீடு, இருசுழிக்கொம்பு	...	ே

குறியீடுகளை எழுத்துக்களோடு சேர்க்கும் முறை:

உயிர்மெய்யெழுத்துக்களை அமைக்கும்போது, மெய்யெழுத்துக்களின் முழு வடிவங்களோடு, உயிர்க்குறியீடுகளை ஒரு-முறைப்படிச் சேர்க்கவேண்டும். உயிர்க் குறியீடு உயிரெழுத்தின் முற்பகுதியாக இருந்தால் மெய்யெழுத்திற்கு முன்னரும், உயிரெழுத்தின் பிற்பகுதியாக இருந்தால் மெய்யெழுத்திற்குப் பின்னரும் சேர்க்கவேண்டும். இவ்விதிப்படி, உயிர்மெய்களில் உகர, எகர, ஒகரக் குறியீடுகள் மெய்யெழுத்திற்கு முன்பும் (கை (கு), கெ, கே (கொ))அகர, இகரக்குறியீடுகள் மெய்யெழுத்திற்குப் பின்பும் (க ı (க), கி) சேர்க்கவேண்டும். நெட்டெழுத்துக்களை அமைக்கும்போது, நெடிற்குறியீட்டைக் (ı) குறில்களுக்குப்

பின்னர், க ll (கா) கி l (கீ)—இவ்வாறு சேர்க்கவேண்டும். ஆகார உயிர்மெய்கள் மட்டும் இருகோடுகளைப் பெறும்.

குறியீடுகள் விளக்கம்

க்+அ=க l — அகரத்தில் உள்ள கோடு உயிர்மெய்யெழுத்திலும் இருப்பதைக் காண்க.
க்+இ=கி — இகரத்தின் மேல்விலங்கு இருக்கிறது.
க்+ை(உ)+கை— உகரக் குறியீடு இருக்கிறது.
க்+எ=கெ — எகரத்திலுள்ள கூரான முனை நீங்கி, ஒருசுழிக்கொம்பு உருவாகியிருப்பதைக்காண்க
க்+ஒ=கே(கொ)—ஒகரத்தில் கவிழ்ந்த நிலையில் இருக்கும் இரு சுழிக்கொம்பு உயிர்மெய்யில் இருப்பதைக் காண்க.

உகரக் குறியீடு

குல்லாய்க் கேற்றவாறு தலையைச் சரிசெய்வதைப் போல, குறியீட்டிற் கேற்றவாறு உகரம் உருமாற்றம் (ை) செய்யப்பட்டிருக்கிறது. ஐகாரத்தை நீக்கிவிட்டதால் உயிர்க்குறிக்கு (ை)வேலை இல்லையல்லவா?க்+ஐ=கை' என்னும் எழுத்திற்குப் பயன்படும் உயிர்க்குறியை உகரக் குறியீடாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். உகரத்தை இரு சுழி உடையதாக அமைத்தால்தான் அது (ை) உகரத்தின் குறியீடாவதற்குப் பொருத்தமாக இருக்கும். உயிரெழுத்துக்கள் எல்லாம் சுழியிலிருந்து தொடங்குவதைக் காண்க.

பேராசிரியர் காட்டிய உகரக் குறியீடு

பேராசிரியர் அவர்கள் உகரத்தின் குறியீடாக மேற்சுழி விலங்கைக் காட்டியுள்ளார்கள். க்+உ—கீ (கு) — இதில் உகரத்தின் குறியீடு ஓரளவு பொருந்தியிருந்தாலும், உயிர்க்குறியீடுகளை மெய்யெழுத்துக்களோடு சேர்ப்பதற்குரிய விதிகளுக்குஇம்முறை ஒவ்வாமையால், உகரக் குறியீடாக உயிர்க்குறியை (ை) ஏற்பதே எல்லாவகையிலும் சிறப்புடைத்து.

இன்றைய முறையும் புதிய முறையும்

புதிய முறையில் உயிர்மெய்யெழுத்துக்கள் உயிர்க்குறியீடுகள் இல்லாமல் அமையா. உயிர்க்குறியீடுகளைப் பெறாத மெய்கள், மேற்புள்ளிகள் இல்லாமலேயே மெய்களாகக் கொள்ளப் படும் இன்றைய முறையில் அகர உயிர் மெய்களில் புள்ளிகள் மட்டும் நீங்கியிருக்கும் (க்+அ=க) புதிய முறையில் அகரத்தின் குறியீடாக ஒரு கோட்டைப் பெற்றிருக்கும். (க்+அ=க I) இது ஒரு புதுத் தொல்லைதான் என்றாலும் எவ்வளவோ எளிமைக்கும் சிக்கனத்துக்கும் இடையில் இது ஒரு பொருட்டாகாது. இகர உயிர் மெய்யில் மாற்றம் இல்லை. (க்+இ=கி) ஆனால். அச்செழுத்தில் இகர விலங்கு தனியாக (ி) இருக்கும். இன்றைய முறையிலும் பேராசிரியர் அவர்கள் காட்டிய முறையிலும் எகர, ஒகர உயிர்மெய்களுக்குப் பயன்படும் ஒருசுழிக்கொம்பு, புதிய முறையில் எகர உயிர்மெய்களுக்கு மட்டுமே பயன்படும். அவ்வாறே, இன்று ஏகார, ஓகார உயிர்மெய்களுக்குப் பயன்படும் இருசுழிக் கொம்பு இனி ஒகர உயிர்களுக்கு மட்டுமே பயன்படும்.

எழுத்துக்களின் எண்ணிக்கை

உயிர்க்குறில்	:	அ, இ, ை, எ, ஒ	...	5
மெய்யெழுத்துக்கள்	:	'க' முதல் 'ன' வரை	...	18
ஆய்தம்	:	ஃ	...	1
உயிர்க்குறியீடுகள்	:	I, ு, ை, ெ, ே	...	5
		கூடுதல்	...	29

நூற்றுக்கணக்கான வரிவடிவங்களை உடைய தமிழ், 29 எழுத்துக்களில் அடங்கிவிடுகிறது. இத்தகைய சீர்திருத்தத்தைச் செம்மையுறச் செய்ய வழிகாட்டிய பேராசிரியர், திரு. மு. உலகநாதன் அவர்கட்கும் ஏனைய பெருமக்கட்கும் தமிழுலகம் நன்றிக் கடன்பட்டிருக்கிறது. தமிழன்பர்கள் மேலும் சிறந்த முறையினைச் சிந்தித்துத் தெரிவிப்பார்களாக.

U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

வள்ளுவர் காட்டும் அறம்.

(௪எ-ம் பக்கத் தொடர்ச்சி)

“ இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை ”

என்பதே முதற் குறள். அதனில் இயல்புடைய மூவர் என்ப தற்குப் பொருள் எழுதும்போது பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர் ஆகிய நால்வருமே மூவராய பிரமசாரி வானப்பிரத்தன், சந்நியாசி என்று கருத்துக் கூறுவர்.

எனவே எத்தகைய தவத்தை மேற்கொண்டவரும், முற்றத் துறந்தவரும் இல்வாழ்வானிடத்து வந்துதான் ஆக வேண்டும் என்பது பெறப்படுகிறது. அவ்வாறு வரும்போது அவர்களை அடித்து விரட்டி விடுவது இல்வாழ்வான் செய்யும் காரியம் அன்று. அவனால் முடிந்த அளவு அவர்களுக்கு அவன் உதவுதல் வேண்டும். அவர்களது கொள்கைக்கு மதிப்பளித்துத் துணை நிற்கவேண்டும் என்ற கருத்தைக் கூறுகின்றார்.

இல்வாழ்வானது கடமைகள் அத்தோடு முடிந்துவிட வில்லை. இல்லாளோடு கூடி வாழும் அவனின் கடமைகள் மிக மிகப் பெரியன. அவனை அண்டியே நிற்கும் துறவிகளும் ஏழை களும், உறவினரும், விருந்தினரும் நிறைய உண்டு. அவர்களுக் கும் அவன் உதவக் கடமைப்பட்டவனாக இருக்கின்றான் என்று உலகியலை அறிந்தும் இல்வாழ்வானது சிறப்பினை வள்ளுவர் எடுத்துப் பேசுகின்றார். அவ்வாறு அவன் எல்லோரையும் அர வணைத்துச் செல்லவேண்டும் என்றால் அவனது மனையாள் அவனோடு இணைந்து செல்பவளாக இருக்கவேண்டும். அவனும் அவளும் அவ்வாறு அன்பும் அறமும் உடையவர்களாக இருந் தால்தான் அவ்வில்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடைய தாகவும் இருக்கும்.

அதனை,

“ அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது ”—45

என்ற குறளோவியத்தால் விளக்கிக் காட்டுகின்றார். அப்படி

அன்பும் அறனும், பண்பும் பயனும் கொண்டொழுகுகின்ற வாழ்க்கை வேறு, அறம் வேறு இல்லை. இரண்டும் ஒன்றுதான்.

அதனை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்று வையத்துள் மேற் கூறப்பட்ட வண்ணம் வாழ்வாங்கு வாழ்பவன் 'எல்லோராலும் நன்கு மதிக்கப்படுவான்' என்று கூறுகின்றார். இத்தகைய இல்வாழ்க்கைக் கருத்தை அறக் கருத்தாகக் காட்டி அவ்வறமே இல்வாழ்க்கை என்று கூறிய பெருமை வள்ளுவச் செம்மலையே சாரும்.

இல்வாழ்க்கையை அறவாழ்க்கை யென்றதால் அவ்வற வாழ்க்கையை ஆடவன் ஒருவன் மட்டும் இல்லின் கண்ணிருந்து தனித்துச் செய்துவிட முடியாது. அப்படியே ஒருவன் செய்தாலும் அதனை அவன் செவ்வையுறச் செய்ய முடியாது. எனவே அவனுக்கு ஒரு துணை தேவைப்படுகிறது.

உலகம் ஆண், பெண் என்ற இருவகைப்பால் வகையால் ஈர்க்கப்பட்டுள்ளது. ஆண் பெண்மையிலும், பெண் ஆண்மையிலும் இணைவது கண்கூடு. எனவே ஒன்றுக்கு ஒன்று உற்ற துணையாக ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணுமே அமைய முடியும். அஃதின்றிச் செயல்படுவது என்பது முடியாத ஒன்றாக இயற்கை அமைப்புக்களால் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே வாழ்க்கைக்கு ஒரு பெண் துணையைத் தேடிக் கொள்வது தலையாய அறங்களில் ஒன்றாகும் என்பது வள்ளுவர் கருத்து. அதனை 'வாழ்க்கைத் துணை நலம்' என்றோர் அதிகாரத்தால் வலியுறுத்திக் காட்டுவார் நம் வள்ளுவப் பெருந்தகை.

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்பது இன்றையக் கவிஞர் மொழி. குடும்பம் நல்லதாக அமையவேண்டும் என்றால் அதன் பொறுப்புக்கள் அனைத்தும் அவ்வீட்டிற்கு வர இருக்கின்ற பெண்ணையே சாரும். அவள் வருவதற்கு முன்பு அக்குடும்பம் எப்படி இருந்தாலும் அவள் வந்தபின்பு அவ்வீடு ஒரு பல்கலைக் கழகமாக மாறுதல் வேண்டும். அங்கே என்றும்

இன்பம் தங்கவேண்டும். ஒரே கலகலப்பாக அவ்வீடு மகிழ்ச்சிக் கடலில் திளைக்கவேண்டும். அதனை யெல்லாம் செய்யும் தகுதியும் பொறுப்பும் அவ்வீட்டு ஆடவனுக்குத் துணையாக வரவிருக்கும் பெண்ணிடத்து இருக்கவேண்டும். அப்படி அமையுமானால் அவ் வில்லமே ஒரு நல்ல பல்கலைக் கழகமாக மாறுகின்றது.

எனவே ஒரு ஆடவனுக்கு வாழ்க்கைத் துணையாக அமையும் ஒரு புதுமணப்பெண் எத்தகைய பண்புடையவளாக இருக்க வேண்டும் என்பதை நம் வள்ளுவப்பெருந்தகை ஒரு அறமாகவே கருதுகின்றார். அவள் அத்தகைய குணநலன்களைப் பெறவில்லை யென்றால் எந்த விதமான நல்லறமும் செய்ய முடியாது.

எனவே,

“ மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை ”

என்று கூறுகின்றார். ஒரு பெண் இல்லின் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் இல்லத்தரசியாக வந்தபின்னால் அவ்வில்லின் மாணபுகளுக்கு உரியவளாகத் தன்னை வளர்த்துக்கொள்வதோடு நற்குணமாகிய துறந்தாற் பேணலும், விருந்தயர்தலும், வறியார் மாட்டு அருளுடைமையும் என்ற நற்பண்புகளை மேற்கொண்டும் நற்செய்கைகளாகக் கருதப்படும் கணவனது வரவறிந்தும் வாழ்க்கைக்கு வேண்டும் பொருளறிந்தும் செலவு செய்தலும், அருமையாகச் சமைத்துத் தன் கணவனுக்கு ஊட்டலும் ஒப்புரவு என்னும் சுற்றம் தாங்குதலுமாகிய செயல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். அவளே ஒரு மனைக்கு நல்ல துணையாவாள். அத்தகைய துணைவியைப் பெற்றவனுக்கு இல்லாத பொருள்கள் என்பதே அவனது வாழ்க்கையில் இல்லை என்றும் கூறுகின்றார். மேலும் அவள் தன்னைக் கற்பு முதலியவைகளால் காத்துக்கொண்டும், கணவனிடத்துப் பேசும்போது தன் சொற் காத்துக்கொண்டும் சோர்வில்லாதவளாகவும் இருப்பாளே யானால் அவளுக்கும் அவள் சார்ந்த குடும்பத்திற்கும் எல்லா நன்மையும் வந்தெய்தப்பெறும்என்று அறக்கருத்தைக் கூறுகின்றார்.

ஒரு கணவன் பகைவர் முன்னும் மதியாதார் முன்னும் ஏறுபோல நடைநடந்து செல்வதற்கே அவனது மனைவியின் ஒழுக்கமே துணை செய்யும் என்று கூறுகின்றார்.

அத்தகைய குடும்பத்தில் நல்ல மக்கட்பேறு வந்து தோன்றும். பேறுகளில் எல்லாம் சிறந்தபேறு மக்கட்பேருகை யால் அமிழ்தினும் அப்பேறு சிறந்தது. குழலும் யாழும் இனிய வென்றபோதிலும் மெய்தீண்ட, உடற்கும் கேட்கக் கேட்க செவிக்கும் இன்பம் பயக்கும். அப்பேற்றினும் சிறந்த துண்டோ ? என்று கேட்கின்ற வள்ளுவப் பெருந்தகை தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய அறத்தையும், மகன் தந்தைக்குச் செய்பவேண்டிய அறத்தையும் இரண்டுகுறள்களில் தெள்ளிதின் விளக்கிச் செல்லுகின்ருர்.

தந்தை மகனைக் கல்வி கேள்விகளில் வல்லவனுக்கவேண் டும் என்றும் மகன் அவனது தந்தைக்கு 'இவன் தந்தை இவ னைப் பெறுதற்கு என்ன தவம் செய்தானே' என்றெண்ணும் வண்ணம் நற்பெயர் வாங்கவேண்டும் என்றும் கூறுகின்ருர்.

இதனை,

" தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்''—67

என்ற குறளின் மூலமும்

" மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னேற்ருன் கொல்லென் னுஞ் சொல்''—70

என்ற குறளின் மூலமும் விளக்கி நிற்கின்ருர்.

அகத்தில் அன்பிருந்தால்தானே வருகின்ற விருந்ினரை வருக ! வருக ! என வரவேற்க முடியும். அரைப்பட்டினியானு லும் அன்பு இருந்தால் அவர்களை உபசரிக்கும் தன்மையே தனி. நிறைவாக இருந்தாலும் அன்பில்லையென்ருல் வருகின்ற விருந்தி னரை முறைக்கும் குணமே மேலோங்கி நிற்கும். வள்ளுவர் வாழ்க்கையில் இத்தகைய பேர்வழிகள் பலரைக் கண்டிருக்கின் ருர். விருந்தோம்பும் பண்பு சரியாக இல்லாமையால் வாடிச் செல்லும் விருந்தினரையும் கண்டு துடித்திருக்கின்ருர். இதனுல் விருந்தோம்பலின் பண்பு எப்படிப்பட்டது. அதன் பயன் எப் படிப்பட்டது என்ற அறத்தை உலக மக்களுக்கு உணர்த்த விரும்புகின்ருர். அதனை அழகான உவமையின் மூலம் குறிப்பிடு கின்ருர்.

அமிழ்தம் என்றொரு பொருளை யாரும் கண்டதும் இல்லை. உண்டு மகிழ்ந்ததும் இல்லை. அச்சொல்லைப் பொறுத்தமட்டில் உலகத்திலேயே இல்லாத் உண்ண உண்ணத் தெவிட்டாத ஒப்பற்ற உணவுப் பொருளாக அதனை எல்லாப் புலவர்களுமே கற்பனை செய்திருக்கிறார்கள். மொத்தத்தில் அது அரிதில் கிடைக்கக் கூடிய பொருள் இல்லை. எட்டாப் பொருள். எட்டாப் பொருளுக்கு எப்போதுமே ஒரு தனிக் கவர்ச்சி இருக்கும். அப்பொருள் திடீரென்று ஒருவன் கையில் கிடைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அவன் என்ன செய்வான்? கிடைத்திருப்பதோ கிடைத்தற்கரிய பொருள். கிட்டியிருக்கிறது. அதுவும் சிறிதே கிடைத்திருக்கிறது. ஒரு எண்ணம் பளிச்சிடுகிறது. "யாருக்கும் அது கிடைத்திருப்பதாகச் சொல்லக்கூடாது. நாமே வைத்துக்கொள்வோம். யாரேனும் பார்த்துவிடப்போகிறார்கள். அதனால் வீட்டினுள்ளே சென்று மறைத்துவைப்போம்" என்று தானே எண்ணுவான்.

அப்படிப்பட்ட நேரத்தில் வள்ளுவர் தோன்றுகின்றார். அவரைக் கண்டவுடன் அவனுக்கு அதிர்ச்சி. ஐயோ இவர் வேறு வந்துவிட்டாரே! இவர் என்ன சொல்லப்போகின்றாரோ என்று அஞ்சுகின்றான். அவனுக்கு அவர் விருந்தோம்பலின் பெருமையை எடுத்துக் கூறுகின்றார். விருந்தை மருந்தாகக் கருதக்கூடாது. இல்லிருந்து வாழ்வதே விருந்தோம்பி வாழ்வதற்காகத்தான். அப்படியிருக்க அதற்கு அஞ்சி ஒதுங்கலாமா? கூடாது. சாவா மருந்து எனினும் அமிழ்தமே கிடைத்திருந்தாலும் விருந்தினர் வீட்டின்புறத்தே பசித்திருக்கத் தான் மட்டும் தனித்துண்ணல் கூடாது என்று அறிவுறுத்துகின்றார்.

இதனை,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"—82.

என்று கூறுகின்றார்.

எத்தகைய உவமை, எத்தகைய எடுத்துக்காட்டு. அவன் திருந்துகின்றான். அப்படி விருந்து பேணுவோனின் வாழ்க்கை வறுமையால் வாடுவதில்லை. எப்போதும் அவனது இல்லத்தில்

செல்வம் சேர்ந்துகொண்டே இருக்கும். அவனது நிலம்கூட ஒன்றுக்கு நூருக விளைவுபெறும் என்றெல்லாம் வள்ளுவர் கூறுவ தோடு இறுதிக் குறளிலும் இணையற்ற உவமையின் மூலமாக ஒப்பற்ற கருத்தினைக கூறுகின்ருர்.

தூரத்தில் விருந்தினர் ஒருவர் வருகின்ருர். தம் வீட்டுக் குத்தான் வருகின்ருர் என்றவுடன் ஐயோ பாவி வருகின்ருனு? என்று எண்ணுகின்ற நல்ல உள்ளங்களும் நாட்டில் உண்டு. சொல்லாமல் கொள்ளாமல் வீட்டின் புறக்கடை வழியே வெளிச் சென்று விடுகின்றவர்களும் உண்டு. வேண்டா வெறுப்பாக வாருங்கள் என்று வரவேற்பதும் உண்டு.

இப்படி இருப்பதற்கும் பல காரணங்கள் உண்டு. வேண்டாத விருந்தாளியாக இருக்கலாம். வந்தால் ஒரு மாதம் இரண்டு மாதம் என்று ஒட்டிக்கொள்ளுகின்ற விருந்தாக இருக் கலாம். அல்லது ஓயாத நச்சரிப்பாக அது செய்யவில்லை இது செய்யவில்லை என்று குறைபடுகின்ற விருந்தாக இருக்கலாம், எப்படியோ விருந்து வந்துவிட்டதென்ருல் அவர்களை வரவேற் கும் உள்ளப்பாங்கு வேண்டும். இல்லையென்ருல் அவ்விருந்தினர் வாடி வருந்துவர். அவர்கள் வருத்தம் கொண்டால் நமக்கென்ன என்ருலும் வள்ளுவரால் இருக்கமுடியவில்லை. நம்மிடம் பரிந் துரை செய்கின்ருர்.

அனிச்சப்பூ என்ருெரு பூவுண்டு. அப்பூ சிறிது வெப்பம் பட்டாலும் வாடிவிடும் தன்மையது. ஏன்? முகர்ந்து பார்க்கும் போது மூக்கில் இருந்துவரும் வெப்பம் பட்டால் கூட வதங்கி விடும். அதனை வள்ளுவர் அறிந்திருக்கின்ருர். அதேபோல் விருந்து பேணுதல் சரியில்லை என்றவுடன் வாடிச் செல்லுகின்ற விருந்தினரையும் காணுகின்ருர். இரண்டுபேரையும் ஒப்பிட்டுக் கூறுகின்ருர். ஒப்பிடும்போது அனிச்சப்பூவின் வாட்டத்தினும் விருந்தினரின் வாட்டம் அஞ்சத் தக்கது. துடைக்கத் தக்கது என்னும் பேருண்மையை எடுத்து விளக்குகின்ருர்.

அனிச்சப் பூவானது முகர்ந்து பார்த்தால்தான் வாடக் கூடியது. ஆனுல் விருந்தினரோ வரவேற்கும் பண்பினரின் நோக்கம் சரியில்லை என்ருலே வாடக்கூடியது என்கின்ருர்.

அதனுல் விருந்தினரை தூரத்தே காணுகின்றபோது

இன்முகமும் அவர் நெருங்கி வந்தபோது வருக! வருக! என்று இன்சொல்லும் அதன் பின்பு விருந்து பேணுகின்றபோது நல்ல உபசரிப்பும் செய்தல் வேண்டும்.

இல்லையென்றால் முகர்ந்து பார்க்கும்போது வாடும் அனிச்சப்பூவினும் விருந்தினர் மனம் நோக்கும் நோக்கத்திலேயே வாடிவிடும் என்று உயர்ந்த உவமையின்மூலம் விளக்குகின்றார்.

இதனை,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"—90

என்ற குறள் விளக்குகின்றது.

இவ்வாறு விருந்து பேணுவதற்கும் வாழ்வில் உயர்வு பெறுவதற்கும் காரணமாக இருப்பது ஒருவனுடைய இனிய சொற்களேயாகும். இனிய சொற்களை ஒருவன் கூறுவதனால் அவன் எல்லோராலும் விரும்பப்படுகின்றான். அவனை உலகம் பாராட்டுகின்றது. போற்றுகின்றது. எனவே ஒவ்வொரு மனிதனும் ஏன் இன்சொல்லைக் கூறுதல் கூடாது. அதையே சிறந்த பண்பாகக் கொள்ளக்கூடாது என்று வள்ளுவர் கேட்கின்றார்.

முதலில் அதற்கு இன் சொல் என்றால் என்ன என்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டும். அன்பொடு கலந்த சொற்கள் எப்போதும் இன்சொல்லாகவே இருக்கும். எனினும் வஞ்சனை கலந்த அன்பும் வெளிப்படலாம். அன்பு செலுத்துவது போல் வெளிக்குக் காட்டி உள்ளே ஒருவன் பெரும் வஞ்சனையைக் கொண்டு ஒழுகுவான் என்று சொன்னால் அது அவனுக்கும் தீமை. அவனால் அன்பு செலுத்தப்படுகின்றவனுக்கும் தீமையாய் முடியும். எனவே தூய அன்பு உள்ளத்தில் நிறைந்து வழிய வேண்டும். அதனிலிருந்து இனிய சொற்கள் பிறக்கவேண்டும். அதுவே இன்சொல்லாகும். இதனை வள்ளுவப் பெருந்தகை மிக அழகாக

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்."—91.

என்று விளக்குகின்றார்.

அத்தகைய இன்சொல்லை ஒருவன் மற்றவனிடத்துக்

கூறினல் அதுவே போதுமானது. மற்றப்படி அவனுக்கு அதிகமாக ஒன்றும் தரவேண்டுவதில்லை. அதுவே அறமாகும். அவ்வறத்தால் ஒருவனுக்கு நல்குரவு என்னும் வறுமை தோன்றுவதில்லை. அதுவே அவனுக்குத் தலைசிறந்த அணியாகும். அவனது துன்பங்கள் எல்லாம் அதனுல் மறைந்தொழியும் என்றெல்லாம் இன்சொல்லினது பெருமையையும் நன்மையையும் கூறுகின்ற வள்ளுவர் இம்மானிட சமுதாயத்தைப் பார்த்து ஒரு கேள்வியும் கேட்கின்ருர்.

ஒவ்வொருவனும் தன்னிடத்துப் பிறர் பேசும்போது அன்பாகவும் இனிமையுடனும் பேசிப் பழகுவதால் அது தன்னுள்ளத்திற்கு மகிழ்ச்சி சேர்ப்பதை அறிகின்ருன். அங்ஙனம் பிறர் பேச்சுத் தனக்கு இன்பம் விளைவிப்பதை அறிந்தும் தான் மட்டும் பிறரிடத்துப் பேசும்போதும் பழகும்போதும் அத்தகைய கொள்கையை மேற்கொள்ளாதது ஏன்? என்று வினவுகின்ருர். அது,

'' இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது ''—99.

என்ற இனிய பாடலாக மலர்ந்திருக்கின்றது. அத்தோடு மட்டும் அல்லாமல் அழகிய உவமை ஒன்றை எடுத்துக் காட்டியும் இறுதிக்குறளில் இடித்துக்கூறுகின்ருர். இத்தகைய உவமையை வேறு எந்த ஒரு புலவனும் இவ்வளவுஎளிதாக எடுத்தாளவில்லை என்று எண்ணுகின்றபோது வள்ளுவரின் நுண்மாண், நுழைபுலம் நமக்குத் தெற்றென விளங்குகின்றது.

பழமும், காயும் நாம் அறிந்தவைகளே. பழம் இனிப்பதும், காய் புளிப்பதும் யாவரும் அறிந்ததே. இதனை அறியாதார் உலகில் எவ்விடத்தும் இருக்க முடியாது.

அதேபோல இனிமையாகப் பேசின் இன்பம் பயக்கும். இனிமையற்றுக் கடுமையாகப் பேசின் துன்பம் பயக்கும். இதனையும் மனிதன் அறிந்தேதான் இருக்கின்ருன். ஆனுல் இனிமையற்றுப் பேசும்போது பிறர் மனம் புண்படுமே என்பதை மறந்து பேசுகின்ருன். இல்லையெனில் வேண்டுமென்றே பேசுகின்ருன். இனிமையை விட்டு இன்னமையைப் பேசும்போது அவன் அறி

யாமை வழிப்படுகின்றான். அறியாமலேயே இருந்து அறியாமை வழிப்பட்டாலும் பரவாயில்லை. அறிந்து வைத்தும் அறியாமை வழிப்படுவது மிகப்பெரிய குற்றம். இதை நம் வள்ளுவப் பெருந் தகை அவர் காணும் மானிட சமுதாயத்திற்கு எடுத்துக்கூறி விளக்க எண்ணுகின்றார்.

பழமும் காயும் அவர் முன்னால் தென்படுகிறது. அதனை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு ஒருவனைப் பார்த்து இதில் எது பழம் என்று கேட்கின்றார். அவன் வள்ளுவரை ஏற இறங் கப் பார்த்துவிட்டுச் சிரித்துக்கொள்ளுகின்றான். வள்ளுவர் இவ் வாறு அறியாமல் இருக்கின்றாரே என்று அச்சிரிப்பு ஏளனச் சிரிப்பாகவும் இருக்கின்றது. அவர் அதைப் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. எது பழம் என்பதைச் சொல்? என்று மீண்டும் வினவுகின்றார். ஏன்? உங்களுக்குத் தெரியவில்லையா? அதோ வலது கையில் நன்றாகச் சிவந்து கனிந்து தோன்றுகிறதே அதுதான் பழம் என்று சற்றுக் கடுகடுப்பாகவே பதில் சொல்லு கின்றான்.

வள்ளுவர் இப்போது சிரிக்கின்றார்! ஏன் சிரிக்கின்றீர் கள் என்று அவன் அவரைக் கேட்கின்றான். உன் பார்வையில் பழுதில்லை பழம் எது? காய் எது? என்று நன்றாக அறிந்து சொல்லிவிட்டாய். அதற்கு எனது பாராட்டு. ஆனால் இனியவை எது? இன்னாமை எது? என்று அறியாமல் பேசுகின்றாயே அதனை நினைக்கும்போதுதான் சிரிப்பு வந்தது; சிரித்தேன் என்று கூறு கின்றார். அவன் மேலும் புரியாமல் விழிக்கின்றான். அதற்கு,

“இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று”—100

என்று எடுத்துக் கூறுகின்றார். பாடலும்புரிந்தது. அதன் விளக்க மும் அவனுக்குப் புரிந்தது. அவன் வள்ளுவருக்கு நன்றி செலுத் துகின்றான். எதற்கு? தன் அறியாமையை எடுத்துக் காட்டி அதனை விளக்கியதற்கு. வள்ளுவர் அவனை மேலும் பாராட்டி இப்படித்தான் மனிதன் செய்ந்நன்றி உள்ளவனாக இருக்க வேண் டும். அதுதான் அவனுக்குச் சிறப்பு என்று செய்ந்நன்றி அறித லின் சிறப்பைக் கூறுகின்றார். அவன் மேலும் வியப்படை கின்றான்

உலகத்தில் தோற்றத்தாலும், பரப்பாலும் விரிவாலும், பருமானுலும், உயர்ச்சியாலும் ஒப்புக்காட்ட முடியாத பொருள்கள் எவை என்று கேட்கின்ருர். அவன் விழிக்கின்ருன். அதற்கு அவரே விடை பகருகின்ருர். மண்ணகம், விண்ணகம், மலே, கடல் போன்றவற்றைக் கூறுகின்ருர். இவைதானு வேறு இல்லேயா என்று கேட்கின்ருன். இருக்கின்றது. அது இவற்றையெல்லாம்விடப் பெரியதுஎன்று கூறுகின்ருர். அவனுக்குவிளங்கவில்லே. அதற்கு வள்ளுவர் அதுதான் 'செய்ந்நன்றி அறிதல்' என்கின்ருர்.

எப்படி என்று அவன் மனம் ஆராய்ச்சியில் இறங்குகின்றது.

வள்ளுவர் உதவியை மூன்று கூருகப் பிரிக்கின்ருர்.

1. செய்யாமற் செய்த உதவி.
2. காலத்தில் செய்யும் உதவி.
3. பயன் கருதாது செய்யும் உதவி.

இதனேக் கேட்ட அவன் ஏற இறங்கப் பார்க்கின்ருன்.

வள்ளுவர், முதல்உதவியாகிய செய்யாமற் செய்த உதவி இருக்கிறதே அதுதான் மிகப் பெரிய உதவி. அதன் பெருமை எப்படிப்பட்டது எனில் அறற்கு அளவு கூற முடியாது. வையகமும், வானகமும் கூட அதற்கு ஒப்பாகாது என்று கூறுகின்ருர்.

முன்பின் அறியாதவன். எந்தவிதமான உதவியையும் அவன் ஒருவனுக்குச் செய்தது கிடையாது. இருந்தும் அவனுக்கு ஒருவன் இவன் நமக்கு உதவிசெய்தவனு? செய்யாதவனு? என்று ஆராய்ந்து பாராதே ஒரு உதவியைச் செய்கின்ருன். அது என்ன என்று ஆராயவேண்டியஅவசியமில்லே. தினேத்துணேயாக இருக்கலாம் அல்லது பனேத்துணேயாகக்கூட இருக்கலாம் அதன் பயனே ஆராய்ந்து பார்க்கும்போது அது இந்த வையகத்தைக் காட்டிலும் வானகத்தைக் காட்டிலும் மிகப் பெரியது என்கின்ருர். இதனே,

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"—101.

என்ற குறள் கூறி விளக்குகின்ருர்.

அவன் உள்ளம் ஏன் வையகம் வானகம் ஆகிய இரண்டை இணைத்துக் கூறவேண்டும் என்று எண்ணுகின்றது. வையகம் என்று கூறும்போது நிலப்பரப்பு, கடற்பரப்பு ஆகிய இரண்டையும் உணர்த்துகின்றது. வானகம் என்கின்றபோது அவ்விரண்டிற்கும் மேலே கவிந்திருக்கின்ற ஆகாயம் எனும் வெட்ட வெளியை உணர்த்துகின்றது. ஆக இம்மூன்று பொருள்களுமே நீளத்தால் அகலத்தால் உயர்வால் மிகப் பெரியது. இதனினும் வேறு சான்று காட்டுதற்கு ஒப்புமையில்லாதது. அது போலவே செய்யாமற் செய்த உதவியும் அளவு கடந்த பெருமையுடையது என்பதனை விளக்க வையகம், வானகம் என்ற இரண்டைக் கூறி அதில் நிலம், கடல், ஆகாயம் என்ற மூன்றையும் உள்ளிணைத்துக் கூறியிருக்கின்றார்.

அடுத்து வருகின்ற உதவி ஒருவன் ஒருவனுக்குத் தக்க காலத்தில், செய்கின்ற காலத்தில் செய்யும் உதவியாகும். அதனுடைய பெருமையைப் பேசுகின்றபோது மிகச்சிறந்தது எனப் பேசினும் அது செய்யாமற் செய்த உதவிக்கு ஈடாவதில்லை. இவ்வுதவி வேண்டும்போதே செய்யப்படுவதாகையால் வேண்டாக் காலத்தும் செய்யப்படுவதாகிய உதவியினும் சிறிது குறைவுபட்டு அடுத்து நிற்கின்றது.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"—102.

என்று ஞாலத்தை அடக்கிக் கூறுகின்றார். ஈண்டும் ஞாலம் என்னும் சொல் கடலையும் நிலத்தையும் உள்ளடக்கி நிற்கிறது. ஆகவே "வையகம், வானகம்" என்ற இரண்டில் மூன்றடங்கிய கருத்தினும் "ஞாலம்" என்ற ஒன்றில் இரண்டடங்குவதால் முதலில் செய்த உதவியினும் இரண்டாவது சொன்ன உதவி சிறிதே தாழ்வுபடுவதால் அதனை அடுத்துக் கூறினர்.

அடுத்துப் பயன் கருதாது செய்யும் உதவியாகும். அது மூன்றாவதாகக் கூறப்படுகிறது. பயன் கருதாது செய்யும் உதவி மிகச் சிறந்ததெனினும் காலத்தில் செய்யும் உதவியினும் அது சற்றுக் குறைவுபட்டதே ஆகும். எனவேதான்,

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.—103

என்று கூறி "கடலில்" என்ற ஒன்றில் ஒன்றையே அடக்கினர். ஆகவே மூன்று குறள்களின் மூலமாக வள்ளுவப் பெருந்தகை இரண்டில் மூன்றையும், ஒன்றில் இரண்டையும், ஒன்றில் ஒன்றையும் வைத்துத் தன் திறத்தைப் புலப்படுத்தியிருக்கின்றார்.

காலத்தினால் செய்த நன்றியை இரண்டாவது பாடலாகக் கொண்டமைக்கு மற்றுமொரு காரணத்தையும் கூறலாம். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றாகக் கூறுவர். பொருளை,

முதற் பொருளுக்கு உரியவைகள் நிலமும், பொழுதும் என்று கூறுவர். ஆகவே அம்முதற் பொருள்களாகிய நிலத்தை உணர்த்துவதற்குச் "செய்யாமற் செய்த உதவி" என்ற பாடலையும் "பொழுது" என்ற காலத்தை உணர்த்துவதற்குக் "காலத்தினால் செய்த உதவி" என்ற பாடலையும் எடுத்துக்கொண்டு முதற் பொருள்களாகிய "நிலம் பொழுது" ஆகியவற்றினும் பெரிது வேறில்லை என்று உணர்த்த எண்ணியே அவ்வாறு வரிசைப்படுத்தியிருக்க வேண்டும் என்று எண்ண இடமேற்படுகிறது.

இவ்வாறு செய்ந்நன்றியறிதலை உணர்த்துகின்ற வள்ளுவப் பெருந்தகை செய்ந்நன்றி மறத்தல் கூடாது என்றும் அல்லவற்றை மறப்பது நன்றென்றும் கூறுவதோடு அமையாது இறுதியில் ஒப்பற்ற ஒரு குறளையும் எடுத்துப் புலப்படுத்தி செய்ந்நன்றி அறிதலின் மேன்மையைக் காட்டுகின்றார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"—110

என்பதே அக்குறள்.

எத்தகைய கொடிய தீமை புரிந்தார்க்கும் அத்தீமையில் இருந்து விடுபட வழிவகைகள் உண்டு. ஆனால் ஒருவன் ஒருவனுக்குச் செய்த உதவியை மறக்கின்ற நன்றியைக் கொன்ற செய்கையில் இருந்து விடுபட வழியே இல்லை.

கொடிய தீமையாவது அருள், அறம், வாய்மை முதலாகியவைகளைக் கைவிடுதலாம் என்ற கருத்தில் கூறுகின்றார்.

இதனுல் ஒருவன் ஒருவனுக்குச் செய்த உதவியை உளங்கொள்ள வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது.

மனிதன் எவ்வளவுதான் உயர்ந்த பண்புகள் உடையவனுக இருந்தாலும் அறிவுடையவனுக இருந்தாலும் சில சமயங்களில் அவனது நேர்மைப் பண்பு மங்கிவிடுவதுண்டு அதற்குக் காரணம் நட்பு, பகை, அறிமுகமின்மை போன்றவைகள் காரணமாக அமைவதுண்டு. மிக வேண்டியவனுக இருப்பானுகில் அவனுக்காக நேர்மை பிறழ்வதும் எதிரியாக இருப்பானுகில் இன்ருேடு தொலையட்டும் என்று எண்ணுவதும் அறிமுகம் இல்லாதவனுக இருப்பின் யாரோ நமக்கென்ன என்று பிறழ்வதும் ஆகிய நிலைமைகள் எவர் மனத்திலும் தோன்றுவது இயல்புதான். இயல்புதான் எனினும் நண்பர் மாட்டும், பகைவர் மாட்டும் ஒன்றுபோல் இருப்பதே சான்ருேர்க்குக் கடன் என்று வள்ளுவப் பெருந்தகை உரைக்கின்ருர்.

யார் செய்தாலும் தீமை தீமைதானே? நண்பர் செய்தார் என்பதற்காக அத்தீமை அதன் குணத்தில் இருந்து விடுபட்டு நிற்கப்போவதில்லை. பகைவர் செய்தார் என்பதற்காக அதன் குணம் அதிகமாக வெளிப்படப் போவதும் இல்லை. எங்ஙனம் இருந்தாலும் தீமையைக் கண்டிக்க வேண்டும். சான்ருேர்களின் கடமையே அதுதான். சான்ருேர்கள் என்ருல் யார்? சால்புடையவர்களே சான்ருேர்கள் எனப்படுவார்கள். சால்பு என்பதற்கு வள்ளுவப் பெருந்தகை என்ன விளக்கம் தருகின்ருர்? அதைத் தெரிந்தால் அல்லவா சான்ருேர்களின் பெருமையை உணர முடியும்? 'சான்ருண்மை' என்ருேர் அதிகாரம் வகுக்கின்ருர். அதில்,

"அன்புநாண் ஒப்புரவு கண்ணேட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்"—983

என்று சால்புக்கு விளக்கம் தருகின்ருர். சால்புடைமையை விளக்க ஐந்து தூண்களை நிறுத்திக் காட்டுகின்ருர் வள்ளுவர். ஐந்தில் எது ஒன்று குறைந்தாலும் 'சான்ருண்மை' என்னும் மாளிகை சரிந்துவிடும் என்று கூறுகின்ருர். அன்பு என்பது என்ன? வேண்டியோர், வேண்டாதோர் என்றின்றி யாவர் மட்டும் ஏற்படும் பாச உணர்ச்சி. நாண் என்பது தீமை கண்டுழி

அது கண்டு வெட்குவதோர் மன உணர்ச்சி. ஒப்புரவு என்பது உலகவுயிர்கள் அனைத்திடத்தும் பழகுவதோர் பரிவுணர்ச்சி. கண்ணோட்டம் என்பது தீமை புரிந்தார் மாட்டும் அஃதாய்ந்து அதற்குத்தக இரங்குமோர் நற்பண்பு. வாய்மை என்பது எக் காலத்தும், எவ்விடத்தும் உண்மை கூறுவதோர் உள்ள வுறுதி என்று விளக்கம் கூறலாம்.

சான்றாண்மைக்கு இத்தகைய விளக்கம் உண்டேல் சான்றோர்களும் அதன் வழி இயங்குவது மரபுதானே? அதனால் அவர்கள் நடுவு நிலைமையில் இருந்து பிறழ்வதில்லை. இதனையே வள்ளுவப் பெருந்தகை,

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி."

என்று மிக அழகிய உவமையால் விளக்கியிருக்கின்றார். சமன் செய்து சீர்தூக்கும் கோலாகிய தராசினை அறியாத பாமரனும் இல்லை. அவனும் கடையில் பொருள்களை வாங்கும்போது அதன் முள் ஒரு பக்கம் சாய்ந்து இருதட்டும் முன்னும் பின்னும் ஏற்றத் தாழ்வாக இருக்குமானால் என்னப்பா நிறுக்கின்றாய்? சரியாக நிறு. ஏமாற்றாதே என்று எச்சரிக்கை செய்வதைக் காண்கின் றோம். எனவே பாமர மகனும் ஏமாறாதவாறு தராசின் முள் அவனுக்கு உண்மையை உணர்த்துகின்றது. இப்படி யாவரும் அறிந்த தராசினை வள்ளுவப்பெருந்தகை தன்னுடைய குறளுக்கு உவமையாக எடுத்தாண்டது எவ்வளவு பொருத்தம்? சான்றோர் களும் அம்முள்ளினைப் போன்றவர்களே. நட்பு பகையென்றெல் லாம் நடுவு நிலைமையிலிருந்து விலகுவதில்லை. இப்படி யாவரும் அறிந்த ஒரு பொருளினை எடுத்துக்கொண்டு மேவரும் கருத்தைச் சொன்ன பெருமை திருவள்ளுவனார்க்கே உரியது.

எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னெஞ்சறியப் பொய்த்து நடுவு நிலையிலிருந்து விலகுதல் கூடாது. கேடும் பெருக்கமும் ஒவ்வொருவனுக்கும் இயல்பு. அக்காலங்களில் எல்லாம் மனம் நடுவு நிலைமையில் இருந்து பிறழத் தூண்டும். அதையெல்லாம் ஒருவன் அடக்கி ஆள்வான் எனில் அதுவே அவனுக்குத் தலைசிறந்த அணியாகும். நடுவு நிலைமையில் இருந்து

ஒருவன் பிறழ்ந்தால் அவன் உடன் கெடுவதும் உண்டு. நின்று கெடுவதும் உண்டு.

பெரும்பாலும் இன்று நடுவு நிலைமை எங்கே பிறழ்கின்றது. பிறழ வாய்ப்பேற்படுகின்றது என்று வள்ளுவர் ஆராய்கின்றார். ஒன்று நீதிமன்றத்தில்; மற்றது வாணிபத்தில் என்று உணருகின்றார். எனவே இறுதிக்குறளில்வாணிகரைப்பார்த்துப் பேசுகின்றார்.

வாணிபம் செவ்வையுற நடைபெற வேண்டும் என்றால் வாணிகத்தில் பொய்யும் புரட்டும் ஏமாற்றும் இருத்தல் கூடாது.

அந்தோ! இன்று வாணிகத்தில்தான் அனைத்து வகையான ஏமாற்றுக்களும் இடம் பெற்றுள்ளன. எங்கும் எதிலும் கலப்படம் என்னும் நிலை. எதில் எதனைக் கலப்பது என்று வரையறையே இல்லாது போய்க்கொண்டிருக்கின்றது. இத்தகைய நிலை ஏற்படும் என்றுதான் என்னவோ வள்ளுவப் பெருந்தகை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயே

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்"—120

என்று கூறினர் போலும். வாணிகம் செய்யத் தொடங்கும் போதே வளமான மனதும், பொய்க்கும் புரட்டுக்கும் அடிமைப் பட்டுவிடும் போலும். அதை உணர்ந்துதான் பட்டினப்பாலை என்ற நூலும்கூட வாணிகரின் இயல்பினைக் கூறுகின்றபோது "கொள்வது மிகைபடாது; கொடுப்பதும் குறைபடாது" ஒப்பநாடிச் செய்தல் வேண்டும் என்று வலியுறுத்தியதுபோலும். அடே! அப்பா! எவ்வளவு பெரிய பேருண்மை. பிறர் பொருளையும் தம்முடைய பொருள்போல் பேணுதல் வேண்டும். தம்முடைய பொருளை எவ்வாறு கட்டிக் காக்கின்றாரோ, குறைவுபடாது பார்த்துக்கொள்கின்றாரோ அதுபோலவே பிறர் பொருளையும் எண்ணி வாங்கும் பொருளுக்குத் தக்க பண்டத்தை வாங்குவோருக்கு வழங்கவேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்.

சங்கச் செய்திகள் :

மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை.

உறுப்பினர் பேரவைக் கூட்டம்

மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர் பேரவைக்கூட்டம் (General Body Meeting) திருவள்ளுவர் ஆண்டு 2002, ஆனித் திங்கள் 21-ஆம் நாள் (5-7-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி யளவில், சங்கக் கட்டிடத்தில் வழக்கறிஞர் திரு. ஆர். செல்லத் தேவர், பி, ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அவ்வமயம் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்களாக (நிர்வாக சபை யார்)க் கீழ்க் கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

1. சங்கத்தின் நிலைத்த தலைவர் (Life President)

மாட்சிமை தங்கிய இராமநாதபுரத்தரசர்
திரு. ஆர். எஸ். இராமநாத சேதுபதி அவர்கள்.

2. துணைத்தலைவர் :

திரு. ஆர். செல்லத்தேவர், பி. ஏ., பி. எல்., அவர்கள்.

3. பொதுச்செயலாளர் : (Hony. Secretary)

திரு. வே. அ. வேலுச்சாமி, பி. இ., அவர்கள்.

4. செயலர் : (Hony. Secretary)

திரு. டி. பி. எம். பெரியசாமி அவர்கள்.

ஆட்சிக்குழு உறுப்பினர்கள் :

5. திருவாளர். எம். சங்கரபாண்டியன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
6. ,, எம். தனுக்கோடிபாண்டியன், பி.ஏ., பி எல்., அவர்கள்
7. ,, பி. மலைச்சாமி, பி.ஏ., எம்.எல்.ஏ. அவர்கள்.

8. ,, வி. தங்கப்பாண்டியன், பி. ஏ., பி. டி., எம். எல். சி., அவர்கள்
9. ,, டி. ஏ. தெய்வசிகாமணி, பி. ஏ., பி. எல்., அவர்கள்
10. ,, கே. கந்தசாமி, பி. ஏ., பி. எல்., அவர்கள்
11. ,, ஆ. ஆண்டியப்பன் அவர்கள்
12. ,, வ. நாகமணி அவர்கள்

பின்னர்க் கீழ்க்கண்ட தீர்மானங்கள் முழுமனதுடன் நிறைவேற்றப் பெற்றன.

1. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் நோக்கம் 2. பகுதி 1-இல் குறிப்பிட்டுள்ளபடி தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் பாடுபடாமல் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இடையூறாக நின்று செயலாற்றி வந்த பழைய செயற்குழு, பொதுக்குழுவால் அறவே கலைக்கப்பட்டு இருக்கிறது.

2. தமிழ்ச் சங்கம் நிறுவிய வள்ளல் பாண்டித்துரைத் தேவருக்குப் பின்னர், தலைவர்களாக இருந்து வந்த முகவைச் சேதுபதி மன்னர் வழியில் இன்றைய மாண்புமிகு, உயர்திரு. ஆர். எஸ். இராமநாத சேதுபதி அவர்களை நிரந்தரத் தலைவராகவும், இணைப்பில் குறிப்பிட்ட நபர்களுடன் கூடிய செயற்குழுவும் பொதுக்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

3. இதுவரை தமிழ்ச் சங்கம் நடத்தி வந்த புலவர் கல்லூரியும், கலைக்கல்லூரி (ஆண்கள் 75 சதவிகிதமும், பெண்கள் 25 சத விகிதமும்) பொதுக் கல்லூரியாகவும் தற்போதுள்ள முதல்வர் கண்காணிப்பின் கீழ்த் தொடர்ந்து செயலாற்றப் பொதுச் செயலாளர் ஆவன செய்யவேண்டியது.

4. தற்போதுள்ள முதல்வர் தமிழ்ச் சங்க அலுவல்களையும், புலவர் கல்லூரியையும் கலைக் கல்லூரியையும் தொடர்ந்து நிர்வகித்து வரவேண்டியது. ஆனாலும் அனைத்து அதிகாரங்களும் பொதுச் செயலாளருக்கு உரியது. இதுவரை பேங்கு ஸ்தாபனங்களிலுள்ள தலைவர் தமிழ்ச் சங்கம் என்ற இடத்தில் கையொப்பமிடப் பொதுச்செயலாளருக்கு அனுமதி இப்பொதுக் குழு அளிக்கிறது. தேவையானால் அவைகளைப் "பொதுச் செய

லாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்'' என்று மாற்றிக்கொள்ளவும் இப்பொதுக்குழு அனுமதிக்கிறது.

5. தமிழ் அன்னையை அரியாசனத்தில் அமர்த்தித் தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகெங்கும் உணர்த்திப் பெரும்புகழ் ஈட்டி நல்லாட்சி நடாத்திவரும் இன்றைய தமிழக அரசு, இந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தை ஏற்று விரிவாக்க முன்வரும் பட்சத்தில் பொதுச் செயலாளர் ஒரு மனதுடன் ஒப்புதல் அளித்து ஒப்படைக்கவும் என்றும் இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

6. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கௌரவச் செயலாளர்கள் தான் பணியாற்றவேண்டுமென்றவிதிமுறை இருப்பதால், ஊதியம் பெறும் சேயலாளர் பதவியில் ஒருவரை முந்திய செயற்குழு நியமித்தது தவறு எனவும், ஆகவே அவரை உடனடியாகப் பொறுப்பிலிருந்து நீக்கி விடுவதெனவும் பொதுக்குழு தீர்மானித்திருக்கிறது.

7. மதுரைத் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கல்லூரி ஆகியவற்றின் வங்கிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உரிய அதிகாரப் பொறுப்பு பொதுச் செயலாளர் திரு. வி. ஏ. வேலுச்சாமி, பி. இ., அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-ம்) ஆர். செல்லத்தேவர்,

(கூட்டத் தலைவர்)

செய்தி அறிக்கை

—*—

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பழைய செயற்குழு தமிழ்ச் சங்க நிர்வாக விதிமுறைகளுக்கும் நோக்கங்களுக்கும் புறம்பாகச் செயல்பட்டு, கடந்த 15 ஆண்டுகளாகச் சங்கம் நடாத்திவரும் செந்தமிழ்க் கல்லூரியை மூடிவிடுவது என்றும், கடந்த 3 ஆண்டுகளாக நடந்துவரும் கலைக் கல்லூரியைப் பெண்கள் கல்லூரியாக மாற்றிப் பொது மக்களுக்கும் தமிழ்ச்

சங்கத்திற்கும் தொடர்பு இல்லாதவாறு செய்வதென்றும் முடிவெடுத்தது.

தமிழகச் சட்டப் பேரவையில் இந்தச் செய்திகளைப்பற்றி விவாதித்த பொழுது தமிழ்ப் பற்றுள்ள யாவருக்கும் பெரும் வருத்தத்தையும், மன வேதனையையும் தருவதாக இருந்ததோடு, இந்த முடிவுகள் கேட்பதற்குப் பொருள் அற்றதாகவும், எண்ணு வோருக்குப் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் தருவதாக வும் அமைந்தது.

மேலும் சங்ககாலப் பாண்டிய மன்னர்கள் முதல், இடை, கடைச் சங்கங்கள் அமைத்துத் தமிழாராய்ந்த எங்கள் மாமதுரையிலே, நான்காவதாக 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' நிறுவிய சேது மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் எழுதிவைத்துள்ள அடிப்படை நோக்கத்திற்கு முற்றி லும் விரோதமாக அமைந்திருந்ததால், தமிழ்ச் சங்கப் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் நிர்வாக சட்டதிட்டங்களின்படி உடனடியாகக் கூடவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

5-7-71 திங்கட்கிழமை காலை 10 மணி அளவில், பொதுக் குழு கூடிப் பழைய செயற்குழுவை அறவே நீக்கிவிட்டுப் புதிய தலைவரையும் செயற் குழுவையும் தேர்ந்தெடுத்தது. முன்னர்க் காட்டப்பட்டுள்ள தீர்மானங்களையும் நிறைவேற்றியது. பொதுக்குழு, பொருளாதார வசதிகளைப் பற்றிக் காரசாரமாக விவாதித்தபோது, கீழ்க்கண்ட கருத்துக்கள் தெளிவாகப் புலப் பட்டன. "தமிழுக்காகவே எங்கள் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும்" என்ற கொள்கையுடன் சேவை செய்து வரும் தமி ழக அரசிடம், ஏற்கனவே உறுதிகூறியுள்ளவாறு சிறப்புப் பொரு ளாதார உதவியைக் கோருவது எனவும், அது கிடைக்காவிட் டால் பிச்சை எடுத்தாவது தமிழ்ச் சங்கத்தையும், தமிழ் இலக்கி யப்பணிகளைச் செவ்வனே செய்துவரும் தமிழ்க் கல்லூரியையும் தொடர்ந்து நடத்தவேண்டும் என்றும் பேசப்பட்டன.

மதுரை-1.
29—7—71.

வே. அ. வேலுச்சாமி,
பொதுச் செயலர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்

புலவர் தேர்வுகள்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திவந்த பிரவேசம், பால பண்டிதம், பண்டிதம் என்ற தேர்வுகளைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களோடு கூடிய நுழைவுத் தேர்வு, இளம்புலவர் தேர்வு, புலவர் தேர்வு, என்னும் தனித் தமிழ்த் தேர்வுகளாக நடத்தி, அவற்றில் தேர்ச்சி பெறுபவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்குகிறது. மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் தேர்வில் தேர்ச்சி பெற்றோர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரியத் தகுதியுடையோர் என அரசு அறிவித்துள்ளது.

I. நுழைவுத் தேர்வு (பிரவேசம்)

இது மதுரைப் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வு (Vidwan Entrance Examination of the University of Madurai)போன்றது. 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் இத்தேர்வு எழுதலாம். அவர்கள் குறைந்த அளவு E. S. L. C. தேர்வு அல்லது 8-வது வகுப்புத் (VIII Std.) தேறியிருக்க வேண்டும்.

II. இளம்புலவர் (பாலபண்டிதம்)

இது நுழைவுத் தேர்வுக்கு அடுத்தது. வித்துவான் முதனிலைத் (Preliminary) தேர்வு போன்றது.

சங்க நுழைவுத் தேர்வு, சென்னை, மதுரை. அண்ணாமலைப் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வுகள், S. S. L. C. (Eligible) ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றில் தேறியவர் மட்டும் இரண்டாண்டுகள் கழித்தே சங்க இளம்புலவர் தேர்வு எழுதலாம்.

III. புலவர் தேர்வு (பண்டிதம்)

இஃது இளம்புலவர் தேர்வுக்கு அடுத்தது. வித்துவான் இறுதிநிலை (Vidwan Final) போன்றது.

சங்க இளம்புலவர் தேர்வு, சென்னை, மதுரை, அண்ணாமலைப்

பல்கலைக் கழக வித்துவான் முதனிலை, புலவர் முதனிலை ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றில் தேறியபின் இரண்டாண்டுகள் கழிந்த பின்னரே புலவர் தேர்வு எழுதலாம்.

அரசினர் ஒப்புதல் பெற்ற பள்ளியில் ஆசிரியராக வேலை பார்ப்பவர்கள் மட்டும் நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெற்ற மறு ஆண்டே இளம் புலவர் தேர்வு எழுதலாம்; இளம்புலவர் தேர்வு எழுதி வெற்றி பெற்ற மறு ஆண்டே புலவர் தேர்வு எழுதலாம். இரண்டாண்டுகள் இடைவெளி இருக்கவேண்டும் என்ற விதிமுறை இவர்களுக்குக் கிடையாது. ஆனால், இவர்கள் விதிவிலக்குக் கட்டணம் (Exemption Fees) ரூ. 10/- 15—9—71-க்குள் அனுப்பிச் சங்கத்திலிருந்து விதிவிலக்கு ஆணை பெறவேண்டும்.

தேர்வுக்குரிய பாடத் திட்டங்களுக்குத் தனிப் பட்டியலைப் பார்க்கவும்.

தேர்வுப்பற்றிய எல்லாச் செய்திகளிலும் சங்கத்தின் முடிவே இறுதியானது. சங்க வெளியீடான செந்தமிழில் வெளியிடப்பெறும் முடிவுகளே இறுதியான முடிவுகளாகும். நுழைவுத் தேர்வு, இளம் புலவர் தேர்வு, புலவர் தேர்வுகளில் கலந்து கொள்பவர்கள் 31—8—1971-க்குள் ரூ. 5 அனுப்பித் தங்கள் பெயரை வீட்டு முகவரியுடன் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தேர்வு நடக்குங் காலம்.

தேர்வு மார்ச்சு, ஏப்ரல் திங்கள்களில் ஒருவாரம் நடைபெறும்.

நுழைவுத் தேர்வு :-

1) **முதல் தாள்:** செய்யுள், உரைநடை நூல்கள்.

2) **இரண்டாம் தாள்:** துணைப்பாடங்கள்.

3) **மூன்றும் தாள்:** சிறப்புத்தமிழ், இலக்கணம்.

இளம்புலவர் தேர்வு :-

(1) இலக்கியம் I. (2) இலக்கியம் II. (3) தென்னிந்திய வரலாறு. (4) இலக்கணம் I. (5) இலக்கணம் II. (6) கட்டுரை.

புலவர் தேர்வு :-

(1) இலக்கியம் I. (2) இலக்கியம் II. (3) கல்வெட்டு.
(4) இலக்கணம் I. (5) இலக்கணம் II. (6) மொழி இலக்கிய வரலாறு.

தேர்வு நடைபெறும் ஊர்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தேர்வுக் கட்டணம்.

1. நுழைவுத் தேர்வு ரூ. 15—00.
2. இளம் புலவர் தேர்வு ரூ 25—00.
3. புலவர் தேர்வு ரூ. 30—00.

1-10-1971-க்குப் பிறகு ரூ. 2 அனுப்பினுல் விண்ணப்பத்தாள் அனுப்பப்படும்.

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் இவ்வாண்டு நவம்பர் 1 முதல் 30-ஆம் நாளுக்குள் The General Secretary, Madurai Tamil Sangam என்ற பெயருக்கு Bank Draft மூலம் சங்க அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும்.

டிசம்பர் 7-க்குள் 1 ரூபாய் தண்டத்துடன் கட்டலாம். குறிப்பிட்ட நாளுக்குப் பின் அனுப்பும் கட்டணமும், விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கட்டணமும் விண்ணப்பமும் சங்க அலுவலக நேரங்களில் நேரிலும் சேர்ப்பிக்கலாம்.

தேர்வு முடிவு வெளியான 15 நாட்களுக்குப் பின் ரூ. 5/- அனுப்பிச், சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்,

மதிப்பெண் பெற விரும்புவோர் ரூ. 5/- அனுப்ப வேண்டும்.

தமிழ்ச் சங்கம்,
மதுரை-1.

வே. அ. வேலுச்சாமி,
பொதுச்செயலாளர்,

அஞ்சல் வழிப் பாடம் (Postal Tution)

அறிவிப்பு

ஆண்டுதோறும் மதுரைத் தமிழ்ச் சங்கம், நுழைவு, இளம்புலவர், புலவர் (பண்டிதம்) ஆகிய தேர்வுகளை நடத்து கின்றது. புலவர் தேர்வில் தேர்ச்சி பெற்றூர், உயர்நிலைப் பள்ளி களில் தமிழாசிரியராகப் பணிபுரியத் தகுதியுடையவரெனத் தமிழ்நாடு அரசாங்கக் கல்வி இலாகா அறிவித்துள்ளது. (M. No. 93226/E2/66-I, நாள் 29—9—66). இத்தேர்வுக்கெனத் தனியார் பலர், கல்லூரிகளைப் பல ஊர்களில் நடத்தி வருகின்ற னர். பெரும்பாலோர் அக்கல்லூரிகளில் சேர்ந்து முழுநேரம் படிக்க இயலாது இருக்கின்றனர். குறிப்பாக ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டவர்களும், மற்றைய அலுவலகங்களில் பணியாற்றுபவர் களும் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க இயலாது. அத்தகையோர் களுக்கு, அஞ்சல் வழி மூலம் பாடம் பயிற்றுவித்தல் மிகவும் உதவியாக இருக்குமென்று எண்ணி, சென்ற மூன்று ஆண்டு களாக அஞ்சல் வழிப் பாடம் தமிழ்ச் சங்கமே நடத்தி வருகின் றது. சென்ற மூன்று ஆண்டுகள் பெற்ற அனுபவங்களைக் கொண்டு பயன் அடைந்த மாணவர்களின் எண்ணிக்கையைக் கண்டும், இவ்வாண்டு, பாடங்களை விரிவான முறையிலும், மேலும் பயனுள்ள வகையிலும் அஞ்சல்வழியிற் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்துள்ளோம்

மேலும் பெரும்பாலும் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகப் புலவர் பாடத்திட்டங்களை ஒட்டியே சங்கப் புலவர்தேர்வு களுக்குரிய பாடத்திட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே இப்பயிற்சி சென்னை, மதுரைப் பல்கலைக்கழகத் தேர்வுகள் எழுதுவோர்க்கும் துணையாக இருக்கும். அஞ்சற்பாட விண்ணப் பத்தாளிற்கு ரூ 3 அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தேர்வு எழுதுவதற்கான தகுதிகள் :-

1. நுழைவுத் தேர்வு.

E. S. L. C. அல்லது VIII Standard தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 16 வயது முடிவு பெற்றிருக்கவேண்டும்.

2 இளம்புலவர் தேர்வு.

நுழைவுத்தேர்வு அல்லது S. S. L. C (Eligible) தேர்ச்சி பெற்று இரண்டாண்டுகள் முடிந்திருக்கவேண்டும்.

3. புலவர் தேர்வு.

இளம்புலவர் தேர்ச்சிபெற்று, இரண்டாண்டுகள் முடிந்திருக்கவேண்டும்.

(அரசினர் ஒப்புதல்பெற்ற பள்ளியில் ஆசிரியராக வேலை பார்ப்பவர்கள் நுழைவுத் தேர்வு எழுதி வெற்றிபெற்ற மறு ஆண்டே இளம்புலவர் தேர்வு எழுதலாம்; இளம்புலவர் தேர்வு எழுதி வெற்றிபெற்ற மறு ஆண்டே புலவர் தேர்வு எழுதலாம். இரண்டாண்டுகள் இடைவெளி இருக்கவேண்டும் என்ற விதி முறை இவர்களுக்குக் கிடையாது.)

பயிற்சி முறை:-

1. முதலில் பாடத்திட்டத்தில் குறிப்பிட்டபடி, தேர்வு வினாத்தாள், முறைப்படி இலக்கியம் 1–2, இலக்கணம் 1–2, வரலாறு, கட்டுரை என்று பகுதி பகுயாக வினாக்கள் அனுப்பப்படும்.

2. பயிற்சிகளில் கலந்துகொள்வோர் ஒவ்வொருவரும் அவ்வினாக்களுக்குரிய விடைகளை எழுதி 7 நாட்களுக்குள் அனுப்பி விடவேண்டும்.

3. அவ்வாறு அனுப்பப்படும் விடைகள், தக்க ஆசிரியர்களால் திருத்தப்பட்டுத் திரும்ப அனுப்பப்படும். அத்துடன் சிறந்த பேராசிரியர்களால் ஆயத்தஞ்செய்யப்பட்ட சங்க விடைக் குறிப்பும் அனுப்பப்படும்.

4. பயிற்சிகளில் கலந்துகொள்பவர்கள், அவரவர் முகவரிகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதவேண்டும். முகவரி மாற்றம் ஏற்பட்டால், உடன் தெரிவிக்கவேண்டும். அஞ்சல் தவறிவிடின் அதற்குச் சங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்ளாது.

1971–72-இல் நடைபெறும் அஞ்சல்வழிப் பாடங்களின் விவரம்.

1. நுழைவுத் தேர்வு.

இதில் சேருபவர்கள் 1972-ஆம் ஆண்டு நுழைவுத் தேர்வு எழுதலாம். அஞ்சல் வழிப் பாடம் ஓராண்டுப் பயிற்சிக் கட்டணம் ரூ. 60.

2. 1972-ஆம் ஆண்டு இளம்புலவர் தேர்வு எழுதுபவர்கள் :–

அ. இவர்களுக்கு 1969 முதல் அஞ்சல் வழிப்பாடங்கள்

நடைபெற்று வருகின்றன. 1970–71-இல் சேர்ந்து பயிற்சி பெற்றவர்கள் 1971–72 ஆண்டிற்கு உரிய ரூபாய் 80-ம் செலுத்தி அஞ்சல் வழிப் பாடத்தில் சேர்ந்துகொள்ள வேண்டும். இவர்களுக்கு 70–71-இல் அனுப்பப்பட்ட பாடங்களை நீக்கி எஞ்சியுள்ள பாடங்களுக்குப் பயிற்சித் தாள்கள் அனுப்பப்படும்.

ஆ. 1970–71-இல் சேராதவர்கள் இந்த ஆண்டு சேர்ந்து 1972-இல் தேர்வு எழுத் விரும்புவோர் 70–71-ஆம் ஆண்டு நடைபெற்ற பாடங்களுக்காக ரூபாய் 70 அனுப்பினால் சென்றஆண்டுப் பாடங்கள் அனைத்தும் ஒரே முறையில் அவர்களுக்கு அனுப்பப்படும். அவைகளை அவர்களே படித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் 71–72-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 80 செலுத்தவேண்டும். அவர்களுக்கு இந்த ஆண்டிற்குரிய பாடங்கள் அவ்வப்போது அனுப்பப்படும்.

3. 1973-இல் இளம்புலவர் தேர்வு எழுதுபவர்கள்

இந்த ஆண்டு 71–72-இல் பாதிப் பாடங்கள் அவ்வப்போது அனுப்பப்படும். அதற்குரிய பயிற்சிக் கட்டணம் ரூ. 80.

(இவர்கள் அடுத்த ஆண்டுசேர்ந்து எஞ்சிய பாடங்களில் பயிற்சி பெறவேண்டும்.)

4. 1972-இல் புலவர் தேர்வு எழுதுபவர்கள்:-

அ. இவர்களுக்கு 1970 முதல் அஞ்சல் வழிப் பாடங்கள் நடைபெற்று வருகின்றன. 70–71-இல் சேர்ந்து பயிற்சி பெற்றவர்கள் 1971–72-ஆம் ஆண்டிற்குரிய ரூ. 100-ம் செலுத்தி அஞ்சல் வழிப் பாடத்தில் சேர்ந்துகொள்ளவேண்டும். இவர்களுக்கு 70–71-இல் அனுப்பப்பட்ட பாடங்களை நீக்கி எஞ்சியுள்ள பாடங்களுக்குப் பயிற்சித் தாள்கள் அனுப்பப்படும்.

ஆ. 1970–71-இல் சேராதவர்கள் இந்த ஆண்டு சேர்ந்து 1972-இல் தேர்வு எழுத விரும்புவோர் 70–71-ஆம் ஆண்டு நடைபெற்ற பாடங்களுக்காக ரூ. 70 அனுப்பினால், சென்ற ஆண்டுப் பாடங்கள் அனைத்தும் ஒரே முறையில் அவர்களுக்கு அனுப்பப்படும். அவைகளை அவர்களே படித்துக்கொள்ளவேண்டும். அத்துடன் 71–72-ஆம் ஆண்டிற்கு ரூ. 100 செலுத்தவேண்டும். அவர்களுக்கு இந்த ஆண்டிற்குரிய பாடங்கள் அவ்வப்போது அனுப்பப்படும்.

5. 1973-இல் புலவர் தேர்வு எழுதுபவர்கள் :–

இவர்களுக்கு இந்தஆண்டு 71–72-இல் பாதிப் பாடங்கள்

அவ்வப்போது அனுப்பப்படும். அதற்குரிய பயிற்சிக் கட்டணம் ரூ. 100.

(இவர்கள் அடுத்த ஆண்டு சேர்ந்து எஞ்சியபாடங்களில் பயிற்சி பெறவேண்டும்.)

6. இம்முறையில் தேர்வுகட்குரிய பாடங்கள் அனைத்தும் ஜூலைத் திங்கள் 30-ஆம் நாள் தொடங்கும். பயிற்சிக் கட்டணங்கள் செலுத்தும் முறை :-

நுழைவு :-

ஒரே முறையில் 60/-
இரு முறையில் 35/- 35/-
(ஆகஸ்ட் 5, அக்டோபர் 10)

இளம்புலவர் :-

ஒரே முறையில் 60/- 80/-
இரு முறையில் 45/- 45/-

புலவர் :-

ஒரே முறையில் 100/-
இரு முறையில் 55/- 55/-
(ஆகஸ்ட் 5, அக்டோபர் 10)

பணவிடை (M. O.) மூலம் அனுப்பி இரசீதை விண்ணப்பத்துடன் இணைத்து 1971 ஆகஸ்ட்டு 5-ம் நாளுக்குள் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி :-

வே. அ. வேலுச்சாமி,
பொதுச்செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அஞ்சற்பெட்டி எண். 215, மதுரை-1.

குறிப்பு:- நுழைவு, இளம்புலவர், புலவர் தேர்வுகளில் கலந்து கொள்பவர்கள் தமிழ்ச் சங்கம் நடத்தும் அஞ்சற்பாடத்தில் சேர்ந்து பயின்றவர்களாக இருக்கவேண்டும். அல்லது தமிழ்ச்சங்கத்தில் பதிவுபெற்ற தனியார் கல்லூரிகளில் சேர்ந்து பயின்றவர்களாக இருத்தல் வேண்டும். மற்றவர்களுக்கு அனுமதி வழங்கப் படமாட்டாது,

மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அ. பெ. 215,
மதுரை-1.

வே. அ. வேலுச்சாமி,
பொதுச் செயலாளர்

புகழ் பூத்த வாழ்வு.

கலைஞர் பிறந்தார் :

உலகமாக்கவிஞர், தமிழகத்தின் தலைசிறந்த கலைஞர் என ஞாலமெல்லாம் வியந்து பாராட்டும் நமது கலைஞர் அவர்கள், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் பிறந்த திருவாரூரைச் சேர்ந்த திருக்குவளையில் 1924-ம் ஆண்டு சூன் திங்கள் 3-ம் நாள் செவ்வாய்க்கிழமை தோன்றினார்கள். தந்தை முத்துவேலருக்கும், அன்னை அஞ்சுகம்

அம்மையாருக்கும் இறைவன் "கருணை"யால் கிடைத்த "நிதி" ஆகையால் கலைஞர் அவர்களுக்குக் கருணாநிதி என்ற பெயர் சூட்டினார்கள்.

கலைஞர் பட்டம் :

பல்கலைச் கழகத்திற்குச் செல்லாமலே, பல கலைகளையும் பயின்ற பட்டதாரி நம் முதல்அமைச்சர். எழுத்து,பேச்சு,நாடகம், அரசியல் நுட்பம், அனுபவத் திறன் ஆகிய அனைத்துக் கலைகளிலும் வல்லவரான நமது முதலமைச்சர் அவர்களுக்குக் "கலைஞர்" எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்த பட்டம் சாலவும் பொருத்தமுடையதாகும்.

தியாகச் செம்மல் :

1938–ல் முதலமைச்சராயிருந்த இராசாசி அவர்கள் இந்தியைக் கட்டாயப் பாடமாக உயர்நிலைப் பள்ளிகளில் புகுத்தினர். அதனை எதிர்த்துத் தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் போராட்டக் களத்தில் குதித்தார்கள். அப்போது மாணவர் உலகில் இருந்த கலைஞர் அவர்கள் மாணவர் ஊர்வலம் ஒன்றைத் திருவாரூர் வீதிகளில் நடத்திக் காட்டினார்கள்.

1953–ல் நடந்த மும்முனைப் போராட்டத்தின்போது "டால்மியாபுரத்திற்குக் "கல்லக்குடி" என்ற கன்னித் தமிழ்ப் பெயர் சூட்டப் போராடினார், நமது கலைஞர் அவர்கள். பின்பு வெற்றி வாகை சூடிக் "கல்லக்குடி கொண்டான்" என்ற பட்டமும் பெற்றார்கள். நமது கலைஞர் அவர்கள் இவ்வாறு தியாகம் பல செய்து தியாகத் தழும்பேறிய தியாகச் செம்மல் ஆவார்கள்.

உயர் பண்பு :

உலகம் போற்றும் உத்தமர் காந்தி அடிகள் தம் தாய்மீது தணியா அன்புகொண்டிருந்தார். மறைந்த மாமேதை நமது பேரறிஞர் அண்ணா அவர்களும், முதலமைச்சர் பதவி ஏற்குமுன் தமது அன்னையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். நமது கலைஞரும் அன்னையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். நமது கலைஞரும் அன்னையின் வாழ்த்தைப் பெற்றே அறப் போராட்டங்களில் கலந்துகொண்டார்கள். அமைச்சர் ஆன போதும், முதலமைச்சராகப் பணியேற்றபோதும் தமது அன்னை

யின் கல்லறைக்குச் சென்று வணக்கம் தெரிவித்தார்கள். திரைப் படம் ஒன்றிற்குக் கிடைத்த பத்தாயிரம் ரூபாய்ப் பரிசினைத் தமதுஅன்னையின் பெயரில், திருவாரூரில் மருத்துவ மனை ஒன்று அமைத்து உதவினார்கள்

பெரும் பேரறிஞர் (டாக்டர்) :

சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் உழைத்து சேவை செய்யுங்கால் ஒருவர் பெற்ற பலதுறை நுட்ப அறிவினைப் பாராட்டிப் "பெரும் பேரறிஞர்" என்ற சிறந்த பட்டத்தினைப் பல்கலைக் கழகங்கள் பொது வாழ்வில் ஒளி விளக்காகத் திகழும் தலைவர்களுக்கு அளித்தல் உலகெங்கும் காணப்படும் ஒரு நல்ல மரபாகும். அம்மரபினைப் பின்பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நமது கலைஞர் அவர்களுக்கு டாக்டர் பட்டத்தினை அளித்தது.

உலகமாக்கவிஞர் :

"திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதி வாக்கிற்கிணங்க அமெரிக்க நாட்டு இலக்கிய மன்றத்தார் நமது கலைஞரின் கவிதை ஆற்றலைப் பாராட்டு முகத்தான் "உலகமாக்கவிஞர்" என்ற பட்டம் அளித்து மகிழ்ந்தது.

தமிழ்ச் சங்கப் பாராட்டு :

அவ்வாறு வெளிநாட்டாராலும் வாழ்த்திப் பாராட்டப் பெற்ற நமது கலைஞரை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிறப்புப் பட்டமளித்துப் பாராட்டுவதும், அதைத் தமிழகம் வரவேற்றுப் பாராட்டுவதும் வியப்பாமோ?

அத்தகைய "பெரும் பேரறிஞர்" என்ற சிறப்புப் பட்டம் பெற்ற தலைமைப் புகழாளரைத், தமிழ் அன்னையின் தலைமகனை, உலகமாக்கவிஞரைத் தன்னேரில்லாக் கலைஞர் அவர்களைத் தமிழ்ச் சங்கமும் மனமகிழ்ந்து பாராட்டுகிறது.

தலைமைக் காப்பாளர் :

தமிழ்ச் சங்கத்தின் தலைமைக் காப்பாளராக டாக்டர்

இராசேந்திரப் பிரசாது அவர்கள், டாக்டர் இராதாகிருட்டினன் அவர்கள், டாக்டர் சாகிர் உசேன் அவர்கள், சர்தார் உத்சல்சிங் அவர்கள் ஆகியோர் இதுவரை இருந்து வந்துள்ளனர்.

தன்னேரிலாத் தமிழ்ப் புலமையும்
தணியாத தமிழ்ப் பற்றுங் கொண்ட

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்ச் சங்கத்தின் தலைமைக் காப்பாளராக இருக்குமாறு வேண்டுவதில் தமிழ்ச் சங்கம் பெருமையும் பேருவகையும் கொள்கிறது.

வாழ்க கலைஞர் புகழ்! வளர்க அவர்கள் பணி!

இங்ஙனம்,

ஆட்சிக் குழுவினர்,

மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை.

மதுரை,
28—9—71.